



அறைவு 02 இயம் 32 March 22 - 28, 2014
உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்
# மலைமுரசு
MALAIMURASU
Registered as a newspaper in Sri Lanka
பக்கங்கள் : 16 விலை : 30.00 பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்







# அநீதிகளுக்குத் தீர்வு காணவே

## திருமலை மனிதப் புதைகுழி வெளிவந்துள்ளது

இந்த நாட்டில் தமிழர்களுக்கு இழைக்கபட்ட அநீதிகளுக்குத் தீர்வு கிட்டவேண்டிய நேரத்தில் இறைவன் திருக்கேதீஸ்வரத்திலும், திருகோணமலை அடிவாரத்திலும், எமது மக்களைக் கொன்றழித்த எச்சங்களை வெளிஉலகுக்குக் காட்ட வேண்டிய நேரத்தில் காட்டியுள்ளார் என கிழக்கு மாகாண சபையின் உறுப்பினரான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, தேற்றாத்தீவு வடபத்திரகாளி அம்மன் ஆலய வரலாற்றுச் சிறப்பு நூல் வெளியீட்டு விழா கடந்த திங்கட்கிழமை வடபத்திரகாளி அம்மன் ஆலய முன்றிலில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். ஜெனிவாவுக்குத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் சென்று நியாயம் கேட்கப் போனால் 13

## நூற்றுக் கணக்கானோர் சாட்சியம்



1990 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வடக்கு கிழக்கில் காணாமல் போனவர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஜனாதிபதி ஆணைக்குழு கடந்த 20ம் திகதி கிழக்கில் தனது விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

மட்டக்களப்பு, செங்கலடி, வாகரை பிரதேசங்களில் 20 ஆம் முதல் இன்றுவரை 56 கிராம சேவகர் பிரிவுகளில் பொதுமக்களிடம் இருந்து சாட்சியங்கள் பெறப்படும் என ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஏற்கனவே ஆணைக்குழுவிடம் எழுத்து மூலமான முறைப்பாடுகளைச் செய்துள்ளவர்களிடம் வாய்மொழி 13

# இயல்பு வாழ்வைப் பாதித்த திருகோணமலை ஹர்த்தால்




திருகோணமலையில் ஜெனீவாத் தீர்மானத்திற்கு எதிராக திடீரென முளைத்த சிங்கள தமிழ் முஸ்லிம் மக்கள் ஒன்றியம் என்ற அமைப்பால் மேற்கொள்ளப்பட்ட ஹர்த்தால் பொது மக்களின் இயல்பு வாழ்வை வெகுவாகப் பாதித்துள்ளது.

பயத்தின் காரணமாக வியாபார நிலையங்கள் அனைத்தும் பூட்டப்பட்டிருந்ததுடன் நகரப் பாடசாலைகளில் மாணவர் வருகையும் வீழ்ச்சியடைந்திருந்தது.

காலையில் நீண்டதூரப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்ட ஓரிரு பேருந்துகளைத் தவிர வேறு பேருந்துகள் இயங்கவில்லை. அவ்வாறு நீண்ட தூரப் போக்குவரத்தில் ஈடுபட்ட மூன்று பேருந்துகள் தாக்கப் பட்டதாகவும் அத்தாக்குதலை மேற்கொண்டவரைத் தேடிக் கைது செய்ய முடியாதிருப்பதாகவும் 13




## 7 மாதத் தாய்மையடைந்த பெண் கைது

பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் அடிப்படையில் திருகோணமலையைச் சேர்ந்த திருமதி தர்மிலா பாலகுருபரன் கைதாகியுள்ளார்.

ஏற்கனவே 4 வயதைக் கொண்ட குழந்தையொன்றின் தாயாரான இவர் தற்பொழுது 07 மாதத் தாய்மையுடன் உள்ளதாகத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இவரது கைது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் ஜெனீவாவில் குரலெழுப்பியுள்ளார்.

இவரது கணவர் அரசிற்கு எதிரான துண்டுப்பிரசுரங்களைத் தன்னகத்தே வைத்திருந்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு ஏற்கனவே கைதாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## இலங்கையில் மிக உயரமான துர்காதேவியின் சிலை

திருகோணமலையில் இராசமலை எனப் பெயர் கொண்ட மனையா வெளிப் பகுதியில் இலங்கையின் மிகப் பெரிய துர்காதேவியின் திருவுருவச் சிலை உருவாக்கப்பட்டுள்ளது.

அருள்மிகு திருச் சிற்றம்பலப் பிள்ளையார் ஸ்ரீ வல்லபை சக்தி துர்கா தேவஸ்தானத்தில் 27 அடி உயரமும் 18 கைகளுடனும் அமைந்த ஸ்ரீ அஸ்ட தசபுஜ மகாலஷ்மி துர்கா தேவியன் இச் சிலையானது இன்று காலை 9 மணிக்கு சோ. இரவிச் சந்திரக் குருக்களின் தலைமையில் திறந்து வைக்கப் படவுள்ளது. இச் சிலையினை திருகோணமலையின் சிற்பக் கலைஞர் ஸ்தபதி சங்கரலிங்கம் வேதநாயகம் அவர்கள் உருவாக்கியுள்ளார்கள்.

(படம்- அர்ஜூன்)



27 அடி உயரம் - 18 கரங்கள் 13



## அரசியல் சட்டத்தை மீறினார் அனந்தி

"தமிழ்ஈழம்" என்ற வார்த்தைப் பயன்பாடானது தனிநாட்டைக் குறிப்பதாக இருப்பதால் ஒரு மாகாண சபை அங்கத்தவர் என்ற வகையில் இலங்கையின் அரசியல் அமைப்புச் சட்டத்தை அனந்தி மீறியுள்ளார் என ஜெனீவாவிலுள்ள இலங்கையின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 18மதிகதி 2 தடவைகள் உரையாற்றிய அனந்தியின்..... 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
malaimurasu@hotmail.com 075-4252042

# திரைகடலும்..... திரவியமும்.....

இனவாதமானது பலவேறு வழிகளில் கிளைகளில் தனது தலையை உயர்தித் தாண்டவமாடுகின்ற தேசமாக இலங்கை மாறிவருகின்றது.

இலங்கையின் முக்கிய மூன்று தேசிய இனங்களும் தம்முள்ளே ஒற்றுமைப்பட்டு இலங்கையை மக்கள் வாழக் கூடிய நாடாக்க வேண்டும் என சிந்திப்பதாயும் இல்லை

மக்களில் இருந்து அரசியல் செய்வோர் பிரிந்துபோய் அவர்கள் ஆளும் வர்க்கமாகவும் மற்றோரெல்லாம் அடிமை வர்க்கமாகவும் மாற்றப்பட்டு விட்டார்கள். அதனால் அவ்வடிமை வர்க்கத்தை இலகுவாக ஆட்சி செய்வதற்கு இனத்துவ முரண்பாட்டை இயங்கு நிலையில் வைத்திருப்பதற்கு அரசு முயற்சிக்கின்றது.

அவ்வாறு இனத்துவ முரண்பாட்டை இயங்குநிலையில் வைத்திருக்க அரசு பல அமைப்புக்களை தன்னிச்சையாக இயங்க விட்டிருக்கின்றது. அவர்கள் தம்மை கோலவுடை தரிக்காத நாட்டின் காவல்காரர்கள் எனத தெளிவாகக் கூறியுள்ளமை அவர்களுக்கு இருக்கும் பக்கபலத்தையும், இனவாதச் சிந்தனையையும் தெளிவாக்க காட்டி நிற்கின்றது.

அவ்வாறான அமைப்புக்களில் முக்கியமான அமைப்பொன்று அண்மையில் அரசில் அங்கம் வகிக்கும், முக்கிய அமைச்சான நீதித்துறை அமைச்சரை, அவர் முஸ்லிம் இனத்தவர் என்பதால் "வெட்டிக் கூறுபோடுவோம்" என வெளிப்படையாக தெரிவித்துள்ளது.

அதனைத் தொடர்ந்து அவ்வமைப்புக்கும் முஸ்லிம் தலைமைகளுக்கும் இடையே காரசாரமான வார்த்தைப் பரிமாறல்கள் வெளிக்கிளம்பியுள்ளதை நிறுத்தத் தகுதியானவர்கள் நாடகம் பார்க்கத் தலைப்பட்டு விட்டனர்.

அதே வேளை நாட்டைக் கூறுபோடும் ஆயதப் பண்பாட்டை மீள உருவாக்க மற்றைய இனமான தமிழினம் மீண்டும் தயாராகி விட்டதாக குற்றஞ்சாட்டி களையெடுப்பை அரசு தொடங்கியுள்ளது.

நூற்றாண்டுகள் பழமையான கங்குவேலி அகத்தியர் தாபனத்தைப் புணர்நிர்மாணிப்பதில் வெளிப்படையான தடைகளைக் காவியுடை தரித்தவர்கள் செய்யமுயன்றுள்ளனர்.

நூற்றுண்டுகள் பழமையான புல்மோட்டை மயானத்தினைப் பாவிப்பதை தடை செய்துள்ளனர்.

இதே வேளை அரசியல் அதிகாரத்தைக் கொண்டு கல்முனையில் நூற்றாண்டுகள் பழமையான தெருவொன்றின் பெயரை மாற்ற முஸ்லிம் தலைமைகள் நடவடிக்கையை எடுத்துள்ளன.

இவ்வாறு எதிரும் புதிருமாக இலங்கையின் மூன்று தேசிய இனங்களும் தமக்கிடையே பகைமையை வளர்த்துக்கொள்ள முயற்சிப்பதையே நவீன அரசியலின் மூலோபாயமாகக் கருதுகின்றனர்.

மற்றைய இனத்தை அடக்கியாளுவதே தமக்குப் போதுமானது எனச் சிந்திக்கத் தலைப்பட்டுள்ள அரசியல் தலைமைகளால் மக்களும் அவ்வாறான உணர்வினை ஊட்டமாகப் பெறுகின்றனர்.

இவையாவற்றாலும் என்றுமே நிம்மதியான சூழலை இலங்கை மக்கள் அனுபவிக்கப் போவதில்லை. இனத்துவ முரண்பாடுகளின் உச்சம் அழிவும் பிரிவும் தான். இலங்கையில் இறந்துகொண்டிருப்பது உண்மையில் எது?

புரிந்துணர்வுடன் வாழத் தேவையான சனநாயகமும்; சட்டத்தின் ஆட்சியும் இறந்துகொண்டிருக்கும் இந்நாட்டில் யாரும் நிம்மதியாக வாழப் போவதில்லை



# மக்கள் நிம்மதியாக வாழ்கின்றனர்

கடந்த மூன்று தசாப்தங்களாக இடம்பெற்ற யுத்தத்தினால் இயல்பு நிலை பாதிக்கப்பட்டிருந்த மக்கள் மத்தியில் இன்று சுமுகமான நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் சந்தோசமாகவும், நிம்மதியாகவும் வாழ்ந்து வருகின்றார்கள் என கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத் பிரான்ஸ் நாட்டுதூதுவரிடம் இடம்பெற்ற சந்திப்பின் போது குறிப்பிட்டார்.

வடக்கு,கிழக்கு மாகாணத்திற்கான பயணம் ஒன்றினை மேற்கொண்டிருந்த பிரான்ஸிய தூதுவர் ஜீன் போல் மொன்சூ கடந்த வியாழக்கிழமை திருகோணமலை மாவட்டத்திற்கு பயணம் செய்து கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத் அவர்களை சந்தித்து கலந்துரையாடினார்.

இச்சந்திப்பு முதலமைச்சரின் அலுவலகத்தில் இடம்பெற்றது. இச்சந்திப்பின் போது முதலமைச்சரின் செயலாளர் அஸீஸ் மற்றும் கிழக்கு மாகாண முன்பள்ளி கல்விப் பணிப்பாளர் பொன். செல்வநாயகம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இதன் போதே முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

# யானைகளைத் தடுக்க மின்சார வேலி

திருகோணமலை மாவட்டத்தின் பன்குளம் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வேப்பங்குளம் பகுதியில் காட்டு யானைகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் அங்கு ஒன்றரை இலட்சம் ரூபா செலவில் பாதுகாப்பு வேலி நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இப்பாதுகாப்பு வேலிக்குரிய பெயர்ப்பலகையை பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே கடந்த ஞாயிற்றுக்கிழமை திரைநீக்கம் செய்தார்.

வனசீவராசிகள் மற்றும் இயற்கை வளங்களை பாதுகாக்கும் அரசசார்பற்ற நிறுவனமொன்றின் நிதியுதவியுடன் இப்பாதுகாப்பு வேலி நிர்மாணிக்கப்பட்டது.

# உம் வீதியைத் திருத்துங்கள் மக்கள் ஆர்ப்பாட்டம்






லிங்கநகரில் உள்ள 25 வீதிகளில் 24 வீதிகள் திருத்தப்பட்டுவிட்ட நிலையில் எங்களது வீதி மட்டும் ஏன் திருத்தப்படவில்லை என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளதுடன் இவ்வீதியைத் திருத்தித் தரும்படிக் கோரி ஆர்ப்பாட்டத்திலும் இறங்கியுள்ளனர்.

இவ் ஆர்ப்பாட்டம் உப்புவெளி பிரதேசசபைக்கு முன்பாக நடைபெற்றுள்ளது. 2012ம் ஆண்டில் இருந்து பிரதேசசபைத் தலைவருக்குப் பலமுறை இவ்விடயத்தை தெரியப்படுத்தியும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என மக்கள் மலைமுரசிற்குத் தெரிவித்தனர்.

இதனையடுத்து இவ்விடயம் தொடர்பாக பிரதேசசபைத் தலைவரின் வாக்குறுதியை அடுத்து மக்கள் அவ்விடத்தை விட்டகன்றுள்ளனர். இந்த விடயம் தொடர்பில் அவரிடம் வினவியபோது பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிதிக்கு ஏற்ப எந்தெந்த வீதிகளை எந்தெந்த ஆண்டுகளில் திருத்துவது என்று திட்டமிட்டுள்ளோம். அதன்படி நிச்சயமாக இவ் வீதி 2015ல் திருத்தப்படும் என பிரதேசசபைத் தலைவர் தெரிவித்தார்.

# நரசிங்க வைரவர் விக்கிரகம் களவு

மட்டக்களப்பில் நரசிங்க வைரவர் ஆலயத்தின் விக்கிரகம் திருடப்பட்டமை தொடர்பில், அப்பிரதேச மக்களினால் பாராளுமன்ற



உறுப்பினர் அரியநேத்திரனிடம் முறையிடப்பட்டதையடுத்து, அவர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

கடந்த 18ம் திகதி 39 ஆம் கிராமம் 1ம் வட்டாரத்தில் (செல்வபுரம்) அமைந்துள்ள குறித்த ஆலயத்தின் விக்கிரகம் திருடப்பட்டது.


இந்நிலையில் அங்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர், ஆலயத்தை பார்வையிட்டதுடன், சம்பவம் தொடர்பாக போரதீவுப்பற்று பிரதேச செயலாளரிடம் தொடர்புகொண்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு பணித்ததுடன் காவல்துறையில் முறைப்பாடு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளார். குறித்த பிரதேசமானது மட்டு. அம்பாறை எல்லையில் உள்ள கிராமங்களில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

# பனங்காடு பாசுபதேஸ்வரர் திருவிழா


(என்.ஹரன்)

அக்கரைப்பற்று பனங்காடு அருள்மிகு மாதுமை உடனுறை ஸ்ரீ பாசுபதேசுவரர் தேவஸ்த்தான திருவிழா நிகழ்வில் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ லோகநாத குருக்கள் கொடித்தம்ப பூஜை செய்வதனையும், சுவாமி உள்வீதியுலா வருவதனையும் கலந்துகொண்ட பக்தர்களையும் படத்தில் காணலாம்.





# மாணவர் தலைவர்கள்



திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி ஆரம்ப பிரிவில் 20 பேர் மாணவர் தலைவர்களாக தெரிவு செய்யப் பட்டுள்ளனர். இவர்களுக்கான சின்னம் அணிவிக்கும் நிகழ்வு புதன்கிழமை 19.03.2014 காலை நடைபெற்றது. வலயக் கல்விப் பணிப்பாளர் ந.விஜேந்திரன் முதன்மை விருந்தினராகவும், இக்கல்லூரியின் முன்னாள் அதிபர்களான மா.இராசரெத்தினம், இ.புவனேந்திரன் ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொண்டு சின்னங்களை அணிவித்து வைத்தனர்.




அதிபர் செ.பத்மசீலனின் வழிகாட்டலில் ஆரம்பப்பிரிவு உப அதிபர் ந.சங்கரதாஸ் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தப்பட்ட ஜெனீவாப் பிரேரணையின் கலந்துரையாடல் உண்மையில் நடப்பது என்ன?

## நாடுகளும் அவற்றின் நிலைப்பாடுகளும்

ஜெனீவாப் பிரேரணையின் திருத்திய 2வது பதிப்பு ஸ்ரீலங்காவில் பொறுப்புக்கூறுதல், மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் ஆகியனவற்றை மேம்படுத்தல் என்ற தலைப்பில் கடந்த 18ம் திகதி கலந்துரையாடலுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அமெரிக்காவின் பிரதான அனுசரணையுடனும் மாசிடோனியா, மொன்டிநீக்ரோ, மொறீசியஸ் மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகியவற்றின் துணை ஆதரவுடன் இவ்விரண்டாவது பிரேரணை முன்வைக்கப்பட்டது. முதலாவதாக முன்வைக்கப்பட்ட பிரேரணையில் இராணுவமற்ற பிரதேசங்கள் என்ற வார்த்தைப் பிரயோகத்தை நீக்குமாறு இரஸ்யா கேட்டுக் கொண்டதற்கிணங்க அவ்வார்த்தைப் பிரயோகம் நீக்கப்பட்டு நிலப்பாவனையும் அதன் உரிமையும் என்ற பதம் சேர்க்கப்பட்ட பிரேரணையாக இரண்டாவது பிரேரணை உள்ளது.

எனினும் இவ்விரு வார்த்தைப் பிரயோகங்களையும் நீக்குமாறும் இரஸ்யா மீளவலியுறுத்துவதுடன் அவ்வார்த்தைப் பிரயோகங்கள் தொடர்பாகக் கருத்திற்கொள்ள வேண்டியுள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

இதனை எதிர்த்துள்ள சுவிட்சலாந்து "இராணுவமற்ற பிரதேசம்'' என்பது முக்கியமானது எனத் தெரிவித்துள்ளதுடன் வடமாகாணத்தில் இராணுவத்தை விலக்கிக்கொள்ளல் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மனித உரிமையாணையாளரின் அறிக்கையில் இருந்து தெரிந்துகொள்ள முடியும் எனவும் யுத்தப் பிரதேசங்களில் மீளமர்ந்துள்ள மக்கள் உட்பட சகலருக்கும் மனித உரிமைகளை வழங்க முன்வரும் வேளையில் வடக்கிலுள்ள இராணுவமயமாக்கலுக்கு எவ்வாறு விடைபகர்வது என்பது பற்றி இவ் ஆணைக்குழு பேசவேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

நோர்வேயோ "கடுந்தொனியில்" பிரேரணையானது முன்வைக்கப்படும் பட்சத்தில் தனது முழு ஆதரவையும் அதன்பால் வழங்கத் தயார் எனத் தெரிவித்திருந்தது.

புதிய வரைபின் 6வது பந்தியில் "இறையாண்மை, பிளவுறா அதிகார நிலப்பரப்பு மற்றும் பயங்கரவாதத்திற்கு எதிராகப் போரிடும் உரிமை ஆகியவற்றை மீளுறுதி செய்தல்" என்ற வசனம் இடப்பட வேண்டும் என பாகிஸ்தான் வலியுறுத்தியுள்ளதுடன் 8வது பந்தியில் "பிளவுறா நிலப்பரப்பு" எனற வாத்தைக்குப் பதிலாக "பிளவுறா அரசு" என்ற சொல் பிரயோகிக்கப்பட வேண்டும் எனவும் கோரியுள்ளது. அத்துடன் போருக்குப் பின்னரான ஸ்ரீலங்காவின் சூழலில் எய்தப்பட்டுள்ள அடைவு மட்டங்கள் தொடர்பான பாராட்டுக்களை அவ்வறிக்கையில் இலங்கை சார்பில் சேர்க்கப்பட வேண்டும் என்றும் பாகிஸ்தான் வலியுறுத்தியது..

அதன்பின்னர் தொடர்ந்த கலந்துரையாடலில் சில நாடுகள் முன்வைத்த கருத்துக்கள் இப் பிரேரணையைப் பலவீனப்படுத்தும் வகையில் அமைந்ததைக் காணமுடிந்தது.

முக்கியமாக பந்தி 11ன் முதல் வார்த்தையாக "ஒத்துழைப்பு" என்னும் வார்த்தையைச் சேர்ப்பதன் ஊடாக ஐநாவின் முயற்சிகளுக்கு இலங்கையின் ஒத்துழைப்பைப், பெற்றுக்கொள்ள வேண்டிய நிலையை இப் பிரேரணைக்கு ஏற்படுத்த வியட்னாம் முனைந்தது. அதே பந்தியில் "தடையற்ற கையாள்கை" என்ற பதத்தை நீக்கி "கட்டுப்பாடுகளற்ற கையாள்கை" என்னும் பதத்தைச் சேர்க்கக்கோரியது. அதனை வியட்னாம், தாய்லாந்து மற்றும் இந்தோனேசிய அரசுகள் ஆதரவளித்தன. அதேபோலவே இந்தோனேசியா "அறிக்கையிடப்பட்ட குற்றச்சாட்டுக்கள்" என்ற பதத்தை நீக்கி "சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள்" என்ற பதத்தைச் சேர்க்கும் படியும், "பாலியல் மற்றும் இனத்தை அடிப்படையாகக் கொண்ட வன்முறைகள்" என்ற பதங்கள் நீக்கப் பட வேண்டும் எனப் பாகிஸ்தான், சீனா, இரஸ்யா ஆகியன அழுத்தம் கொடுத்த வேளையில் அவ்வழுத்தத்திற்கு எதிராக கனடா, இத்தாலி, டென்மார்க், சுவிஸ்லாந்து ஆகியன குரல் கொடுத்தன.

ஒரு நாட்டின் மாகாணங்களை எவ்வாறு ஆட்சி செய்ய வேண்டும் என அந்நாடே தீர்மானிக்க வேண்டுமேயொழிய ஏனைய நாடுகளோ அல்லது மற்றொரு நாடோ அம்மாகாணங்கள் எவ்வாறு ஆட்சி செய்யப்பட வேண்டும் எனக் கூறக் கூடாது எனத் தெரிவித்துள்ள கியூபா அவ்வாறான அர்த்தத்தைக் கொண்ட 6வத பந்தியானது நீக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தது. அதனை வழிமொழிந்த பாகிஸ்த்தான் தனியே வடமாகாண சபையை மட்டும் கருத்தில் எடுக்கக் கூடாது என்னும் கருத்தை முன்வைத்தது.

எகிப்து இக்கலந்துரையாடலில் 13வது திருத்தச் சட்டம் என்பதைப் பேசாமல் இலங்கையின் அரசியல் அமைப்பு என்பதனைப்பற்றியே பேசவேண்டும் எனத் தெரிவித்தது. சிலி "ஊக்கமளிப்பது" என்னும் வார்த்தைகளை நீக்கி "கேட்டுக்கொள்வது" என்னும் வாத்தைகள் சேர்க்கப்படவேண்டும் எனக் கேட்டுக்கொண்டது.

அதனைக் கண்ணுற்ற கனடா இலங்கையின் அரசியல் சட்டப்படி அதிகாரப் பரவலாக்கத்திற்கென உருவாக்கப்பட்ட திருத்தச் சட்டமே 13 எனத் தெரிவித்ததுடன் இச்சட்டத்தின் ஊடாகவே அதியுயர்ந்த அதிகாரப் பரவலாக்கலை நல்லியக்க ஆணைக்குழு மொழிந்துள்ளதையும் தெரியப்படுத்தி 13வது திருத்தச் சட்டம் எனும் பதம் விலக்கப்படக் கூடாது எனப் போரிட்டது.

இக்கலந்துரையாடலில் குதித்த துணை அனுசரணையாளர்களுள் ஒருவரான மாசிடோனியா 1994ம் ஆண்டில் ஐநாவின் பொதுச்சபை நியதியில் பந்தி B யில் குறிப்பிட்டதற்கு அமைவாக மனித உரிமை ஆணயையாளர் விசாரணையொன்றை மேற்கொள்ளும் அதிகாரத்தைப் பெற்றுள்ளதால் அவ்வகையான விசாரணையொன்றை இலங்கையில் முன்னெடுக்க அழைக்க வேண்டும் எனக் கோரியது.

பிரான்ஸ், சுவீடன் ஆகியன இரண்டாவது பிரேரணை தொடர்பாகத் தமது திருப்தியை வெளியிட்டதுடன் அப் பிரேரணையானது நவிபிள்ளை அவர்களால் தயாரித்தளிக்கப்பட்ட அறிக்கைக்கு உடன்பட்டொழுகுவதாகவும் தெரிவித்தது.

ஐநாவின் விசாரணைக்கான காலத்தை திட்டமிட்டுக்கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்தது. அடுத்த துணை அனுசரனையாளர்களுள் ஒன்றான பிரித்தானியா ஏனைய நாடுகளுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட ஐநாவின் விசாரணைகள் தொடர்பாக விளக்கமளித்ததுடன் 1993ம் ஆண்டில் ஜியோர்ஜியா தனது நாட்டின் ஒரு பிரதேசம் எனக் கோரிய பகுதியில் நடைபெற்ற சட்டத்திற்குப் புறம்பான படுகொலைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் தொடர்பாகவும் முன்நிலைப்படுத்தியது. மேலும் ஆப்கான் மீது 1998லும், கொழும்பியாவில் 2002லும், 2004ல் டாபூரிலும், 2005ல் டோகோவிலும், 2009ல் கொண்டூராஸிலும், 2011ல் சிரியாவிலும், 2012ல் நேபாளத்திலும் விசாரணைகளை ஐ.நா முன்னெடுத்ததை பிரித்தானியா பட்டியலிட்டது. அக் கணத்தில் இடையிட்ட மொன்டிநீக்றோ முதற்கட்டமாக ஐநாவின் ஆணையாளர் அவர்கள் விசாரணைகளை மேற்கொண்டு சமர்ப்பித்த அறிக்கையில் இலங்கையின் அரசு உள்ளக விசாரணையொன்றைச் செவ்வனே செய்வதற்கு உள்ளார்ந்த மனக்கனவைக் கொண்டிருக்காமையினால் சர்வதேச விசாரணையொன்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியிருப்பதை நினைவூட்டியது. அதனை ஆமோதித்த மனித உரிமை' ஆணையாளர் உள்ளக விசாரணைகளுக்கு சாட்சியாளர்கள் தகவல்களைத் தரத் தயங்குவதாகவும் சர்வதேச விசாரணையென்றுக்கு அவர்கள் தகவல்களை வழங்க ஆர்வங் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

சர்வதேச விசாரணையின் தேவையை ஐரோப்பிய ஒன்றியம் அழுத்தம் திருத்தமாக வெளியிட்டது. ஆனால் மியன்மாரோ ஆணையாளரின் அறிக்கைக்கு பெற்றுக் கொள்ளபட்ட தகவல்கள் எவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்டன எனக் கேள்வியெழுப்பியதுடன் அத்தகவல்களில் பக்கச்சார்பானவை இருப்பதான தனது சந்தேகத்தை வெளியிட்டது. இதனைப் பற்றிக் கொண்ட இரஸ்யா சுயாதீன விசாரணையை நிகழ்த்தத்தக்க வல்லுனர்கள் யாவருளர் எனக் கேள்வியெழுப்பியதுடன் அவர்களுள் யாரால் விசாரணை நிகழ்த்தப்பட வேண்டும்? எனக் கேள்வியெழுப்பியது.

அதனைக் கண்ணுற்ற அமெரிக்கா, யாரால் எப்போது என்பதையெல்லாம் ஐக்கிய நாடுகள் சபை தீர்மானிக்கும் எனத் தெரிவித்தது. டென்மார்க் சுயவிசாரணை தொடர்பாக ஆதரவளிக்க ஆஸ்திரியா சர்வதேச விசாரணைக்கு ஆதரவளிக்கப் போவதாகத் தெரிவித்தது. இக் கணத்தில் தலையிட்ட கனடா இலங்கையில் நடவடிக்கைகள் சில எடுக்கப்படுவதாகத் தெரிவித்தாலும், நிலைமைகளில் முன்னேற்றம் எதுவும் காணப்படவில்லை எனத் தெரிவித்ததுடன் அதனை நிரூபிப்பதற்கான சனல் 4ன் விவரணப்படங்கள் உட்பட பல சான்றுகள் இருப்பதாகத் தெரிவித்தது.

அவ்வேளையில் அமெரிக்கா நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் ஒன்றான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டிய காலப்பகுதியாக அவ்வாணைக்குழு தீர்மானித்த 2002 தொடக்கம் 2009 வரையான காலப்பகுதியைக் கொள்ள முடியும் எனத் தெரிவித்தது. அதனை நிராகரித்த சுவிஸ்லாந்து 2009ற்குப் பின்னர் தற்போது வரைக்குமான காலப்பகுதியும் கணக்கில் கொள்ளப்பட வேண்டும் எனக் கோரியது. கனடா விசாரணைக்கான காலக் கட்டுப்பாட்டை முற்றாக நிராகரித்தது. அத்துடன் விசாரணையானது பால்நிலை மற்றும் குடியியல் நிலை ஆகியவற்றையும் கருத்திற்கொள்ள வேண்டும் எனக் கோரியது.

சிலியும் ஆர்ஜன்டீனாவும் விசாரணைகளை முன்னெடுப்பவர்கள் சிறப்புத் தகுதிகளைக் கொண்டவர்களாக இருக்க வேண்டுமேயொழிய விசாரணைக்குப் பொருத்தமானவர்கள் என்ற மேம்போக்கான நபர்களாக இருக்கக்கூடாது எனத் தெரிவித்தன.

கலந்துரையாடலின் முடிவில் சமூக அமைப்புக்களிடம் அலோசனைகளைக் கோரியபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நா.உ சுமந்திரன் "இராணுவமற்ற பிரதேசம்" தொடர்பாக தனது குறிப்புக்களைப் பதிவுசெய்ததுடன் ருகி பெர்ணாண்டோ மற்றும் வண.பிரவீன் அடிகளாரின் கைதுகள் நாட்டின் நிலைமையை வெளிக்காட்டுவதாகத் தெரிவித்தார். மனித உரிமைச் செயற்பாட்டாளரான நிமல்கா பெர்ணாண்டோ 13வது திருத்தம் தொடர்பாகவும் யுத்தத்தால் அழிவடைந்த வடக்கில் அதன் தேவை தொடர்பாகவும் கருத்துக்களை முன்வைத்தார்.

அத்துடன் இரண்டாவது வரைபு தொடர்பான பொதுக்கலந்துரையாடல் நிறைவுக்கு வந்துள்ளது..

- கலாநிதி. போல் நியூமன் மற்றும் பேராசிரியர் டெட் ஓர்லின் ஆகியோரின் கட்டுரையைத் தழுவியது

மாயன்

**பிரதான அனுசரணை**

**அமெரிக்கா - துணை அனுசரணை**

**மாசிடோனியா, மொன்ரிநீக்றோ, மொறீசியஸ்**

**ஐக்கிய இராச்சியம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூக்குடைபடும் இலங்கை

-கே.சஞ்சயன்-

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் மூலமாக அனைத்துலக விசாரணைகளை முன்னெடுப்பதற்கான முயற்சிகள் ஜெனீவாவில் தீவிரமடைந்துள்ளன.

இந்தச் சூழலில் இத்தகைய பரந்துபட்ட விசாரணைகளை முன்னெடுப்பதற்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை என்று கடந்த திங்கட்கிழமை கொழும்பில் நடந்த கருத்தரங்கொன்றில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்திருந்தார்.

ஏற்கெனவே சர்வதேச போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்திய தமிழர் தரப்பு, அத்தகைய நேரடியான சர்வதேச விசாரணைப் • பொறிமுறை குறித்து அமெரிக்கத் தீர்மானம் வலியுறுத்தத் தவறியதால், சற்றுக் குழம்பிய நிலையில் உள்ளது.

இத்தகைய கட்டத்தில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்துக்கு விசாரணைகளை மேற்கொள்வதற்கான சட்ட ரீதியான அதிகாரமோ, நிதி ஆதாரமோ கிடையாது என்ற வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸின் கருத்து அவர்கள் மத்தியில் இன்னும் கொஞ்சம் குழப்பத்தை ஏற்படுத்தக் கூடும்.

அவ்வாறாயின், உண்மையில் ஜெனீவாவில் என்ன தான் நடக்கிறது என்ற சந்தேகம் இந்தக் கட்டத்தில் எழுவது இயல்பு.

கொழும்பில் நடந்த கலந்துரையாடலில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மூன்று விடயங்களைச் சுட்டிக்காட்டியிருந்தார்.

முதலாவது விரிவான விசாரணைகளை நடத்துவதற்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு தார்மீகப் பொறுப்பு இல்லை என்பது. இரண்டாவது இத்தகைய விசாரணைகளைச் செய்வதற்கு சட்ட ரீதியான அதிகாரம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு கிடையாது என்பது. மூன்றாவது இத்தகைய விசாரணைகளை முன்னெடுப்பதற்கான நிதி ஆதாரம் இல்லை என்பது.

இவற்றில் முதலாவது தவிர்ந்த, ஏனைய இரண்டு காரணங்களும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸினால் மட்டும் முன்வைக்கப்பட்டவை அல்ல.

அமெரிக்கா தலைமையிலான நாடுகளினால் முன்வைக்கப்பட்ட தீர்மான வரைவு குறித்து ஜெனீவாவில் நடத்தப்பட்ட இணைக் கலந்துரையாடல்களின்போது, ரஷ்யா, சீனா, பாகிஸ்தான், கியூபா போன்ற இலங்கை ஆதரவு நாடுகளாலும் இது சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

அந்த நாடுகள் நவநீதம்பிள்ளையின் தார்மீகப் பொறுப்புக் குறித்து வாய் திறக்கவில்லை. ஆனால், இலங்கை அரசாங்கம் தாராளமாகவே அவருக்கு எதிராக கருத்துக்களை வெளியிட்டு வருகிறது.

நவநீதம்பிள்ளைக்கு தார்மீகப் பொறுப்பு இல்லை என்பதற்கு வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கூறியுள்ள காரணம் இது தான்.

"விரிவான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு திறந்த மனம் வேண்டும்.

போர் நடந்த காலப்பகுதியிலேயே நாட்டில் தீவிரவாதம் இல்லை, இலங்கை அரசாங்கம் தீவிரவாதம் இருப்பதாகக் காட்டி போரை நடத்துவதாக கூறியவர் தான் நவநீதம்பிள்ளை.

போர் முடிந்து ஒருவார காலப் பகுதிக்குள் இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணை அவசியம் என்று வலியுறுத்தியதுடன், ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை சர்வதேச விசாரணை தேவை என்று பிரசாரம் மேற்கொண்டு வந்தவர். இத்தகைய தார்மீக உணர்வு இல்லாத ஒருவரால் எப்படி விரிவான விசாரணைகளை மேற்கொள்ள முடியும்?"

இதுதான், நவநீதம்பிள்ளைக்கு விரிவான விசாரணை நடத்தும் தார்மீக உரிமை இல்லை என்று இலங்கை கூறுவதற்கான காரணம்.

அதாவது அரசாங்கம் எப்போதும் கூறுவது போல வெளிப்படையாகச் சொல்வதானால் பக்கச்சார்பானவர், பாரபட்சமாக நடப்பவர் என்று கூறலாம். ஆனால், ஐ.நா. மனித உரிமைகள் பேரவைத் தீர்மான வரைவில் எங்குமே நவநீதம்பிள்ளை என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை.

எந்தவொரு தனி மனிதருக்கும் பொறுப்பளிக்கும் வகையில் இந்தத் தீர்மான வரைவு அமைந்திருக்கவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகமே விசாரணையை முன்னெடுக்க வேண்டும். அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று தான் தீர்மான வரைவில் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்துக்கு நவநீதம்பிள்ளை தலைமை தாங்குவதால், அவரது செல்வாக்கு விசாரணையிலிருக்கும் என்ற கருத்தும் தவறானது.

ஏனென்றால், எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதியுடன் அவர் ஓய்வுபெறப் போகிறார். ஆக, இன்னும் ஐந்து மாதங்களுக்கு மட்டுமே அவரது செல்வாக்கு அங்கு இருக்கப் போகிறது. ஆனால், விசாரணை பற்றிய முழு அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு ஒரு வருடகால அவகாசம் உள்ளது.

எனவே, நவநீதம்பிள்ளை என்ற தனி மனிதரை வைத்து விசாரிப்பதற்கான தார்மீகப் பொறுப்பு இல்லை என்று நிராகரிக்கப்படுவது உலகின் காதுகளில் ஏறப் போவதில்லை.

அடுத்து, இரண்டாவது விடயத்துக்கு வருவோம்,

நவநீதம்பிள்ளைக்கு விசாரணைகளை மேற்கொள்வதற்கான சட்ட அதிகாரம் இல்லை என்கிறார் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்.

அதாவது "ஒரு நாட்டின் மீது விரிவான விசாரணை நடத்துவது மனித உரிமைகள் ஆணையாளரின் கடமை அல்ல. இது குறித்து ஐ.நா. சாசனத்தில் எந்தப் பகுதியிலும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை" என்றும் அவர் கூறியுள்ளார்.

ஆனால், கடந்த திங்கட்கிழமை 17ஆம் திகதி ஜெனீவாவில் மனித உரிமை செயற்பாட்டாளர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் நடத்திய சந்திப்பின்போது, விசாரணைகளை மேற்கொள்ளும் அதிகாரம் தமக்கு உள்ளது என்பதை நவநீதம்பிள்ளை உறுதியாக கூறியிருந்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஒப்புதலுடன் விசாரணைகளை மேற்கொள்ளும் அதிகாரம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்துக்கு உள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

அதுவும் உள்ளக விசாரணைப் பொறிமுறைகளுக்கு போதுமான கால அவகாசம் அளிக்கப்பட்டு, அது திருப்தியளிக்கத்தக்க பெறுபேற்றைத் தராத நிலையில் தான், சர்வதேச சமூகம் இத்தகைய விசாரணையை முன்னெடுக்கத் துணிகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

அதேவேளை, மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை நடத்தும் அதிகாரம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்துக்கு இல்லையென்று வாதிடும் இலங்கை அரசாங்கமும் சரி, அதன் தோழமை நாடுகளும் சரி இதற்கு முன்னர் நடத்தப்பட்ட விசாரணைகளை மறந்துவிட்டன.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சர்வதேச விசாரணை ஒன்று தொடர்பான விவகாரம் விவாதத்துக்கு வருவது இதுதான் முதல்முறை அல்ல.

ஏற்கெனவே பல்வேறு சந்தர்ப்பங்களில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய, ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகத்தினால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

"மனித உரிமை மீறல்கள் குறித்து தேசிய மட்ட விசாரணைகளை நடத்துவதற்கு ஒரு அரசாங்கம் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறும்போது, அனைத்துலக விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும்" என்று கூறுகிறது. சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டங்களுக்கான ஜெனீவா அக்கடமி 2011ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வெளியிட்டுள்ள ஒரு ஆவணம்.

இலங்கை விவகாரம் சார்ந்த இந்த ஆவணம் வெளியிடப்பட்டதல்ல. பொதுவான ஒரு உயர்மட்ட நிகழ்ச்சி நிரலுக்காகவே இது தயாரித்து வெளியிட்டப்பட்டது.

எனவே, இலங்கையை பழிவாங்குவதற்காகவே சர்வதேச விசாரணை என்ற விடயம் முன்னிறுத்தப்படுவதாக எவராலும் கருதமுடியாது.

அடுத்து, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்கள் மூலம் 2006ஆம் ஆண்டு தொடக்கம் 2013ஆம் ஆண்டுவரை பல சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அவற்றில் சில உண்மை கண்டறியும் விசாரணைகள். அவை பெரும்பாலும் சிறப்பு அறிக்கையாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன அல்லது சுதந்திரமான நிபுர்ணர்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வேறு சில, சர்வதேச விசாரணை ஆணைக்குழுக்களினால் மேற்கொளப்பட்ட விசாரணைகள்.

இதற்கு உதாரணமாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களுக்கு அமைவாக உருவாக்கப்பட்ட சர்வதேச விசாரணை ஆணைக்குழுக்களின் சில விபரங்களை இப்போது பார்க்கலாம்.

1. இஸ்ரேலியப் படைகளால் லெபனானில் நிகழ்த்தப்பட்ட படுகொலைகள், அங்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள், ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து விசாரிக்க, 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய லெபனான் விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

மூன்று நிபுணர்கள் இந்த விசாரணைக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

2. லிபியாவில் இடம்பெற்ற சர்வதேச மனித உரிமைச் சட்ட மீறல்கள் குறித்து விசாரிப்பதற்காக மூன்று நிபுணர்களைக் கொண்டதாக லிபியா மீதான ஐ.நா.வின் சுதந்திர விசாரணை ஆணைக்குழு 2011ஆம் ஆண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய நியமிக்கப்பட்டது.

3. 2010ஆம் ஆண்டு ஐவரிகோஸ்ட்டில் நடந்த ஜனாதிபதி தேர்தலில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் அதற்கான சூழமைவுகள் குறித்து விசாரிக்க, 2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய சர்வதேச விசாரணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

4. சிரியாவில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிக்க மூன்று நிபுணர்களைக் கொண்ட சுதந்திரமான அனைத்துலக விசாரணைக்குழு 2011ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 22ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக உருவாக்கப்பட்டது.

5. வடகொரியாவில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிக்க, 2013ஆம் ஆண்டு மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய மூன்று பேர் கொண்ட சர்வதேச விசாரணைக்குழு நியமிக்கப்பட்டது.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் குறித்து விசாரித்து தமக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் நியமித்த நிபுணர் குழுவுக்குத் தலைமை தாங்கிய மர்சுகி தருஸ்மனே, வடகொரியா குறித்த சர்வதேச விசாரணைக் குழுவின் தலைவராகவும் செயற்பட்டிருந்தார்.

இவையெல்லாம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு சுதந்திரமான சர்வதேச விசாரணைகளை முன்னெடுக்க முடியும் என்பதற்கான உதாரணங்கள்.

இது போன்றதொரு, விசாரணைக் குழுவை உருவாக்கவே அமெரிக்கத் தீர்மான வரைவு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்துக்கு அதிகாரமளிக்கிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னொன்றையும் நினைவுகூர்வது பொருத்தம்.

2010ஆம் ஆண்டு ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மீறல்கள் குறித்து தமக்கு ஆலோசனை வழங்க நிபுணர் குழுவொன்றை நியமித்தபோதும், இலங்கை அரசாங்கம் இது போன்று தான் கூறியது.

அதாவது இத்தகைய நிபுணர் குழுவை நியமிப்பதற்கு ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூனுக்கு அதிகாரமில்லை என்றும் ஐ.நா. சாசனத்தில் அது பற்றிக் குறிப்பிடவில்லை என்றும் எகிறிக் குதித்தது.

ஆனால், கடைசியில் அந்த நிபுணர் குழுவின் அறிக்கையே சுற்றி வளைத்து இலங்கையின் கழுத்தை இப்போது நெரித்துக்கொண்டிருக்கிறது.

இனி, வெளிவிகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் குறிப்பிட்ட மூன்றாவது விடயத்துக்கு வருவோம்,

"விரிவான விசாரணைகளை நடத்த அதிகாரிகள், வசதிகள் மற்றும் சலுகைகள் தேவை.

இதற்கான வரவு - செலவுத் திட்டம் நவநீதம்பிள்ளைக்கு ஒதுக்கப்பட்டிருக்காத நிலையில், அமெரிக்கா முன்வைத்துள்ள தீர்மான வரைவில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோன்று, 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் எவ்வாறு இலங்கைக்கு எதிரான விசாரணை நடத்த முடியும்?" என்று அவர் கேள்வியெழுப்பியிருந்தார்.

முதலில் விசாரணை நடத்தும் அதிகாரமில்லை என்று கூறிய வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் இலங்கையின் தோழமை நாடுகள், பின்னர் அதற்கு நிதி வளம் இல்லை என்று கூறுவது விந்தையானது.

அதைவிட, ஏற்கெனவே சர்வதேச விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் உள்ளன.

மேலும், சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டங்களுக்கான ஜெனீவா அக்கடமி 2011ஆம் ஆண்டு டிசெம்பரில் வெளியிட்ட ஆவணத்திலும் இத்தகைய விசாரணைகளுக்கான நிதி ஒதுக்கீடு குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐ.நா. வரவு - செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் மூலம் இதற்கான நிதியைப் பெறமுடியும் என்று கூறுகிறது இந்த ஆவணம்.

ஆக, அமெரிக்கா முன்வைக்கும் தீர்மான வரைவு தொடர்பாக இலங்கை முன்வைக்கும் வாதங்கள் எந்தளவுக்கு பலவீனமானவை என்பதை இவையே நிரூபித்துள்ளன.

இலங்கை அரசாங்கம் சர்வதேச அரங்கில் தொடர்ந்து எதற்காக மூக்குடைபட்டு வருகிறது என்பதை இப்போது உணர முடிகிறதல்லவா?

நன்றி - தமிழ்மிரர்

# பாலஸ்தீனியர்களும் ஈழத் தமிழர்களும்

உலகிலேயே அதிக இன்னல்களை எதிர்கொண்டவர்கள் யூதஇனத்தைச் சேர்ந்த மக்கள் எனக் கூறுவார்கள். இவர்கள் தமக்கென ஒரு தாயகம் இல்லாத நிலையில் உலகின் பல நாடுகளிலும் தங்கி வாழ வேண்டியதொரு நிலை அன்று காணப்பட்டது.

இயற்கையாகவே கடின உழைப்புக்கும், புத்திக் கூர்மைக்கும் பெயர் பெற்ற யூதர்கள், தாம் வாழ்ந்த நாடுகளின் அரசியல், பொருளாதாரம் ஆகிய துறைகளில் முன்னணியில் திகழ்ந்தனர். இதன் காரணமாக சுதேசிகளின் வெறுப்புக்கும் உள்ளானார்கள்.



இந்த நிலையில் 19 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாக் கண்டத்தில் எழுந்த தேசிய வாத எழுச்சியின் எதிர் விளைவாக யூதர்களின் சியோனிய அரசியல் அமைப்பு உருவானது. மேலும் அவர்களது அரசியல் சித்தாந்தம் கிறிஸ்தவர்களின் மத நூலான பைபிளை அடியயாற்றியதாகக் காணப்பட்டதால் யூதர்களின் புனித நூலான தோரா, கிறிஸ்தவர்களால் அவர்களது மத நூலான பைபிளில் பழைய ஏற்பாடு என்ற பெயரில் இணைக்கப்பட்டது.

கிறிஸ்தவ மதத்தைத் தோற்றுவித்த இயேசு கிறிஸ்துநாதர் கூட யூத இனத்தையே சேர்ந்தவர் என்பது இன்று கூடப் பலருக்கும் தெரியாத ஒரு விடயமாக உள்ளது. யூத இன மக்கள் உலகின் சகல பாகங்களிலும் பரந்து வாழ்ந்தனர்.

தமக்கென ஒரு தாயகம் இல்லையே என்ற ஏக்கம் ஒவ்வொரு யூதனின் மனத்திலும் நிறைந்து காணப்பட்டது. ஆனால் அதனை எவ்வாறு அமைத்துக் கொள்வது என்பது அப்போது அவர்களுக்குப் புரியவில்லை. அதற்கான பலமும் அவர்களிடத்தில் இருக்கவில்லை.

ஆனால் பாலஸ்தீனத்தின் ஒரு பகுதியையே அவர்கள் தமது தாயகமாக நம்பினர். அங்கு போய் நிரந்தரமாகக் குடியேறுவதே தமது இனத்தின் மீட்சிக்கு உதவுமென்பதை அவர்கள் உறுதியாக நம்பினர். இதனால் உலகம் முழுவதும் நிதிசேகரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் ரஷ்யாவில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த சார் மன்னன் யூதர்களுக்கு எதிரான இனப்படுகொலையை நிகழ்த்தினான். இதில் ஏராளமான யூத மக்கள் கொலை செய்யப்பட்டனர். இதனால் பயமும், வெறுப்பும் அடைந்த யூதர்கள் பாலஸ்தீனத்தில் நிலங்களை விலை கொடுத்து வாங்கி அங்கு குடியமர்ந்தனர். புதிதாக உருவாக்கப்பட்ட யூத கிராமங்கள் துரித வளர்ச்சி பெற்றன. இந்த நிலையில் இரண்டாவது உலக மகாயுத்தமும் ஆரம்பமானது. ஜேர்மனியின் சர்வாதிகாரி ஹிட்லர் தனது வஞ்சினத்தைத் தணிக்கும் பொருட்டு அறுபது லட்சம் யூதர்களைக் கொன்று குவித்தான். இதுவே இஸ்ரேல் என்ற யூதர்களின் நாடு சுதந்திரமாக உதயமாவதற்கு அடிகோலியது.

உலகின் பல பாகங்களிலிருந்தும் லட்சக்கணக்கான யூதர்கள் புதிதாக உருவாக்கப்பட்ட தமது தாயகத்துக்கு வந்து குவிந்தனர். இன்று இஸ்ரேல் என்ற தேசம் உருவாகி அறுபது ஆண்டுகளுக்கும் மேலாகி விட்டது. யூதர்கள் இன்னமும் உலகின் பல நாடுகளிலும் வாழ்ந்தாலும் இஸ்ரேல் தமது தாய் வீடு என்று பெருமிதம் கொள்கின்றார்கள்.

சொந்தமாக நாடு இல்லாது ஏனைய நாடுகளின் ஆதரவில் தொங்கிக் கிடப்பவர்கள் யூதர்கள் என்ற அவலப் பெயர் துடைத்தெறியப்பட்டதில் யூதமக்கள் ஆத்மதிருப்தி அடைந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

இதே யூதர்களுடன் ஈழத் தமிழர்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது தாங்கொணாத வேதனைதான் ஏற்படுகின்றது. அந்நியரின் வருகைக்கு முன்னர் தமிழர்களுக்கென ஆட்சி, அதிகாரங்கள் அமைந்திருந்தன.

தாயகப் பூமி வடக்கு, கிழக்கில் நீண்டு விரிந்து கிடந்தது. இது எமது தாய் மண் என்ற உணர்வு தமிழர்களின் மனங்களில் பரவசத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. இரண்டாவது உலக மகாயுத்தம் முடிவடைந்ததால் யூதர்களின் வாழ்வில் வசந்தம் வீச ஆரம்பித்தது.

ஆனால் இதுவே தமிழர்களுக்கு அனலை அள்ளிக் கொட்டு வதற்கு வழி சமைத்துக் கொடுத்தது. 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நான்காம் திகதி இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்ததாகக் கூறுகிறார்கள். ஆனால் அன்றைய தினமே இங்குள்ள தமிழர்களின் கரங்கள் இரும்புத்தளை கொண்டு

தொடரும்!!

நன்றி – உதயன்

# தப்பினோம் பிழைத்தோம் !!!

...நாட்டு நடப்பு...

அவருக்கு எல்லாமாக நான்கு ஆண் பிள்ளைகளும் ஒரே ஒரு பெண் பிள்ளையும் உள்ளனர். இலங்கை துறைமுக அதிகார சபையில் உதவி அதிகாரியாக நீண்ட காலம் கடமையாற்றி தற்பொழுது சரிவு நாட்காலியில் நிரந்தரமாக சரிந்துவிட்டார். அவர் அக்காலத்தில் பிரபல்ய தொழில் சங்கவாதியாக செயல்பட்டதால் அவரின் பெயர் எங்கும் பிரசித்தம் அடைந்திருந்தது.



அவர் ஓர் ஓய்வு பெற்ற உத்தியோகத்தராக இருந்தாலும் சகல அலுவலக வேலைகளுக்காக பொதுமக்கள் அவரை நாடி வந்து கொண்டே இருப்பார்கள். ஆங்கிலத்தில் கடிதங்கள் தயாரிப்பது மற்றும் சிவில் நிர்வாக ஆலோசனைகள் என்பவை தொடர்பாக நல்ல பாண்டித்தியம் கொண்டவராக செயல்பட்டார்.

தடைசெய்யப்பட்ட தமிழ் இயக்கமொன்றின் போராளியாக செயல்பட்ட அவரின் மூத்த மகன் தனது பெற்றோரையும், சகோதரர்களையும் விட்டு சற்று விலகி இருந்தான். உரிமை போராட்டத்தில் தீவிர பங்காளியான அவனின் கண்களில் பார்வை கோளாறு ஏற்படவே அவனை முற்றாக போராட்ட நடவடிக்கைகளில் இருந்து விடுவிக்க அங்கீகாரமளித்திருந்தது, அந்த இயக்கம்.

அவன் அவ்விதம் விடுவிக்கப்பட்டாலும் அவனையும் பெற்றோர் உள்ளிட்ட ஒட்டு மொத்த குடும்பத்தையும் அடிக்கடி தங்கள் கழுகு கண்களைக் கொண்டு நோட்டமிட காவல் துறையும், படைப்பிரிவும் தவறவில்லை. அதனால் அவர்களின் இயல்பு வாழ்க்கை அடிக்கடி பாதிப்புக்குள்ளாகியது. குறிப்பாக அவனது ஆண் சகோதரர்களை பெற்றோர் தம்முடன் வைத்திருக்க பயந்தனர். போராளியான அவன் தற்பொழுது பெற்றோரோடு இல்லையென தெளிவாக தெரிந்து கொண்டும் படையினரது தொந்தரவு அங்கு கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தது.

போராட்ட காலத்தில் முழுநேர பங்காளியான அவனை முற்றாக இயக்கம் கைகழுவி விடவில்லை. வெளிநாடொன்றுக்கு அவனை அனுப்பி கண் சிகிச்சை பெற்றுக் கொடுத்ததுமல்லாமல் அந்த நாட்டிலே சுதந்திரமாக வாழ பிரஜா உரிமையையும் இயக்கம் பெற்றுக் கொடுத்திருந்தது.

அது மாத்திரமல்ல வெளிநாட்டிலிருந்து கொண்டு தாய் நாட்டில் தனது உரிமைக்காக போராடிய அன்றைய பெண் போராளி ஒருவரை அவனுக்கு திருமணம் செய்து வைத்திருந்தது அந்த இயக்கம். அவர்களுடைய எதிர்கால வாழ்க்கையையும் சிந்திக்கும் மனிதாபிமானம் அந்த இயக்கத்திடம் பரவலாக காணப்பட்டது.

தற்பொழுது அவன் ஒரு குடும்பஸ்தன். இருப்பினும் தனது பெற்றோர், சகோதரர்களை கவனிப்பதில் அவன் முன்னுரிமை கொடுத்தான். 1983ம் ஆண்டு இனக்கலவரத்தின் போது அவனின் சகோதரி அகதியாக இந்தியாவுக்கு சென்று சுமார் 10 வருடங்களை கழித்திருந்தார். தொடர்ந்தும் அவளது கணவன், இரு பிள்ளைகளுடன் இந்தியாவில் இருக்க விரும்பவில்லை.

அவள் தனது முழு கஷ்ட நிலையையும் அவுஸ்திரேலியா அரசுடன் பரிமாறியதையடுத்து, அவளின் குடும்பத்தினருக்கு மூன்று வருட அகதி அந்தஸ்து கிடைத்தது. தொடர்ந்தும் இலங்கையில் பிரச்சினை நீடித்துக் கொண்டு சென்றால், நிரந்தர பிரஜா உரிமை வழங்க வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எப்படியோ இரு பிள்ளைகள் நாடு கடந்து நிம்மதியாக வாழ்ந்தாலும் ஏனைய ஆண்பிள்ளைகள் தொடர்பில் பெற்றோர் கவலைப்படாமலில்லை. மேலும் இரண்டு பேரை கொழும்பிலுள்ள உறவினர் வீட்டில் தங்கவைத்துவிட்டு இளையவனை தங்களுடன் வைத்துக்கொண்டனர்.

இளையவனின் கெட்ட சகவாசத்தால் பல பிரச்சினைகளுக்கு பெற்றோர் முகம் கொடுத்தனர். அவனுக்குள்ள பொழுது போக்கு அடிதடி, சண்டை சச்சரவுகளே. ஊரில் அவனால் பெற்றோருக்கு நிம்மதி இருக்கவில்லை. அவனுக்கு எதிராக நீதிமன்றில் பல வழக்குகள் குவிக்கப்பட்டிருந்தன.

ஆவன் ஒரு வித்தியாசமான பேர்வழியாக காணப்பட்டான். சினிமாவில் வரும் கதாநாயகன் போன்று வசதிபடைத்தோரிடம் பிடுங்கி ஏழை எளியவர்களுக்கு அள்ளிக் கொடுப்பதே அவனின் பொழுது போக்கு. அது மாத்திரமல்ல கேளிக்கைக்காக பல வேலைகளில் இறங்குவதால் பல வீண் பிரச்சினைகளை அவன் சந்திக்க நேரிட்டது.



கொழும்பிலுள்ள இரு ஆண் பிள்ளைகளும் எப்படியோ தங்கள் கல்விக்கேற்றவாறு தொழில்களை தேடிக் கொண்டனர். அதே சமயம் தமது பெற்றோர்களையும் கவனிக்கத் தவறவில்லை. அதுமாத்திரமல்ல தங்கள் தகுதிக்கு தக்க துணைவிமாரை தேர்ந்தெடுத்து பெற்றோரின் ஆசீர் வாதத்துடன் திருமணங்களையும் புரிந்து கொண்டனர்.

தற்பொழுது பெற்றோருக்கு இருந்து வந்த அதிகப்படியான சுமைகள் குறைந்தாலும் இளையவனின் செயற்பாடுகளினால் மனக் கவலைகள் அதிகரித்தன. உண்மையில் இளையவனுக்கு அரசியல் அரிச்சுவடி தெரியாது. அவனுக்கு தெரிந்ததெல்லாம் அடிதடியும், அட்டகாசங்களுமே. ஆனால் அவன் பயங்கரவாத தடை சட்டம், அவசர கால சட்டம் ஆகியவற்றுக்குள் சிக்கவைக்கப்பட்டான்.

காவல் துறையினரும், படையினரும் எப்படியும் அந்தக் குடும்பத்தில் யாரையாவது கூண்டுக்குள் தள்ளுவதிலேயே ஆர்வமாக இருந்தனர். ஒரு தடவை அப்பிரதேசத்திலுள்ள பெரும்பான்மை இனத்தவருக்கு சொந்தமான உணவகம் ஒன்றுக்கு கைக்குண்டு வீசியமை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இளையவன் கைது செய்யப்பட்டு பதின்னான்கு நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டான்.

எப்படியும் அவனுக்கு பிணை வழங்க மறுக்கும் நடவடிக்கைகளில் காவல்துறை அக்கறை காட்டியது. அவன் பூஸா தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டான். சில மாதங்களுக்குப் பின் குறித்த உணவகத்தின் உரிமையாளர் மர்மமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்டார். அந்த மர்மக் கொலைக்கான குற்றச்சாட்டும் இளையவன் மேல் சுமத்தப்பட்டது. மேலும் படையினரின் சோதனை சாவடிக்கு முன் அந்த வர்த்தகரின் வீடு அமைந்திருந்தது. எப்படி அந்த வர்த்தகர் கொல்லப்பட்டார்? என்று எவரும் சந்தேகிக்க தவறவில்லை. அன்று, அந்த வர்த்தகருக்கும் தடை செய்யப்பட்ட தமிழ் இயக்கத்திற்கும் வர்த்தக ரீதியிலான தொடர்புகள் இருந்து வந்ததை புலனாய்வுப் பிரிவு தெட்டத் தெளிவாக உறுதி செய்ததையடுத்தே அந்த மர்மக் கொலை இடம் பெற்றிருந்தது. வன்செயல் காலங்களில் வெள்ளை வேனில் ஆட்களை கடத்தல், வேலியே பயிரை மேய்வது போன்று பல சூட்டு சம்பவங்கள் ஆகியன ஆங்காங்கே பரவலாக நடப்பது வழமையான நிகழ்வுகளே.

'ஆடு திருடியவனும் கூட நின்று ஆட்டை தேடுவது' போன்ற சம்பவங்கள் அன்று சர்வ சாதாரண நிகழ்வுகளாக இருந்தன. நீதிக்கும், சட்டத்திற்கும் பொறுப்பாக செயற்பட்ட உயர் அதிகாரிகளுக்கு இளையவன் நிரபராதி என்பது தெளிவாக தெரிந்ததால் அவன் சகல குற்றங்களிலும் இருந்தும் விடுவிக்கப்பட்டான்.

தொடர்ந்தும் தனது சொந்த நாட்டில் வாழ அவன் விரும்பவில்லை. அவனது மனுவை மனப்பூர்வமாக ஒரு ஐரோப்பிய நாடு ஏற்று அவனுக்கு உடனடி புகழிடம் வழங்கியது. தற்பொழுது அவன் அந்த நாட்டின் நிரந்தர பிரஜை.

'நாங்களும் அடிதடியில் இறங்கினால் வெள்ளைக்காரன் எங்களையும் கூப்பிடுவான்' என்று அவனது சக நண்பர்கள் தமாஷாக பேசும் பேச்சு இளையவனுக்கு சந்தோசத்தைக் கொடுத்தது. வெளிநாட்டில் அவன் வேலை செய்யும் உணவகத்திற்கு சொந்தக்காரர் இலங்கையின் கிழக்கு மாகாணத்தை சார்ந்த தமிழர் ஒருவரே இளையவனின் துணிச்சலை நம்பியே தனது உணவகத்தில் அவனுக்கு வேலை வழங்கினார்.



பேற்றோருக்கு இதைவிட மகிழ்ச்சி என்ன வேண்டும்? 'குழப்படிகார பையனாக அவன் இருந்ததால் தான் அவனுக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு கிடைத்தது. நல்லவனாக இருந்திருந்தால் ஏஜென்சி காரரிடம் பணத்தைப் பறிகொடுத்து பாதிவழியில் நிற்க நேர்ந்திருக்கும்.' என்று ஊரார் கேலியாக பேசுவதை இளையவனின் பெற்றோர் அடிக்கடி காதால் கேட்கத் தவறுவதில்லை.

முற்றும்!!

பாலையூற்றான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொர்க்கத்தில் ஒரு திருமணம்

**சிறுகதை**
பாகம் - 02

தெருவிலே வெயில் பளீரென்று ஒளி வீசிக் கொண்டிருந்தது. வீதியிலே சனக்கூட்டம் நிரம்பியிருந்தது. தம்பி கண்ணனை அழைத்தான். கண்ணா இன்றைக்கு பாறேன் நிறை சனக்கூட்டம் தெருவிலே தயாரா இரு இங்க வருவாங்க என்று நினைக்கிறேன். அண்ணா இதெல்லாம் இருக்கட்டும் எனக்கு இந்த ஹோட்டல் சாப்பாடெல்லாம் பிடிக்கவில்லை. நான் பிறந்ததிலிருந்து அம்மா கையிலிருந்து ஒரு பிடி உணவு கூட உண்டதில்லை. உனக்கும் தெரியும் தானே! நீ எப்ப அண்ணா கல்யாணம் செய்வ. எனக்கு அண்ணி கையால உணவு வேண்டும். அதற்கு ஏற்பாடு செய். உன் பிடிவாதத்தை விடு. இந்த ஹோட்டலுக்கு எத்தனையோ பெண்கள் வருகின்றனர். அவர்களில் யாராவது உனக்கு பிடித்து இருந்தா சொல். என் தலைமையில் கல்யாணம் செய்வோம் என்றான்.

கண்ணனின் மனநிலையை அறியாமல் இல்லை கணேஸ். சிறுவயதில் இருந்து தாய் முகத்தை பார்க்காமல் வளர்ந்தவன் அவன். அவன் மட்டுமல்ல நானும் தான்.

ஹோட்டலுக்கு வேண்டிய பொருட்களை எல்லாம் ஆட்டோவில் அவனே ஏற்றி வருவான்.

ஒரு நாள் காலையில் கணேஸனின் கடைக்கு ஒரு பெண் வந்தாள். அவளைப் பார்த்தவுடன் கணேஸனின் மனதில் ஆனந்தம் கூத்தாடியது. என்றுமில்லாத புதிய உணர்வு. அவளது பார்வை அவனைக் கொல்லுவது போல் இருந்தது. அவன் அவள் அருகில் சென்று உங்களுக்கு என்ன வேண்டும் எனக் கேட்டான். எனக்கு அப்பம் வேண்டும் என்று புன்னகையுடன் கூறினாள். கணேஸ் மகிழ்வோடு அப்பம் சுட்டான். அவள் எனக்கு சுடச்சுட பாரசல் கட்டச் சொன்னாள். கணேசும் பார்சல் கட்டிக் கொடுத்தான். அவள் பணம் கொடுத்து விட்டுச் சென்றாள். அவள் நடந்து சென்ற பாத அடையாளத்தை பார்த்துக் கொண்டு வாசலினருகில் நின்றான் கணேஸ்.



எதற்குமே வளைந்து கொடுக்காத அவன் மனம் இன்று நெகிழ்ந்தது. இவ்வாறாக அவள் தினமும் ஹோட்டலுக்கு வந்தாள் கணேஸை பார்த்து புன்னகைப்பாள். வெட்கத்தால் தலை குனிவாள். ஆனால் இருவரும் எதையும் பேசிக் கொள்ளவில்லை. தினமும் இருவரின் கண்கள் மட்டும் அதிகம் பேச எத்தனிக்கும். ஆனால் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இருந்தனர்.

அன்று அவள் ஹோட்டலுக்கு வரவில்லை. கணேஸ் எதிர்பார்த்து இருந்தான். ஏமாற்றமும் கவலையும் அவன் மனதை இறுகப் பிடித்திருந்தது. அண்ணனின் முகமாற்றத்தை தம்பி அறிந்தான்.

அண்ணா! என்ன நடந்தது? உடம்புக்கு எதுவும் சரியில்லையா? ஒரு மாதிரி இருக்கா??

அப்படி ஒன்றுமில்லை. நீ ஹோட்டலைப் பார்த்துக்கொள், நான் கடைக்கு போயிட்டு வாரேன். என்று சொல்லி வெளியே வர வாசலில் அவள் வந்து நின்றாள். கணேஸனின் முகம் திடீரென மலர்ந்தது. அப்பத்தை வாங்கிக் கொண்டு அவசர அவசரமாய் ஓடினாள். அண்ணனின் முகத்தில் திடீர் மாற்றம், மகிழ்ச்சி, மீண்டும் ஒரு கணத்தில் மறைந்தது.

அண்ணா அவளை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

அண்ணா! உங்களுக்கு அவங்கள பிடிச்சிருக்கா.

அவங்கட பெயர் தெரியுமா? எங்கே இருக்கிறாங்க? என்ன செய்றாங்க? .,.. ...இவ்வாறு கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனான்.

இறுதியில் அவங்களைப் பற்றி ஏதாவது தெரியுமா? ஏதாவது கதையுங்க அண்ணா!! என்று ஒருவாறு முடித்தான்.

கணேஸ். இவள் தினமும் ஹோட்டலுக்கு வருவாள். கண்ணாலேயே கதைப்பாள். அவளைப் பார்த்ததும் என் கண்கள் தடுமாறும். இவ்வளவும் தான் ....

இருவரும் அவளைப் பின்தொடர்ந்து சென்றனர்.

அவள் இரண்டு தெரு நடந்து சென்று ஒரு குடிசையினுள் நுழைந்தாள். அங்கு ஒரு வயதான பாட்டியும், ஒரு சிறுமியும் இருந்தனர். அப்பத்தை கொடுத்தாள். அவர்கள் சாப்பிட்டதும் வெளியே வந்து இன்னும் கொஞ்ச தூரம் நடந்து போனாள்.

ஒரு கலைப்பீட கல்லூரியினுள் சென்று விட்டாள். கண்ணா அவள் படிக்கின்றாள் போலத் தெரிகின்றது. நாளை வரும் போது பார்ப்போம் என்றான்.

கணேசுக்கு அன்று நித்திரையும் வரவில்லை. நினைவிலும் அவள் கனவிலும் அவள்.. இரவு நீண்டதாக தெரிந்தது கணேசுக்கு. கண்ணனோ தனக்கு அண்ணி கிடைத்த மகிழ்ச்சியில் உறங்கிக் கொண்டிருந்தான்.

மறுநாள் காலை அவள் ஹோட்டலுக்கு வந்தாள். கண்ணனுக்கு அண்ணி எனக் கூப்பிடனும் போல இருந்தது. ஆனால் முடியவில்லை. அக்கா உங்கட பெயர் என்ன? என்று கேட்டான்.

தம்பி, கணேஸா கேட்கச் சொன்னவர் என்றாள் அவள். இல்லை அக்கா நானாகத்தான்....

கண்ணா! என்னை அண்ணி என்றே கூப்பிடு! என்றதும் கண்ணனுக்கு ஒரே ஆச்சரியமும், சந்தோசமுமாக இருந்தது.

அவள் தொடர்ந்தாள், நான் இந்த ஊருக்கு வந்ததுமே இங்குள்ளவர்களைப் பற்றி விசாரித்தேன். உங்களைப்பற்றித் தான் அதிகமாகவே கேள்விப்பட்டேன். இன்னும் சொல்லப் போனாள் உன் அண்ணாவைப் பார்க்கத்தான் அடிக்கடி ஹோட்டலுக்கு வருவேன்.

கண்ணனுக்கு, அண்ணாவும் உங்களை மிகவும் விரும்புகிறார் என்று சொல்ல வாய் துடித்தது. ஆனாலும் அதை அண்ணா சொல்வதே சிறந்தது என்று எண்ணி வாயை மூடிக்கொண்டான்.

தொடர்ந்த அவள்.. நீங்க இருவரும் நேற்று என்னைப் பின் தொடர்ந்தது எனக்கு தெரியும். இருந்தாலும் அதைக் காட்டிக் கொள்ள விரும்பவில்லை. உங்கள் அண்ணாவை என்னுடன் கதைக்கச் சொல்லுங்க, நானே கூறுகின்றேன். என்றாள் அமைதியாக...

அண்ணா வாங்க உங்களைப் பார்க்க அண்ணி வந்திருக்கிறாங்க என்றான் கண்ணன். கணேஸ் மௌனமாக வந்து அவளைப் பார்த்துச் சிரித்தான்.

மூவரும் இருந்து கதைத்தனர். இல்லை அவள் மட்டும் கதைத்தாள். என்னோட பெயர் வித்தியா. எனக்கு யாரும் இல்லை. அவர்களுக்கு தினமும் சாப்பாடு வேண்டிக்கொடுப்பது எனது வேலை. அந்த சாட்டில் உங்களை தினமும் பார்க்க வந்தேன்.

இப்படி மணிமணியாக அவள் நிறையவே பேசினாள். அவள் வாய் அசைவுகளைப் பார்த்துக் கொண்டிருந்தான் கணேஸ். கதைத்து முடித்து அவள் போய்விட்டாள். இருந்தாலும் கணேஸ் தன் சுய நினைவுக்கு வராமல் இருந்தான்... ..

நாட்கள் சில நகர்ந்தன.

அன்றொரு நாள் வித்யா ஹோட்டலுக்கு வந்தாள். அவளது முகத்தில் என்றும் போல் செந்தழிப்பு இல்லை. கணேஸ் அப்பம் வேண்டும் என்றாள். வித்யா ஏன் என்ன நடந்தது? ஒரு மாதிரி சோர்வாக இருக்கின்றாய். என்று கேட்கும் போதே நின்று கொண்டிருந்த வித்யா கீழே விழப்போனாள். கணேஸ் அவளைத் தாங்கிப் பிடித்தான்.

அண்ணி! என்று கண்ணனும் ஓடி வந்தான். வித்யா .. வித்யா .. அவள் அசையவேயில்ல.

அண்ணா எனக்குப் பயமாக இருக்குது. ஆஸ்பத்திரிக்கு கொண்டு போவோம் அண்ணா.. என்றான் தம்பி.

இருவரும் வித்யாவைத் தூக்கி ஆட்டோவில் ஏற்றினர். கண்ணன் கண் கலங்கியவாறு அண்ணியோடு பின்னால் இருந்தான். ஆட்டோ மின்னல் வேகத்தில் பறந்தது.

அவளுக்கு என்னவாயிற்றோ என எண்ணும் போது கணேஸனின் மனம் பதறியது, பதற்றத்தால் ஆட்டோவின் வேகம் அதிகரித்தது. ஆட்டோவின் பிரேக்கை அழுத்திப் பிடித்தான் கணேஸ். என்ன ஒரு அவலம்! பிரேக் வயர் அறுந்தது. இறக்கத்தில் கணேஸனால் ஆட்டோவை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாமல் போனது. தைரியத்தோடு ஆட்டோவை அழுத்திப் பிடித்து திருப்ப முயன்ற போது பின்னால் வந்த பால் வேனில் மோதுபட்டது ஆட்டோ. கண்ணன் வெளியே தூக்கி வீசப்பட்டான். ஆட்டோவில் இருந்த வித்யா நிலை தடுமாறி உருண்டு ஆட்டோவினுள் விழுந்தாள். கணேசுக்கும் நன்றாக அடிபட்டது. ஆட்டோ பம்பரம் போல சுழன்று நின்றது. அந்த இடமே இரத்த வெள்ளமாக மாறியது.

அங்கிருந்த மக்கள் திரள் திரளாக வந்து சேர்ந்தனர். மூவரையும் ஆஸ்பத்திரியில் சேர்த்தனர்.

சற்று நேரத்தின் பின்னர் கண்ணன் கண் விழித்தான்.



விழித்தவன் அண்ணாவையும், அண்ணியையும் தேடினான். அவர்களைக் காணவில்லை. அங்கிருந்தவர்கள் அவர்கள் இருவரும் இறந்த செய்தியை கண்ணனுக்குத் தெரிவித்தனர். துடிதுடித்துப் போனான் கண்ணன்.. .. ..

இறுதியில் இருவருக்கும் ஈமக்கிரியைகள் நடைபெற்றன. திருமணம் சொர்க்கத்தில் தான் நிச்சயிக்கப்படும் என்பார்கள், ஆனால் தன் அண்ணா, அண்ணிக்கு சொர்க்கத்தில் தான் நடைபெறப்போகின்றது என எண்ணிக் கொண்டான்.

சிறிது நாட்களின் பின்.. ..

கண்ணன் அதிகாலையில் ஹோட்டலின் முன் வந்து நிற்கின்றான். அண்ணாவும், அண்ணியும் திருமணக் கோலத்தில் வந்து கண்ணனை வாழ்த்திவிட்டு வானில் பறந்து செல்கின்றனர் நிம்மதியாக .. .. ..

முற்றும்- - -

**மேனுகா வேலாயுதம்**
வரோதயா நகர், திருகோணமலை.

# எங்கே நிம்மதி??

**சிறுகதை**
பாகம் - 02

தங்கள் தங்கள் மனக் கவலைகளை மனத்திரையில் ஓடவிட்டனர். யாரும் நிம்மதியாக இருப்பதாக தோன்றவில்லை.

*கடந்த வார தொடர்ச்சி*

நான்காவதாக வந்து தனது குறை சொன்ன யுவதி கேட்டாள்: "அப்போ இதுக்கு என்ன வழி? ஐயா, நீங்களே சொல்லுங்க"

தேசிகன் வெறுமையாக சிரித்தார். "கிட்டத்தட்ட நம்ப எல்லோருடைய பிரச்னையும் ஒன்று தான்"

பாம்பு தலையை தூக்குவது போல் அனைவரும் ஒரு சேர தலையை தூக்கி அவரை பார்த்தனர். கொஞ்சம் குழப்பம்.

"சுருக்கமாக சொல்ல போனால், நாம எல்லாரும் நம்மை சுத்தி இருக்கவங்க நம்மை பற்றி என்ன நினைப்பாங்க என்றே கவலைப் படுகிறோம். சமூகம் நம்மை தாழ்வாக நினைக்க கூடாது என்பதே நம் கவலையாக இருக்கிறது. மற்றவர்கள் நன்றாக இருக்கிறார்களே? நாம இல்லியே? என்று பொறாமை படுகிறோம். சரியா?"

"நம் நிலை தாழ்ந்து விட்டதோ? நம்ம வீட்டிலே, நமது நண்பர்கள், உறவுகள் நம்மை அவமதிப்பார்களோ என்ற எண்ணமே நம்மை கீழே தள்ளுகிறது. வெறுப்பாயிருக்கு. அதனாலே தற்கொலை கூட பண்ணிக்கலாம் என்கிற எண்ணம் ஏற்படுது.

தேசிகன் தொடர்ந்தார்: "வாழ்க்கையிலே வெற்றியே பார்க்க ஆசைப் படுகிறோம். தோல்வி கண்டு பயம். சொல்லபோனால், தோல்வியை விட தோல்வி அடைந்து விடுவோமோ என்கிற நடுக்கம் தான் அதிகம் நம்மை ஆட்டி படைக்கிறது"

நிறுத்தினார். கூட்டத்தில் ஒரு பெரியவர் கேட்டார். . "நீங்க சொல்றது சரிதான் ஐயா. எங்க குடும்பத்தில் கூட இதை பார்க்கிறோம். இந்த மரியாதை பயத்துக்கு ஒரு தீர்வே இல்லியா?"

சமூகம், சுற்றம் சொல்வதை கேளுங்கள். தப்பில்லை. ஆனால், உறவுக்காக, ஊருக்காக உங்கள் வாழ்வை பாழ் பண்ணிக் கொள்ளாதீர்கள். உங்களது குறைகளை ஆராய்ந்து, கண்டு பிடித்து நிவர்த்தி செய்து கொள்ளுங்கள்.

"ஒவ்வொரு துயரத்திற்கும் ஒரு விடிவு உண்டு. அதை நாமதான் தேடிக்கணும். உனக்கு படிப்பு வரல்லையா? கவலையை விடு. உனக்கு தெரியுமோ, படிப்பு வராதவங்க பெரிய பணக்காரங்களாகவும், தொழிலதிபர்களாகவும், நடிகர்களாகவும் கோடி கணக்கில் சம்பாதிக்கிறாங்க. திருபாய் அம்பானி படிக்காதவங்க தான். பில் கேட்ஸ் கல்லூரி கேட் தாண்டவில்லை. அவரைப்போல் எத்தனையோ பேர், நீயும் பிஸினெஸில் இறங்கு, நன்றாக வருவாய்.

"மூணாவதா வந்த ஐயா, உங்க பிரச்சனை, காதலித்த பெண் கிடைக்கலை. உங்களுக்கு பழமொழி தெரியாதா "கிட்டாதாயின் வெட்டென மற". மறந்துட்டு மேலே போய்கிட்டே இருங்க".

யுவதியை பார்த்து சொன்னார்: "ஊர் என்ன சொல்லும் என்று ஏன் கவலைப்படறீங்க. [illegible] பேசுவாங்க. நீங்க [illegible] நல்ல வேலையிலிருக்கீங்க. வேறே கல்யாணம் பண்ணிக்கோங்க. நல்லா இருப்பீங்க"

அப்போது அங்கே இருந்த காதலியை பறி கொடுத்த வாலிபன் சொன்னான். "ஐயா. அவங்களுக்கு விருப்பமிருந்தா நானே அவங்களை திருமணம் செய்து கொள்கிறேன்". "பாத்திங்களா! பிரச்சனை எப்படி தானாகவே தீருகிறது. நீங்க என்னம்மா சொல்றீங்க விருப்பமா?" தேசிகன் யுவதியை வினவினார்.



அந்த பெண்ணும் சரியென வெட்கத்துடன் தலையாட்ட கூடியிருந்த மக்கள் கை தட்டி கரவொலி எழுப்பினார்கள் கூட்டத்தில் ஒருவன்: "நான் சொல்லலே! சாமி வாக்கு அருள் வாக்கு. உடனே பலிக்கும். பார். கல்யாணம் கூட கூடி வந்திடிச்சி". கூட இருந்தவன் சொன்னான்: " ஆமாமா! நாளைக்கு வெள்ளனே வந்து சாமி கிட்ட வாக்கு கேப்போம்.' கூட்டம் சிறிது நேரத்திற்கு பின் கலைந்தது.

அடுத்த நாள். 'எங்கே போயிட்டார்' என தேடினர். சென்னைக்கு போய்விட்டார் என செய்தி. தொந்தரவு தாங்காமல், அவர் இமயமலைக்கே போய் விட்டார் எனவும் வதந்தி. தேசிகன் இப்போது சென்னையில் மகன் குடும்பத்தோடு. நிம்மதியாக இருக்கிறார் எல்லோரிடமும் கலகலப்பாக பேசினார். பேரனோடு விளையாடினார். மகன் மருமகளோடு இயல்பாக சகஜமாக நடந்து கொண்டார்.

இப்போது, தேசிகனுக்கு வாழ்க்கையில் தான் ஏதோ சாதிப்பது போன்ற சந்தோஷம்.

முற்றும்.. --

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முரசு

## ஒரு பூகம்பத்தின்.. ..

இது எங்கள் சோலை
அதை குத்தகைக்கு
எடுத்துவிட்டார்கள்

வேட்டைக்காரர்கள்.
அவர்களின்
துப்பாக்கி சுதந்திரத்தாலும்

சப்பாத்து மகிமையாலும்
இங்கே பறவைகள்
இருதைகளாகின..

சில சிதைக்கப்பட்டன
இன்னும் சில
சிறைவைக்கப்பட்டன

கூடுகள் குலைக்கப்பட்டு குஞ்சுகள்
மிதிக்கப்பட்டன.
கோட்டான்களின்

குடியாட்சியில்
சோலையின்று
ஒரு பூகம்பத்தின் ...........

ஒரு புயலின் .......................
நிலைக்களமாகியது
இளைய பூக்களிலெல்லாம்
தேனைப்பறிப்பது

கருங்குளவிகள் தான்
இப்போது அந்த மலர்கள்
கற்புத்திரை கழன்றதனால்



கண்ணில் புஸ்பமாகிவிட்டன.
பூங்காவில் வரும்
தென்றலுக்கும்

இன்று
புதுப்புதுப் பெயர்கள்

திருமலை சுந்தா



## என்று தீரும்!!

என்று தான் தீருமய்யா
எங்கள் நாட்டுப்
பிரச்சனையோ?
நாடு விட்டு
நாடு தானே
நாங்கள் தானே
போயும் வந்தோம்
இன்னும் தான்
தீரவில்லை!
எங்கள் நாட்டு பிரச்சனையோ!
பள்ளியும் செல்லவில்லை
பாடமும் பயிலவில்லை
ஆண்டு வாழும் அரசினிற்காய்
நடக்குதிந்த பிரச்சனையோ?
மட்டுநகர் பிரச்சனையில்
எட்டு நகர் போனதம்மா!
மாடியிலே இருந்த குடும்பம் - தெரு
கோடியிலே நிற்குதம்மா!
சொந்தமாய் காணியிருந்தும்
சுகமாய் வாழ வீடிருந்தும்
ரசித்து வாழ சொத்திருந்தும்
ருசித்து வாழ உணவிருந்தும்
நிம்மதியாய் வாழத்தான் - இந்
நாட்டில் முடியவில்லை!
பாத்துத்தான் பட்டம் பெற்று
பார்க்க வொரு வேலையில்லை!
பாடுபட்டு பாராளுமன்றம் - போய்
சொல்லித்தானும் தீரவில்லை
என்று தான் தீருமய்யா
எங்கள் தீர்வுப் பிரச்சனையோ??

அன்புவழிபுரம் ச.திருச்செந்தூரன்
திருகோணமலை

## பலியின் வலி

படபடக்கும் பச்சை இலைகள்
கிளைகளைக் கெட்டியாகப்
பிடித்துக்கொண்டிருக்கின்றன
எத்தனைக் குலுக்கியும் விடுவதாயில்லை
பாழும் பேய்க்காற்று சீறிச் சீறித்தான்
வீசுகிறது
சுழட்டிச் சுழட்டித்தான் அடிக்கிறது
அதற்கென்ன இப்படி ஒரு கோபம்
இந்த அப்பாவி மரத்தின் மீது
பொட்டல் காட்டில் தனியாக இந்த மரம்
காற்றின் கடும் சீற்றத்தைத் தாங்க
முடியாமல்
அரண்டு மிரண்டு ஆடுகிறது
அதன் தலையைப் பற்றி உலுக்கி உலுக்கி
ஏதாவது பலி கொடு என உருமுகிறது
பேய்க்காற்று
தப்பிக்க வழியின்றி
தாய் மரத்திலிருந்து பிடியைத்
தளர்த்திக்கொள்கின்றன
தங்கள் கடமையை உணர்ந்துவிட்டிருந்த
உடம்பெல்லாம் மஞ்சளான இலைகள்
வெற்றிக்களிப்பில் ஊதி ஊதி வீசுகிறது
காற்று
நழுவி விழும் இலைகளைத் தூக்கிக்
கடாசுகிறது
உயரத்தில் வாழ்ந்து பழக்கப்பட்ட
இலைகள்
பூமியின் மீது மோதி விழுகின்றன
புழுதிக்காயம்பட்டுப் புரளும் மஞ்சள்
இலைகளைத்
தரதரவெனத் தன் போக்கில்
இழுத்துச் செல்கிறது பேய்க்காற்று

- ஏகாந்தன் -

# சிங்கள சினிமாவில் ஆசோக்க ஹந்தகம



- எல் வசீம் அக்ரம்- படிகள் மின்னிதழ்-

ஒளி ஊடகத்தை தனது பிரதான ஆயுதமாக ஏற்றுக் கொண்ட ஆசோக்க ஹந்தகம, சினிமா உலகிற்கு அறிமுகம் தேவையில்லாத ஒரு இயக்குனர். கடந்த 20 வருடங்களாக சிங்களச் சினிமாச் சூழலில் தவிர்க்க முடியாதவர் மட்டுமின்றி அதிக சர்ச்சைகளுக்கும் கேள்விகளுக்குமுட்பட்டவர்.

1992ல் இவரது முதலாவது திரைப்படமான "சந்த கிணர" (Moon Lady) தயாராகிக் கொண்டிருந்தது. அந்த திரைப்படம் அந்தந்த ஆண்டுகளில் வெளியாகிக் கொண்டிருந்த ஏனைய திரைப்படங்களின் ஆக்கிரமிப்பினால் தனது இடத்தை அடைந்து கொள்ள முடியாமல் சுமார் ஆறு வருடகால இடைவெளிக்குப் பின் 1998ம் ஆண்டு வெளிவருகின்றது.

அதுவரை அசோக்க ஹந்தகமவை அவரது பல்கலைக்கழக மாணவ நண்பர்களைத் தவிர வேறு யாரும் இவரை ஒரு சினிமா சிருஷ்டி என்று அறிந்திருக்க வாய்ப்பிருக்கவில்லை.

சந்த கிணர திரைப்படம் வெளிவந்து சில நாட்களுக்குள் ஹந்தகமவை முழுமையான, ஒரு ஒளி ஊடக செயற்பாட்டாளராக சர்வதேசமெங்கும் வரையறுத்துக் கொண்டனர். இவரை வெறுமனே உள்ள இயக்குனராக அன்றி சினிமாவில் குறிப்பாக மாற்றுச் சினிமாவில் முக்கிய ஒரு பிரதிநிதியாக உலகம் அடையாளம் கண்டு கொண்டது. சினிமாவுக்குள் தொடர்ச்சியாக கதையாடல்களுக்குட்பட்டு வருகின்ற அடையாளவாதம், யதார்த்த வாதம் போன்ற விடயங்களை தனது ஒளிப்படிமங்களால் குறிப்பாக சினிமாச்சித்திரங்களாக நமது புலன்களுக்கு ஊடாக ஆகர்சிக்கின்ற பணியை ஹந்தகமவின் இந்த 20வருட கால வாழ்வு செயற்படுத்தியிருக்கின்றது.

சினிமா ஊடகத்தின் பொறுப்பை மிகவும் வலிமையாக பயன்படுத்தி அதன் பெறுபேறுகளை சமூகச் சிதைவுகளில், சமூகக் கட்டமைப்புகளில் ஒப்பிட்டுப் பார்க்கின்ற ஒரு போராட்டத்தை ஹந்தகமவின் சினிமா உலகு நிர்மானம் செய்துள்ளது. சினிமா என்ற ஒரு காட்சி ஊடகத்திலிருந்து அவர் தனது சமூகம் மீதான ஆழ்ந்த பிரக் ஞையை, கதையாடலை, இருப்பை மற்றும் எதிர்வு கூறலை சாத்திய மாக்க முடிந்துள்ளது.

சத்தியமாக ஹந்தகம சினிமா ஜாம்பவான் என்ற கீர்த்திக் கிரிடங்களால் முடிசூட்டப் பட்டாலும் அதே தளத்தில் அதிகப்படியான விமரிசனங்களுக்குள்ளும் விவாதங்களுக்குள்ளும் தாக்கங்களுக்குள்ளும் ஆட்பட்டிருக் கின்றார்.

சமூகத்தில் பாரிய அதிர்வுகளை ஏற்படுத்துகின்ற சக்தி சினிமா என்ற கலைக்கு இருக்கின்றது. அதற்குள் கவிதை, இலக்கியம், சமூகம், நாகரீகம், ஓவியம், விமரிசனம், இசை, சமயம், விழிப்புணர்ச்சி, பாலியல், பொருளியல், அரசியல் என்ற எண்ணற்ற அனுப் பிரலயங்கள் கூடுகட்டியுள்ளன. இவ்வெண்ணக் கருக்கலின் ஒட்டுமொத்த வெடிப்பு சினிமா. சினிமாவின் ஒவ்வொரு அசைவுகளிலும் எனது இருப்பைத் தேடுகிறேன். எனது சுயத்தை தேடுகிறேன் என்கிறார் திரு. ஹந்தகம.

நான் மக்களது வரம்புகளுக்குள் ஒரு சினிமாக்காரன் என்ற அடையாளத்தை பெற்ற போதும், நான் எவ்வகையான சினிமாக் காரன் என்ற வினா என்னை வாழ்நாள் முழுவதும் கேட்டுக் கொண்டிருக்கின்றது. சமூகத்தின் ஒரு புறக் கண்ணாடியைக் கொண்டு எனது நோக்கையும், எனது அபிப்பிராயங்களையும் வெளிப்படுத்துவது எனது உருவாக்கத்தின் பின்னணி ஆகும்.

இது உண்மையில் ஒரு விளையாட்டு. சமூகத்தினுடனான விளையாட்டு. அரசிய லுடனான விளையாட்டு. இன் னொரு முறையில் சொல்வ தாயின் சமூகத்தின் அசைவுகளுடனான ஒரு யுத்தம் சினிமாவாகும். நான் சினிமா என்ற ஒரு நுண் கலையின் அல்லது ஒரு உயிருட்டியின் தன்மைகளை அதன் சொருபங்களில் இருந்து தான் வெளிப்படுத்த துணிகிறேன். மாறாக சடவாத சம்பிரதாயங்களில் இருந்தல்ல. குறிப்பாக சமூகம் ஒரு அறியாமைச் சுமையை சுமக்க எத்தனிக்கிறது என்றால், அதற்கு ஒத்தடம் கொடுக்க எனது சினிமா சிரம் சாய்க்காது என்கிறார் ஹந்தகம.

சினிமாவை அவர் ஒரு வெற்றுச் சட்டமாக பார்க்காது தமது விவரணங்களை அனுப்புகின்ற ஒரு பிரதான மூலமாகப் பார்க்கின்றார். ஹந்தகமவின் சினிமா அவரின் நேரடி ஆக்கிரமிப்புக்களால் ஏற்பட்ட காயங்களா? என்ற வினாவை அவரிடம் கேட்கத் தோனுகிறது.

இவரின் இரண்டாவது திரைப்படம் "மே மகே சந்த" (This Is My Moon) இது எனது நிலவு 2000ம் ஆண்டு வெளிவந்தது. இத்திரைப்படம் தமிழ் சிங்கள உறவு பற்றி பேசுகின்றது. இந்தத் திரைப்படம் 2002ம் ஆண்டுகளில் இலங்கையில் இருந்த யுத்தம், சமாதானம், முரண்பாடு, இனவாதம் உள்ளிட்ட அம்சங்களைப் பற்றி நேர்த்தி மிகுந்த பாணியில் பேசுகின்றது. அதனைத் தொடர்ந்து வெளிவந்த "தனி தட்டுவென் பியாம்பன்ன" - 2002. (ஒற்றை சிறகுகளால் பறத்தல்) என்ற திரைப்படம் பெண்ணியம் பற்றிப் பேசுகின்றது. ஒரு பெண் இரண்டு நிலை சார்ந்த பார்வைகளால் அவதியுருவதும் அவளது எண்ணங்கள் சமூகத்தின் மத்தியில் தோல்வியடைவதும் இந்தப் படத்தின் கதைக்கருவாகும். அதாவது ஓரினச் சேர்க்கை இதன் முக்கிய குறியாகும்.

2005 ம் ஆண்டு ஹந்தகமவின் தணிக்கைக்கு உட்பட்ட படம் "அக்சரய" (A Letter of Fire) இத் திரைப்படத்தில் உள்ள காட்சிகள் தாய்க்கும் சேய்க்கும் இடையில் இருக்கின்ற பரஸ்பரத்தைப் பற்றிப் பேசுகின்றது என்ற வாதம் ஹந்தகமவால் முன்வைக்கப்பட்ட போதும், அது பாலியல் கருத்தைப் பதிவு செய்கின்றது என்ற வாதத்தால் தணிக்கை உட்பட்டது. சமய வாதிகளும் அடிப்படைவாதிகளும் திரைக்கு வர முன்னர் வன்முறையில் இறங்கியதால் தடைசெய்யப்பட ஏதுவானதுடன் இவர் சமூக விரோதி என்றும் பொதுவாக ஊடகங்களால் விமர்சிக்கப்பட்டார்.

இந்தத் திரைப்படம் தணிக்கைக்கு உட்பட்டதன் பின்னரே ஹந்தகமவின் ஆளுமை விரிவாகப் பேசப்பட்டது.

இவரது படங்கள் பொதுவாக கலாசார அடிப்படை வாதிகளினதும், மரபு வாதிகளினதும் எதிர்ப்பைப் பெற்றுக்கொண்டன. அக்சரய திரைப்படம் திரைக்கு வராதபோதும் அது சீடிக்களாக வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இறுதியாக வெளிவந்த இவரது திரைப்படம் "விது" இத் திரைப்படம் அரசியல் தலைமைகளால் பாதிக்கப்பட்ட தனிமனித ஆளுமை நிறைந்த ஒரு சிறுவன் பற்றிப் பேசினாலும் ஆழமான நடைமுறை அரசியல் பற்றி குறியீட்டுப் படிமங்களுடன் வெளிப்படுத்தி இருந்தது.

இலங்கையில் நடைமுறையில் உள்ள அரசியல் கலாசாரம் எதிர்கால சந்ததியினரின் இருப்பை கேள்விக்குட்படுத்துகின்ற விதம் பற்றிய ஒரு அறிவுபூர்வமான வெளிப்பாட்டைத் தந்துத விது. சிறுவர் திரைப்படம் என்ற தோரணையிலேயே விது தன்னைப் பாதுகாத்துக்கொண்டது. 2010/2011 ஆகிய ஆண்டுகளில் ஊடகங்களால் அதிக கதையாடலுக்கு உட்பட்ட திரைப்படம் விது.

இவ்வாறான திரைப்படங்கள் அரசியல் வர்ணங்களால் பல சர்ச்சைகளுக்கும் எதிர்ப்புகளுக்கும் உட்பட்டிருந்தமை கண்கூடு.

இறுதியாக இவரது திரைப் படங்களில் பாலியல் காட்சிகள் வெள்ளிடையாகக் காட்டப் படுவதாக விமரிசனங்கள் முன் வைக்கப்படுகின்றன. இவரது சந்த கிணர, மே மகே சந்த, தனி தட்டுவென் பியாபன்ன, அக்சரய போன்ற திரைப்படங்களில் பாலியல் காட்சிகள் வெளிப் படையாக காட்டப்பட்டுள்ளன.

சடவாத மத இறுக்கங்கள் கலந்த ஒரு சமூகத்தில் இவ்வாறான பாலியல் காட்சிகள் கேள்விக் குட்படுவதும் அது ஏற்றுக் கொள்ளப் படுவதும் இருபக்க நியாயங்களைக் கொண்டிருந்தன.

சுனாமிக்குப் பின் எழுந்த சமூக ஒற்றுமை கருத்து முன்மொழிவை, வலுவூட்டும் வண்ணம் இவரது தொலைக்காட்சி நாடகம் ஒன்று தெரன தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகியது. தமிழ், முஸ்லிம், சிங்கள சமூகங்களுக்கிடையில் உள்ள இனத்துவ, அடையாளப் பிரிவுகளை ஒப்பீட்டும், அதனை களைவதற்குமான ஒரு ஊடக முயற்சியாக அமைந்தது. 2005ம் ஆண்டு இந்த தொலைக்காட்சி நாடகம் மக்களிடத்தில் பெரு வரவேற்புப் பெற்றது.

அண்மையில் ஹந்தகமயின் "இனி அவன்" என்ற திரைப்படம் வெளிவந்துள்ளது. இத்திரைப்படம் தமிழ் விடுதலைப் போராளி ஒருவரின் வாழ்வைப் பேசுகின்றது

திரு. ஹந்தகம அவர்களது ஆளுமையை இன்று சர்வதேசம் மெச்சிக் கொண்டிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிம்புவைத் தொடரும் நயன்



பக்தி முத்தியதால் இமயமலைக்கு சென்றார் நயன்தாரா. சிம்பு, பிரபுதேவாவுடன் காதல் முறிவு ஏற்பட்டதையடுத்து நடிப்பில் மட்டும் கவனம் செலுத்தி வருகிறார் நயன்தாரா. மீண்டும் நடிக்க வந்தபிறகு மொழி மற்றும் ஹீரோ பேதம் பார்க்காமல் நடித்து வருகிறார். சமீபத்தில் பாண்டிராஜ் இயக்கும் 'இது நம்ம ஆளு' படத்தில் மீண்டும் சிம்பு ஜோடியாக நடித்தார். இதையடுத்து உதயநிதியுடன் 'நண்பேன்டா' படத்திலும் ராஜா இயக்கத்தில் ஜெயம் ரவி ஜோடியாக புதிய படத்திலும் நடிக்கிறார்.

படப்பிடிப்பு முடிந்ததும் ஹரித்துவார், ரிஷிகேஷ் ஆகிய பகுதிகளுக்கு சென்ற நயன்தாரா, கோயில்களுக்கு நடந்து சென்று பக்தி பரவசத்துடன் சாமி கும்பிட்டார். ஏற்கனவே ரஜினி இமயமலைக்கு சென்று தியானம் செய்வது வழக்கம். சமீபத்தில் மன அமைதி தேடி இமயமலை சென்றார் சிம்பு. அவரைத் தொடர்ந்து நயன்தாராவும் இமயமலை சென்றிருக்கிறார்.

# அஞ்சான் - கெட்டவனா நல்லவனா



சூர்யா எந்த கதையையும் அத்தனை எளிதில் ஓ.கே செய்து விடுவதில்லை. எத்தனை பெரிய டைரக்டர் கதை சொன்னாலும் உடனே க்ரீன் சிக்னல் காட்டி விட மாட்டார். கதையை உள்வாங்கிக்கொண்டு சில நாட்களுக்குப் பிறகுதான் தனது முடிவை சொல்வார். அந்த வகையில் சிங்கம்-2 வுக்கு பிறகு பல கதைகள் கேட்டு அவர் ஓ.கே பண்ணி நடித்து வரும் படம் தான் 'அஞ்சான்'.

அதிலும் நல்லவன் கெட்டப்பை விட, கெட்டவன் கெட்டப்புக்கு நிறைய நேரம் செலவழித்திருக்கிறார்களாம். சூர்யாவை தாடி வளர்க்க வைத்ததோடு ஹேர் ஸ்டைலையும் புதுவிதமாக மாற்றியிருக்கிறார்கள். கதைப்படி மும்பையில் வாழும் தென் இந்தியராக நடிக்கும் சூர்யா, தனது நல்லவன் கெட்டப்பிலிருந்து எதற்காக கெட்டவனுக்கு மாறுகிறார் என்பதுதான் கதையில் புதிய திருப்பமாம். இந்த திருப்பத்திற்கு பிறகு சூர்யாவின் நடிப்பு படு அதிரடியாகவும், அதிர்ச்சி தரக்கூடியதாகவும் தற்போது விறுவிறுப்பாக படமாகிக்கொண்டிருக்கிறதாம்.

# செக்ஸி சமந்தா

லிங்குசாமி இயக்கத்தில் சூர்யா நடிக்கும் "அஞ்சான்" படத்தில் சமந்தா படுகிளாமராக நடிப்பதாக செய்திகள் கசிந்தன. இதுவரை சமந்தா தமிழில் மிக அதிகளவில் கிளாமராக நடித்தது இல்லை. ஆனால் அஞ்சான் படம் அந்த சாதனையை முறியடித்துவிடும் என்று கூறப்படுகிறது.

இதை பார்த்த மற்ற தயாரிப்பாளர்களும் இயக்குனர்களும் தங்கள் படத்தில் 'சமந்தா நீச்சலுடை போன்ற கிளாமரான உடையில் நடிக்கவேண்டும் என கோரிக்கை வைக்க ஆரம்பித்துவிட்டனர். இதனால் அதிர்ச்சி அடைந்த சமந்தா, "அஞ்சான்" படத்தில் பாடல் காட்சிகளில் மட்டுமே கவர்ச்சி காட்டியுள்ளேன். அதுவும் அந்த ஒரு படத்தில் மட்டும்தான். இனிவரும் படங்களில் கிளாமரை தொடரமுடியாது என்று கறாராக கூறிவிட்டாராம். இதற்கு இன்னொரு முக்கிய காரணம், சூர்யாவுடன் படுகிளாமராக நடித்ததை கேள்விப்பட்டு சித்தார்த் அதிர்ச்சி அடைந்ததாக கூறப்படுகிறது.



# துரத்தியடிக்கப்பட்ட மர்ம மனிதன்

'Mere Dad Ki Maruti' என்ற பாலிவுட் படத்தில் நடித்த Rhea Chakraborty என்ற பாலிவுட் நடிகை சமீபத்தில் தனது வீட்டில் தோட்டத்தில் நடைப்பயிற்சி பயின்று கொண்டிருந்தபோது, திடீரென சுவர் ஏறி குதித்த ஒரு மர்ம வாலிபர் அரைகுறை உடையுடன் இருந்த நடிகையை கட்டிப்பிடித்து சில்மிஷம் செய்தார். முதலில் அதிர்ச்சி அடைந்த நடிகை, பின்னர் தான் கற்று வைத்திருந்த தற்காப்பு கலையின் மூலம் அந்த மர்ம வாலிபரை தாக்க தொடங்கினார்.

நடிகையின் இந்த அதிரடி தாக்குதலை எதிர்பார்க்காத மர்ம வாலிபர் அதிர்ச்சி அடைந்து உடனடியாக மீண்டும் சுவரேறி தப்பித்து ஓடிவிட்டார். இதுகுறித்து டுவிட்டரில் கருத்து தெரிவித்துள்ளார் நடிகை.




## சினிமா குறுஞ்செய்திகள்



- நித்தியாமேனனுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி

உயரம் குறைவாக இருந்தாலும் அவருடைய நடிப்புக்காக அவர் கூறி வந்த நிபந்தனைகள் அனைத்தையும் சம்மதித்து வந்தனர். ஆனால் தற்போது அவரை கவர்ச்சியாக நடித்தேயாக வேண்டும் என்று இயக்குனர்கள் கூறுவதால் என்ன செய்வதென்னு தெரியாமல் திணருகின்றார் நித்தியா மேனன்.

- இரண்டு வருடமாக காதலிக்கின்றேன் - பிரியாமணி

உணர்வுகளை பகிர்ந்துகொள்வதற்காக நமக்காக நிச்சயம் ஒருவர் தேவைப்படுகிறார். குறிப்பாக வருத்தமாக இருக்கும்போது நம்மீது அக்கறை கொண்டவரிடம் பகிர்ந்துகொள்ளும்போது ஆறுதல் கிடைக்கிறது. அப்படியொரு மனம் படைத்தவர் எனக்கும் இருக்கிறார்.

- மான்கராத்தே விலை போனது

சுமார் 8 பட்ஜெட்டில் படத்தை முடித்துவிட்ட மதன், 18 கோடிக்கு வியாபாரம் செய்து 10 கோடி லாபம் பார்த்திருக்கிறாராம்.

- அஜித்துக்கு ஷாலினி தடை

முரகதாஸ் இயக்கும் படத்தில் நடிப்பதற்கு தன்னுடைய தடையை தெரிவித்துள்ளார் ஷாலினி.

- கோச்சடையானுக்கு சான்றிதழ்

கோச்சடையான் படத்திற்கு U சர்ட்டிபிகேட்டை சென்சார் அதிகாரிகள் நேற்று இயக்குனர் சௌந்தர்யாவிடம் அளித்தனர். சென்சார் சான்றிதழ் பெற்றுவிட்டபடியால் விரைவில் ரிலீஸ் தேதி அறிவிக்கப்படும் என தெரிகிறது.

# 'நிமிர்ந்து நில்' திரை விமர்சனம்

மிகவும் நேர்மையான ஒழுக்கமான கல்வியை கற்று வெளியே வரும் ஜெயம் ரவிக்கு தான் படித்த கல்விக்கு நேர்மாறாக மக்கள் நடந்து கொள்வது தெரிய வர, அநியாயத்தை கண்டு பொங்கி எழுகிறார். ஏற்கனவே சாமுராய், இந்தியன், அந்நியன் மற்றும் முதல்வன் படத்தில் சொன்னதை கொஞ்சம் சமுத்திரக்கனி தன்னுடைய பாணியில் சொல்லியிருக்கும் கதைதான் நிமிர்ந்து நில்.



கட்டாயப்படுத்தி லஞ்சம் கேட்கும் டிராபிக் போலீஸாரிடம் சிக்கும், ஜெயம் ரவி, லஞ்சம் கொடுக்க மறுக்கவே, அங்கிருந்து அவருக்கு பிரச்சனை ஆரம்பமாகிறது. நீதிமன்றத்திற்கு சென்று தான் நிரபராதி என்றும் நிரூபித்து அரசு அதிகாரிகளின் லஞ்சத்தனத்தை நிரூபிக்கிறார். லஞ்சவாதிகளுக்கு பாடம் புகட்ட நினைக்கும் ஜெயம் ரவி, தெஹல்கா பத்திரிகை போன்று வீடியோ ஆதாரத்துடன் பல லஞ்சப்புகார்களை படம்பிடித்து அந்த வீடியோவை நேரடி ஒளிபரப்பில் ஒளிபரப்புகிறார்.

சாட்டை படத்தின் மூலம் பள்ளிகளில் நடக்கும் அவலங்களை தோலுரித்து காட்டிய சமுத்திரக்கனி, இம்முறை கையில் எடுத்திருப்பது லஞ்சம் என்ற கொடிய அரக்கன். படத்தின் பிளஸ் பாயிண்ட் அவருடைய வசனங்கள் மட்டுமே. ஜெயம் ரவி ஆக்ரோஷமான வேடத்தில் மீண்டும் சிறப்பாக நடித்திருக்கிறார். முதல் பாதியில் அசத்தும் ஜெயம் ரவி, இரண்டாவது பாதியில் வரும் இரண்டாவது கேரக்டரில் சறுக்கி விழுகிறார். இரண்டாவது பாதி, தெலுங்கு படம் பார்ப்பது போல் இருக்கிறது.

இந்த படத்திற்கு ஹீரோயின் தேவையே இல்லை. தமிழ்சினிமா மரபுப்படி டூயட் பாடல்களுக்கு ஒரு ஹீரோயின் தேவை. அந்த தேவையை அமலாபால் பூர்த்தி செய்திருக்கிறார். முதன்முதலாக சூரிக்கு கருப்பு தங்கம் என்ற பட்டம் கொடுத்திருக்கின்றார்கள்.

குறைந்த நேரமே வந்தாலும், நீயா நானா கோபிநாத் மற்றும் சரத்குமார் கேரக்டர்கள் மனதில் நிற்கிறது. மிகச்சிறந்த படமாக வந்திருக்கவேண்டியது. சொதப்பலான இரண்டாவதி பாதியால் சராசரி படமாக மாறியுள்ளது.

# அமாலாபால் மீது புகார்

அம்மா, அப்பா, தம்பி சகிதமாகத்தான் படப்பிடிப்புக்கு வருகிறாராம் அமலாபால். அவர்களுக்கான ஹோட்டல், விமான டிக்கெட் செலவுகளே ஏகப்பட்ட லட்சங்களை காலி பண்ணிவிடுகிறதாம்.

அதோடு, எனக்கு உள்ளூர் மேக்கப் மேன், ஹேர் டிரஸ்ஸர் வேண்டாம். மும்பையிலிருந்துதான் மேக்கப் மேன், ஹேர் டிரஸ்ஸர் வர வைக்க வேண்டும் என்று கறாராகச் சொல்கிறாராம்.

அமலா பால் சொல்கிறபடி மும்பையிலிருந்து மேக்கப்மேன், ஹேர் டிரஸ்ஸரை வர வைத்தால் அவர்களுக்கு ஒரு நாள் சம்பளமாக 25 ஆயிரம் தவிர, அவர்கள் தங்கும் ஹோட்டல் செலவு வேறு.

# THE AMAZING SPIDER-MAN 2



மிகுந்த பொருட்செலவில் எடுக்கபட்டு வரும் THE AMAZING SPIDER-MAN 2 என்ற திரைப்படத்தின் புதிய டிரைலர் இன்று வெளியாகியுள்ளது.

இந்த படத்தை Marc Webb என்பவர் இயக்கியுள்ளார். Pharrell Williams, Hans Zimmer ஆகிய இரட்டையர்களின் இசையமைப்பைல் உருவான இந்த படத்தில் Andrewe Garfiled, Emma Stone, Jamie Foxx, Dane Dehann மற்றும் Paul Giamatti ஆகியோர் நடித்துள்ளனர்.

# 200 கோடி மர்மப்பணம்!! - பரபரப்பு

ஒரே சமயத்தில் கமல்ஹாசனின் உத்தமவில்லன், சூர்யாவின் அஞ்சான், மற்றும் விஜய் சேதுபதி, பாலாஜி சக்திவேல், விஜய் மில்டன் உள்பட பல படங்களை தயாரித்து வருகிறார் லிங்குசாமி.

ஒரே தயாரிப்பாளர் ஒரே நேரத்தில் எப்படி இத்தனை பெரிய மற்றும் சிறிய பட்ஜெட் படங்களை தயாரிக்கின்றார், இதுகுறித்து கோலிவுட்டில் பலவித கிசுகிசுக்கள் கசிந்து வருகிறது. மு.க.அழகிரியின் மகன் துரை தயாநிதி லிங்குசாமிக்கு சுமார் 200 கோடி ரூபாய் வட்டிக்கு பணம் கொடுத்து வைத்திருப்பதாகவும்,

இன்னொரு தரப்பினரோ மதுரை அன்புவிடம் மொத்தமாக 50 கோடிக்கும் மேல் லிங்குசாமி கடன் வாங்கி ஒவ்வொரு மாதமும் கரெக்டாக வட்டி கொடுத்து வருவதாகவும் கூறுகின்றனர்.

இந்த இரண்டு கிசுகிசுக்களும் கோலிவுட்டை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# ஸ்ரீதேவி - பாரதிராஜா ஜோடி

குழந்தை நட்சத்திரமாக சினிமாவில் அறிமுகமானவர் ஸ்ரீதேவி. பின்னர் சில காலம் காணாமல் போன அவரை, தனது முதல் படமான 16 வயதினிலே படத்தில் கமலுக்கு ஜோடியாக நடிக்க தேடிப்பிடித்துக் கொண்டு வந்தார் பாரதிராஜா. ஆக, அந்த படம் சூப்பர் ஹிட்டானதால் அதன்பிறகு குறுகிய காலத்திலேயே முன்னணி நடிகையாகி விட்டார் ஸ்ரீதேவி.

தென்னிந்திய சினிமாவில் புகழ் கொடி நாட்டியவர், பின்னர் பாலிவுட்டிற்கும் சென்று கனவுக்கன்னியாக திகழ்ந்தார். அதையடுத்து, தன்னை இந்திக்கு அழைத்து சென்ற தயாரிப்பாளர் போனி கபூரையே திருமணம் செய்து கொண்டு சிவகாசி ஸ்ரீதேவி மும்பைவாசியாகி விட்டார்.

இங்கிலீஷ் விங்கிலீஷை அடுத்து உடனடியாக படம் கிடைக்காதநிலையில், தமிழில் ஜி.வி.பிரகாஷ்குமார் நடிக்கவிருக்கும், த்ரிஷா இல்லேனா நயன்தாரா என்ற படத்தில் நடிக்கவிருக்கிறார்.



இப்படத்தில் தன்னை கதாநாயகியாக்கிய இயக்குனர் பாரதிராஜாவுக்கு ஜோடியாக ஸ்ரீதேவி நடிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SONY அறிமுகம் செய்யும் XPERIA Z2 டேப்லட்

தனது புத்தம் புதிய டேப்லட் ஆன Xperia Z2 இனை சோனி நிறுவனம் வெகு விரைவில் அறிமுகம் செய்து வைக்கவுள்ளது.

இந்த டேப்லட் ஆனது 10.1 அங்குல அளவுடையதும், 1920 x 1200 Pixel Resolution உடையதுமான தொடுதிரையினைக் கொண்டுள்ளதுடன், 2.3Ghz வேகத்தில் செயற்படக்நுடிய Quad Core Qualcomm Snapdragon 801 Processor, 3GB RAM மற்றும் 16GB சேமிப்பு நினைவகம் என்பவற்றினையும் கொண்டுள்ளது.



மேலும் கூகுளின் Android 4.4 KitKat இயங்குதளத்தினைக் கொண்டுள்ள இந்த டேப்லட்டில் 8.1 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 2.2 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

# ஒன்லைனில் கோப்புகளை இலவசமாக மாற்ற

ஒரு வகையான கோப்பினை பிறிதொரு வகையான கோப்பாக மாற்றுவதற்கு பல்வேறு மென்பொருட்கள் காணப்படுகின்றன. அவ்வாறே இவ்வசதியை ஒன்லைனில் தரும் சில இணையத்தளங்களும் காணப்படுகின்றன. அவற்றில் சில குறைந்தளவான கோப்பு வகைகளையே மாற்றம் செய்ய முடிவதுடன், பெரும்பாலானவற்றில் பணம் செலுத்தியே இச்சேவையினை பெற்றுக் கொள்ள வேண்டும். எனினும் CloudConvert எனும் இணையத்தளமானது இச்சேவையினை முற்றிலும் இலவசமாக வழங்குவதுடன், நூறிற்கு அதிகமாக கோப்பு வகைகளை மாற்றும் வசதியை கொண்டுள்ளது. அவற்றில் பல்வேறு Audio, Video, Document, Ebook, Archive, Image, Spreadsheet மற்றும் Presentation கோப்புகளும் அடங்கும்.




# Internet ஊடாக சாரதி அனுமதிப் பத்திரம்



புதிய தொழில்நுட்பங்களின் உதவியுடன் இணையம் மூலமாக சாரதிகளுக்கான அனுமதி பத்திரத்தை (Driving License) விண்ணப்பிக்கவும், பதிவு செய்யவும் கூடியதான செயற்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப் படவுள்ளதாக இலங்கை மோட்டார் வாகன போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.

குறித்த இணையம் ஊடான பதிவு சாரதி அனுமதி பத்திர பதிவு முறை நேற்று களுத்துறை மாவட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது குறித்த பதிவு முறை கொழும்பு, கம்பஹா மற்றும் குருநாகல் மாவட்டங்களில் ஆரம்பிக்கப்படுவதாகவும், கூடிய விரைவில் யாழ் மற்றும் கண்டியில் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் மூலம் நேரடியாக சென்று பதிவு செய்யும் நேரம் மற்றும் பணம் விரயம் தவிர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# விளையாட்டுப் பையன்

## இரட்டிப்பு கோப்புக்களை நீக்கும் வழி




கணனியில் கோப்புக்களை கையாளும்போது அவை இரட்டிப்படையக்கூடிய(Duplicate Files) சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன.

இவற்றினை தேடிப்பிடித்து நீக்குவதற்கு ஏற்படும் நேரவிரயத்தை தவிர்த்து இலகுவாகவும், விரைவாகவும் அக்கோப்புக்களை நீக்க DupeRAZOR எனும் மென்பொருள் பெரிதும் உதவியாக இருக்கின்றது.


இம்மென்பொருளானது எவ்விதமான கோப்பு இழப்பும் இன்றி தவறுதலாக இரட்டிப்படைந்த Driver கோப்புக்கள், இருமுறை தரவிறக்கம் செய்யப்பட்ட கோப்புக்கள் போன்றவற்றினை இலகுவாக நீக்கக்கூடியதாக காணப்படுகின்றது.

## பென்டிரைவில் ரீ சைக்கிள்

கணிணி மற்றும் லேப்டாப் பயன்படுத்துபவர்கள் ஏதாவது ஒரு பைலினை தவறுதலாக டெலிட் செய்தால் அதனை ரீசைக்கிள் பின்னிலிருந்து மீண்டும் எடுத்துக்கொள்ளலாம். ஆனால் பென்டிரைவ் மற்றும் மற்ற டேட்டா கார்டிலிருந்து ஒரு பைலினை டெலிட் செய்தால் அதனை மீண்டும் கொண்டுவருவது சிரமம். ஞாபக மறதிகாரர்கள் இவ்வாறு பைலினை டெலிட் செய்து பின்னர் அவதிக்குள்ளவர்கள். இவ்வாறு இவர்களின் சிரமம் நீக்குவதற்காக இந்த சின்ன சாப்ட்வேர் பயன்படுகின்றது. 650 கே.பி. அளவுள்ள இதனை பதிவிறக்கம் செய்து இன்ஸ்டால் செய்து உங்களுடைய பென் டிரைவ் மற்றும் ரீமுவபிள் டிரைவ்களில் பொருத்திக்கொள்ளவும். பின்னர் நீங்கள் வழக்கமான



## எழுத்து தொடர்பான ஷார்ட் கட்



எழுத்தின் அளவை மாற்ற CTRL+SHIFT+P
எழுத்தின் அளவை அதிகப்படுத்த CTRL+SHIFT+>
எழுத்தின் அளவைக் குறைக்க CTRL+SHIFT+<
எழுத்தின் அளவை ஒரு புள்ளி கூட்ட CTRL+]
எழுத்தின் அளவை ஒரு புள்ளி குறைக்க CTRL+[
பெரிய சிறிய எழுத்தாக மாற்ற SHIFT+F3
அனைத்தும் பெரிய எழுத்துக்களாக மாற்ற CTRL+SHIFT+A
ஒரு சொல்லை அடிக்கோடிட CTRL+ SHIFT+W
எழுத்தை சிறிய கேபிடல் எழுத்தாக அமைக்க CTRL+SHIFT+K
டெக்ஸ்ட் இரு கோடுகளில் அடிக்கோடிட CTRL+SHIFT+D
டெக்ஸ்ட்டை மறைக்க மீண்டும் கொண்டுவர CTRL+SHIFT+H
பைல் போல்டர் கண்டுபிடிக்க WINDOWS+F
ஆட்டோமேடிக் ஸ்பேஸிங் அமைக்க CTRL+="

# ஒரு கொலையின் கதை

2-4

இது ஒரு உண்மைச் சம்பவத்தைத் தழுவிய கதை...... கதையொன்றில் புனைவுகள்

அதற்கமைய அம் மூன்று திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன.....

அதன்படி சந்தேக நபர்களின் வீட்டைச் சோதனையிடும் திகதியை புலனாய்வாளர்கள் தீர்மானித்துக் கொண்டனர். அவ்வாறு தீர்மானிக்கும் போது திடீரென அங்கிருந்த புலனாய்வாளர் ஒருவர் மற்றொரு நடவடிக்கையின் தேவையையும் முன்மொழிந்தார்.

அது சந்தேக நபர்களின் வங்கிக் கணக்குகளை ஆராயும் முன்மொழிவாக இருந்தது.

கொலைச் சந்தேக நபர்களுக்கும் கொலைக்கும் கொலைக்கான அடிப்படைக் காரணத்திற்கும் இடையே தொடர்பினை ஏற்படுத்த புலனாய்வாளர்கள் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டிருந்தனர்.

ஏற்கனவே பேசப்பட்டது போல சந்தேக நபர்களிடம் இருந்து கொலைக்கான ஆழமான காரணத்தைப் புரிந்துகொள்ளவோ அறிந்து கொள்ளவோ முடியாதிருந்தது.

அலிக இங்கிலாந்தில் இருந்தமை. அத்துடன் அவனது கல்வி மட்டம் ஆகியன அவன் இக் கொலையுடன் சம்பந்தப்பட இனம் புரியாத தொடர்பொன்றை ஏற்படுத்தியிருந்ததாக புலனாய்வாளர்கள் நம்பினர்.

ஆனால் டொடி இந்தக் கொலையுடன் சம்பந்தப்பட்டமைக்கான ஒரே காரணம் அவன் கூலிக் கொலையாளியாக இருக்கலாம் என்ற சந்தேகமே.

ஆனால் டொடி கூலிக் கொலையாளியாக இருந்தால் அதற்கு முன்னரும் அவன் அவ்வாறான கொலைகளில் அல்லது கொலை முயற்சிகளிலாவது ஈடுபட்டிருக்க வேண்டும். ஆனால் அவன் தொடர்பாக அவன் வாழ்ந்த பிரதேசத்தின் கிராம சேவையாளரின் தரவுகள் ஒர தரவைத் தவிர, மிகவும் சுத்தமாக இருந்தன. அந்த ஒரு தரவு அவன் படையிலிருந்து தப்பி வந்தவன் என்பது மட்டுமே.

எனினும் இக்கொலையின் போது பணம் கூலியாகக் கைமாற்றப்பட்டிருக்க வேண்டும் என்ற உறுதியான நம்பிக்கை புலனாய்வாளர்களிடம் இருந்தது.

அவ்வாறு பணத்தொகை வங்கியின் ஊடாகப் பரிமாற்றப்பட்டிருந்தால் அத்தொகை எந்தக் கணக்கில் இருந்து அல்லது எங்கிருந்து பரிமாற்றப்பட்டிருந்தது என்பதை அறிந்துகொள்ளும் வாய்ப்பு இருந்தது.

எனவே நான்காவது நடவடிக்கையாக சந்தேக நபர்களின் வங்கிக் கணக்குகளை ஆராயும் முன்மொழிவையும் அனைவரும் ஏற்றுக் கொண்டனர். அம் முன்மொழிவை உடடின்யாகவே நீதிமன்றில் சமர்ப்பித்த புலனாய்வாளர்கள் அதற்கான கட்டளையை உரிய வங்கிகளுக்கு அனுப்பி வைக்கும் ஏற்பாட்டைப் பூரணப்படுத்தியிருந்தனர்.

இப்போது நான்கு முனைகளில் புலனாய்வுக் கரங்கள் நீட்டப்பட்டிருந்தன.

சந்தேக நபர்களின் கைத் தொலைபேசித் தொடர்பாடல் வரலாற்றைப் பெற்றுக் கொள்ளல், கொலை நடந்த இடத்திலிருந்து தடயப் பகுப்பாய்வாளரால் பெற்றுக்கொள்ளப்பட்ட இரத்த மாதிரிகளை டி.என்.ஏ பரீட்சிப்புக்கு அனுப்புதல், சந்தேக நபர்களின் வங்கிக் கணக்குகளை ஆராய்தல், சந்தேக நபர்களின் வீடுகளை ஆராய்தல் ஆகியனவே அவை.

இந்நான்கு கரங்களில் மூன்றின் செயற்பாடுகள் நீதிமன்றின் ஊடாக முன்னெடுக்கப்பட்டிருந்தது.

நான்காவது நடவடிக்கைக்கான திகதி நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

அந்த நாள் ஒரு அமைதியான வியாழக்கிழமை. ஒரே நேரத்தில் இருவரது வீடுகளையும் சல்லடையிடுவது எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அதற்கென நான்கு புலனாய்வாளர்களைக் கொண்ட இரண்டு அணிகள் தயார் படுத்தப்படடிருந்தன. கடமையை அதிகாலையிலேயே தொடங்குவது என்ற முடிவை அவர்கள் எடுத்திருந்தர்ர்கள். வீட்டிலிருந்து எவரைம் அன்றைய தினத்தில் வெளிச் செல்ல விடுவதில்லை என்ற தீர்மானத்திற்கு அதிகாலை 6.30 மணிக்கு ஆராய்வைத் தொடக்குவது சாலச் சிறந்தது என்பதே அவர்களின் முடிவாக இருந்தது.

அன்றைய நாள் தெளிவாக விடிந்த போது அலிக வின் வீட்டின் அழைப்புமணி ஒலித்தது.

இருமுறை ஒலித்த பின்னர் மெதுவாக அந்தப் பரிச்சயமான இளம் பெண் கதவை மெதுவாக ஒருக்களித்துத் திறந்தார்.

"காலை வணக்கம்... என்னை உங்களுக்கு ஞாபகம் இரக்கின்றதா?" என்ற அந்தபு புலனாய்வாளரின் கேள்விக்கு அப் பெண் பதிலளிக்க கால அவகாசத்தை நீட்டிக் கொண்டாள்.

எப்படி மறக்கும் அந்த முகம்.... முதலில் முகவரியொன்றை விசாரிப்பவனாக உள்நுழைந்து, பின்னர் வலுக்கட்டாயமாக உள் நுழைந்து அலறிய தனது கணவனின் வாய்க்குள் கைச் சுடகலனைச் சொருகிய அந்த மனிதனின் முகத்தை அவ்வளவு விரைவாக மறப்பதற்கு அவள் தயாரில்லைதான்.

ஆனால் அவனது வருகை அவள்ளை அந்த அதிகாலையில் இம்சிப்பதாகவே இருந்தது.... இன்று என்ன நடக்கப் போகின்றதோ? என்ற வினாவும் கேவலும் மனதெங்கும் படர்ந்து கண்களின் பணிப்பை ஏற்படுத்தியது (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## திருமலை மாவட்ட கனிஷ்ட தடகளப் போட்டி



இலங்கைத் தடகளச் சம்மேளனத்துடன் இணைந்து திருகோணமலை மாவட்ட தடகளச் சங்கம் இளையோருக்கான மாவட்டத் தடகளப் போட்டிகளை ஏற்பாடு செய்துள்ளது. இப் போட்டிகள் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன.

திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள இத் தடகளப் போட்டிகளில் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த 42 பாடசாலைகளின் 470 ஆண் மற்றும் 255 பெண் போட்டியாளர்கள் கலந்துகொள்ளவுள்ளனர் என திருமலைத் தடகளச் சங்கச் செயலர் எஸ். விஜயநீதன் தெரிவித்துள்ளார்.

16, 18 மற்றும் 20 வயதிற்குட்பட்டவர்களுக்கான பிரிவுகளாக நடைபெறும் இப் போட்டிகளின் வெற்றியாளர்கள் மே மாதம் 2ம் 4ம் திகதிகளில் நடைபெறவுள்ள தேசிய தடகளப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர். (கதிரவன்) (ஸ்ரீ)

## ஸ்ரீ சண்முகா - புனித மரியாள் - அபயபுரம் ம.வி வலைப்பந்தில் வெற்றி

திருகோணமலை கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்து போட்டிகள் செவ்வாய் 18.03.2014 புதன்கிழமைகளில் 19.03.2014 ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. 15, 17. 19 என்ற வயது பிரிவுகளில் நடத்தப்பட்ட போட்டியில் திருகோணமலை புனித மரியாள் கல்லூரி மூன்று போட்டிகளிலும் தமது ஆதிக்கத்தைச் செலுத்தி இருந்தன.

இப்போட்டிகளில் 15 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான போட்டியில் ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி சம்பியன் நிலையினையும், புனித மரியாள் கல்லூரி இரண்டாம் நிலையினையும் பெற்றுள்ளன. 17 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான போட்டியில் அபயபுரம் மகா வித்தியாலயம் சம்பியன் நிலையினையும். புனித மரியாள் கல்லூரி இரண்டாம் நிலையினையும் பெற்றுள்ளன. 19 வயதுக்கு உட்பட்வர்களுக்கான போட்டியில் புனித மரியாள் கல்லூரி சம்பியன் ஆக ,ஸ்ரீசண்முக இந்துமகளிர் கல்லூரி இரண்டாம் நிலையினையும் பெற்றுள்ளன.

(கதிரவன் திருகோணமலை)


சண்முகா அணி


அபயபுர அணி


சண்முகா அணி


மரியாள் அணி


மரியாள் அணி

## குறுஞ் செய்திகள்

- சர்வதேச ரி-20 போட்டிகளின் பின்னர் இலங்கையின் பிரபல்யமான வீரர்களான மஹேல ஜெயவர்தனவும், குமார் சங்ககாரவும் ஓய்வினை அறிவித்துள்ளனர்.
- இந்திய பிரிமியர் லீக் துடுப்பாட்டப் போட்டிகள் ஐக்கிய அரபு எமிரேட்சிலும் இந்தியாவிலும் நடைபெறவுள்ளது.
- பல சாதனைகளை புரிந்துள்ள லயோனல் மெஸ்சி, அதிக கோல் அடித்த வீரர் என்ற புதிய சாதனையை படைத்துள்ளார்.
- காணாமல் போன மலேசிய விமானத்தில் போலி பாஸ்போர்டில் பயணம் செய்ததாக கருதப்படும் நபரின் உருவம் கால்பந்து வீரர் பலோடெலியுடன் ஒத்துப்போவதாக தகவல்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
- என் தோல் மட்டும் வெள்ளையாக இருந்திருந்தால் 10 ஆண்டுகளுக்கும் மேலாக அணித்தலைவராக இருந்திருப்பேன் என கால்பந்தாட்ட வீரர் சோல் கேம்ப்பெல் தெரிவித்துள்ளார்.
- கால்பந்தாட்ட போட்டிகளின் போது வீரர்கள் முகத்திரை மற்றும் தலைப்பாகை அணிந்து விளையாட சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு(ஃபிபா) அனுமதி வழங்கியுள்ளது.
- சர்வதேச கிரிக்கெட்டின் அனைத்து சாதனைகளையும் கோஹ்லி முறியடிப்பார் என பாகிஸ்தான் அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரரான ஜாகீர் அப்பாஸ் தெரிவித்துள்ளார்.
- அவுஸ்திரேலிய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான மிட்சல் ஜான்சன், டுவென்டி-20 உலக கிண்ணப் போட்டியிலிருந்து விலகியுள்ளார்.
- டெல்லி டெயார் டெவில்ஸ் அணியின் தலைவராக கெவின் பீற்றர்சன், டெல்லி டெயார் டெவில்ஸ் அணியின் அணி முகாமைத்துவத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளார்.
- இலங்கை 14 வயதுப்பிரிவு பெண்கள் கால்பந்தாட்ட அணி சார்பாக தெல்லிப்பளை மாகஜனக் கல்லூரியின் பாஸ்கரன் சானு, சுரேந்திரன் கௌரி ஆகியோர் தேர்வு
- விளையாட்டு பொருட்கள் தயாரிக்கும் ஜேர்மனியின் பிரபல அடிடாஸ் நிறுவனம், பெண்களின் பின்னழகை குறிக்கும் வகையில் வெளியிட்ட கால்பந்து டி சர்ட், சர்ச்சையை கிளப்பியுள்ளது.

## உங்களது பிரதேசத்தில், கிராமத்தில் நிகழும் விளையாட்டுக்களை எங்களுக்குத் தெரிவியுங்கள்



# மலை முரசு குறுக்கெழுத்து புதிர் 002

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 15 | 16 ணி | ■ | 4 | 17 | 18 | 19 | 20 |
| ■ | 2 | | 21 | வ | | 5 | | |
| 3 ர | | | வ | | ■ | 6 | ப | |
| | ■ | ■ | 7 | | 22 | | | ■ |
| 8 | 23 | தி | | | | 9 | | ■ |
| | | ■ | | ■ | 10 | | | ■ |
| 11 | | 24 | | | ரி | ■ | ■ | ■ |
| ■ | | | ■ | 12 | | | | |
| 13 | | | | ப | ■ | 14 | | |

### இடமிருந்து வலமாக

1. மனித மூளைக்கு ஒப்பானது
2. சுருங்குதல் பெண்டிருக்கு அழகு
3. இதற்காகப் போராடுபவர்கள் சிலர்- குழம்பியுள்ளது
4. உள்ளார்ந்த மன உணர்வு
5. காகிதத்தின் மூலப்பொருள் - பின்னிருந்து முன்னாக உள்ளது- குழம்பியுள்ளது.
6. …… பழம்- குழம்பியுள்ளது.
7. தேயிலைக் கொழுந்து
8. சாணக்கியனுக்கு எதிரானவன்
9. நீரள்ளப் பயன்படும்
10. முத்தின் ஆங்கிலப் பெயர்
11. தர்மத்திற்கு எதிரானது குழம்பியுள்ளது.
12. பொருள் தரும் கடவுளின் பெயர்
13. பலவாத்தியங்களை இணைத்து இசைப்பது - குழம்பியுள்ளது.
14. நரம்பிசைக்கருவியை மீட்டிப் பாடுபவன்

### மேலிருந்து கீழாக

15. உயிர்கள் வாழ்வதற்கு இன்றியமையாதது - குழம்பியுள்ளது
16. மிருகங்களைப் பிடிக்க வைப்பது - தலைகீழாக உள்ளது
04. இளமைப்பருவம் - குழம்பியுள்ளது
17. படைப்புக் கடவுளின் பின்னிரு எழுத்துக்கள்
18. இலங்கையின் உற்ற நண்பன் - நடு எழுத்துக் குழம்பியுள்ளது
19. விடுப்புக் கதைப்பதை இப்படியும் சொல்லலாம் - குழம்பியுள்ளது
20. வயல் செய்யும் இடம்
21. புகழ்பெற்ற அமெரிக்க விண்ணோடம் குழம்பியுள்ளது
03. இயேசுபிரானை இப்படியும் அழைப்பர்
22. பண்டாரவன்னியனைக் கொன்ற படைத்தளபதியின் கடைசி எழுத்து குழம்பியுள்ளது
23. இதன் இரண்டு பக்கத்திற்கும் அடி- ஓர் எழுத்து குழம்பியுள்ளது
24. ……. இராணி

## குறுக்கெழுத்து புதிர் 001ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | ன் | 13 பு | ■ | 11 சி | று | 19 த் | தை | ■ |
| ■ | 2 க | ழ | அ | ன் | ■ | அ | ■ | 12 தை |
| 5 ழ | சு | ல் | ■ | ன | ■ | தை | 17 சி | ■ |
| ல் | ■ | ■ | 3 க | ம் | பு | ■ | ன் | 18 ஜா |
| 4 கு | 15 க் | சு | ரு | ■ | ■ | 20 ம் | ன | வ |
| ■ | 6 கா | ம | ணா | ற் | 16 போ | ன | வ | ர் |
| 7 ம் | அ | ர | க | ■ | க் | ■ | ன் | ண |
| து | ■ | ■ | ம் | ■ | 10 கு | ற் | ற | ம் |
| 9 பு | ல் | லு | ரு | வி | ■ | 8 ம் | க | ல |

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 250, ரூபா 150, ரூபா 100 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

**போட்டி முடிவுத் திகதி : 27.03.2014**

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :
மலைமுரசு. இல — 159ஏ,
கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி

01. இந்தக் குழந்தைகளுக்கு அடிக்கடி ......... உண்டாவது வழக்கம்.
(வளி, வலி, வழி)

02. உணவு உண்ட பின்னர் சிறிது தூரம் ............வது உடம்புக்கு நல்லது.
(உலவு, உளவு, உழவு)

03. சுதந்திர தின விழாவின் போது .......... வேடிக்கைகள் காட்டப்பட்டன.
(வாண, வான)

04. தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் .............. நிறுத்தம் செய்த காரணத்தால் அதன் வேலைகள் ஸ்தம்பிதமடைந்தன.
(வேலை, வேளை)

05. இன்று கிராமிய கலைஞர்களைக் காண்பது ............... காரியம் ஆகும்.
(அறிய, அரிய)

06. பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

துள்ளித் துள்ளி ஓடுது பார்
வெள்ளை முயல் அம்மா – அதை
மெல்ல ஓடிப் பிடித்திடவே
மிகவும் ஆசை அம்மா

பஞ்சு போன்ற உடலைத் தடவிப்
பார்க்க ஆசை அம்மா – நான்
கொஞ்சி பேசிக் கூடி ஆடிக்
குதிக்க வேண்டும் அம்மா

1. இங்கு விபரிக்கப்படும் பிராணி யாது?
2. 'அம்மா' என்பதன் பன்மைச் சொல்லை எழுதுக.
3. இப்பாடலில் இடம்பெற்றுள்ள உவமைத் தொடரை எழுதுக.
4. இங்கு இடம்பெற்றுள்ள இணைமொழியை எழுதுக.
5. இப்பாடலில் வந்துள்ள அடைமொழிச் சொல் ஒன்றை எழுதுக.
6. இப்பாடலில் உள்ள அடுக்கு மொழி யாது?
7. இங்கு இடம்பெற்றுள்ள உணர்திணை, ஒருமை, தன்மை, பெயர்ச்சொல் யாது?
8. 'உடல்' என்பதன் ஒத்த கருத்துச் சொற்கள் இரண்டை எழுதுக.

07. துவிச்சக்கர வண்டியில் ப்பயணம் செய்ய முன்பு, மிகவும் கவனிக்கப்பட வேண்டிய துவிச்சக்கர வண்டியின் பகுதி.
1. முன்பக்கச் சில்லுத்தடை 2. மணியடிக்க தயாராக இருத்தல்
3. பின் பக்கச் சில்லுத்தடை 4. ஆசனம்

08. துருப்பிடித்த ஆணிகாலில் குத்துவதால் ஏற்படக்கூடிய அபாயகரமான நோய் எது?
1. குக்கல் 2. ஏற்புவலி 3. காக்காவலி 4. மாரடைப்பு

09. வீட்டிற்கு வந்த கூட்டத்தவர் ஐம்பத்தியிரெண்டு பேருக்கு 75 மில்லிலீற்றர் வீதம் குளிர்பானம் பரிமாறப்பட்டது. அதற்காக எத்தனை பேத்தல்கள் குளிர்பானம் தேவை?

10. காலை 10.00 மணிக்கு குறிக்கப்பட்டிருந்த பேருந்து ஒன்று 20 நிமிடங்களின் பின்னர் பயணத்தை ஆரம்பித்தது. அப்பணயத்திற்கு 4 மணித்தியாலம் 45 நிமிடம் எடுத்தது எனின், பேருந்து பயணத்தை பூர்த்தி செய்த நேரம் என்ன?

11. ஒரு குழுவிலுள்ள 10 மாணவர்கள் ஒருவருக்கொருவர் காலை வணக்கம் தெரிவித்துக் கொண்டால், இம்மாணவர்களிடையே பரிமாறிக் கொள்ளப்பட்ட காலை வணக்கங்களின் எண்ணிக்கை யாது?
1. 9 2. 12 3. 13

12. மின்னல் தாக்கம் அதிகளவு ஏற்படும் சந்தர்ப்பம்?
1. வாகனத்தில் செல்லும் போது 2. திறந்த மைதானத்தில் நிற்கும் போது
3. பலகை இடப்பட்ட தரையில் நிற்கும் போது
4. தார் வீதியில் செல்லும் போது

13. தேசப்படத்தில் புகையிரதப் பாதையைக் குறிக்க பயன்படுத்தப்படும் நிறம் யாது?
1. கறுப்பு 2. சிவப்பு 3. கபிலம் 4. நீலம்

14. பயிர்களை வளர்ப்பதற்குப் பயன்படுத்தப்படும் மாற்று முறைகளில் அனுகூலமாக அமையாதது எது?
1. எளிதாக பராமரிக்கத் தக்கதாக இருத்தல்
2. இடவசதி உள்ள இடங்களில் மாத்திரம் பயிரிடத்தக்கதாக இருத்தல்
3. வெயில், மழை ஆகியவற்றிலிருந்து பாதுகாக்கத்தக்கதாக இருத்தல்.
4. தேவைப்படும் போது அங்கும், இங்கும் மாற்றக் கூடியதாக இருத்தல்

15. பழச்செய்கைக்கு பெரும்பாலும் தீங்கு விளைவிக்கும் பிராணி எது?
1. கரப்பான் 2. வெண்மூட்டுப் பூச்சி 3. மயிர்க்கொட்டி 4. சிலந்தி

16. இன்று வெள்ளிக்கிழமை, நாளை மறுநாள் 28 ஆம் திகதி ஆயின், சென்ற வெள்ளிக்கிழமை எத்தனையாம் திகதி?
1. 19 2. 20 3. 21

**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**





# சிறுவர் முரசு

க.கிர்ஷானி
தரம் – 09
திருகோணமலை



வி.கிர்ஷோத்
தரம் – 10
திருகோணமலை



உங்கள் குழந்தைகளின் ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி :
மலைமுரசு. இல - 159ஏ.
கடற்கரைக் காட்சி வீதி. திருகோணமலை.

## விடுகதைகள்


1. தொப்பி போட்ட காவல்காரன், உரசி விட்டால் சாம்பல் ஆவான்
2. மூடிய வெள்ளைக் கிணற்றுக்குள் மஞ்சள் நிலா
3. ஊர் சுற்றக் கூட வருவான் ஆனால் வீட்டுக்குள்ளே வரமாட்டான்
4. கிண்ணம் போல் பூ பூக்கும், பானை போல் காய் காய்க்கும்
5. பாட்டி வீட்டுத் தோட்டத்தில் தொங்குகின்ற பாம்புகள்
6. கீழே ஊற்றிய தண்ணீர் மேலே தொங்கி இனிக்குது
7. கரைந்து போகுது வெள்ளி

**விடைகள்**

1. தீக்குச்சி
2. முட்டை
3. செருப்பு
4. பூசணிக்காய்
5. புடலங்காய்
6. இளநீர்
7. வளர்பிறை நிலா

## கண்டுபிடியுங்கள்

இப்படத்தில் எத்தனை யானைகள் உள்ளன???



# புத்திசாலித்தனம்

குட்டிக்கதை

அரசனுக்கு வயதாகிக் கொண்டிருந்தது. தலைமுடி கொட்டி வழுக்கை அதிகமாகிக் கொண்டிருந்தது. அரசனுக்கு தன் கம்பீரம் குறைந்து விடும் என்ற கவலை அதிகமாகிப் போய் ஒரு நாள் அரசவைத் தலைமை மருத்துவனிடம் நிவாரணம் கேட்டான்.

தலைமை மருத்துவன் 'மன்னா! இதற்கு மருந்தே கிடையாது' என்று உண்மையைச் சொன்னான். அரசனுக்கு அந்த பதில் பிடிக்கவில்லை. கோபமடைந்தான். ஆத்திரம் தலைக்கேறி தலைமை மருத்துவனை சிறையில் அடைக்குமாறு உத்தரவிட்டான்.

ஊரில் இருக்கும் அனைத்து சிறந்த மருத்துவர்களையும் வரவழைத்தான். ஒரே வாரத்தில் தன் பிரச்சனைக்குத் தீர்வு கண்டுபிடிக்குமாறு பணித்தான்.



மருத்துவர்கள் அனைவரும் கூடி விவாதித்தனர். அரசனிடமிருந்து எப்படித் தப்பிப்பது என்றுதான் தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒரு துடிப்பான இளைஞன் இருந்தான். பிரச்சினைக்குத் தன்னிடம் தீர்வு இருப்பதாகக் கூறினான். அனுபவம் முதிர்ந்த வயதான மருத்துவர்கள் கூட்டத்தில் இருந்தனர். அவனைப் பார்த்து சிரித்தனர். 'வழுக்கைக்குத் தீர்வா? போய் வேறு வேலை இருந்தால் கவனியப்பா' என்று கூறினர்.

நாள் செல்லச் செல்ல அவர்களுக்கு அரசனிடமிருந்து தப்பிக்கும் வழி தெரியவில்லை.

அரசனை இந்த நிலையில் சந்தித்தால் கண்டிப்பாகத் தலைமை மருத்துவனுக்கு நேர்ந்த கதிதான் தமக்கும் நடக்கும் என்று எல்லோருக்கும் புரிந்தது. கதி கலங்கிக் கொண்டிருந்தார்கள். அப்போது இளைய மருத்துவன் திரும்பவும் 'என்னை நம்பினால் நம் எல்லோருக்கும் விடிவு நிச்சயம்' என்று கூறினான்.

வேறு வழியில்லாமல் அனைவரும் அவன் வழியில் செல்ல ஒத்துக் கொண்டார்கள். அவனோ, மருந்தை நேரடியாக அரசனிடம்தான் தருவேன், என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டான்.

அடுத்த நாள் சபை கூடியது. மருத்துவர்கள் இளைய மருத்துவனைக் கூட்டிக் கொண்டு அரசவைக்கு வந்தார்கள்.

அவன் அரசனிடம் ஒரு குடுவையைக் கொடுத்தான்.

'மன்னா இதில் இருக்கும் மருந்தை தினமும் சிரசில் தேய்த்துக் கொண்டு வந்தால், ஒரே மாதத்தில் முடி கொட்டுவது நின்று போகும். இரண்டே மாதத்தில் முடியில்லாத இடத்திலெல்லாம் முடி வளர ஆரம்பிக்கும், ஆறே மாதத்தில் கருகருவென தலையெங்கும் தலைமுடி அழகாக வளர்ந்திருக்கும்' என்றான்.

மன்னனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. 'இப்போதே அந்தப்புரத்திற்குப் போய் தலையில் மருந்தைத் தடவிக் கொள்கிறேன்' என்று கிளம்பினான்.

அப்போது மருத்துவன் 'மன்னா. இந்த மருந்து வேலை செய்ய வேண்டுமென்றால், அதைத் தலையில் தடவிக் கொள்ளும் போது மட்டும் நீங்கள் குரங்கை நினைக்கக் கூடாது!' என்றான்.



முட்டாள் மன்னன் சரியென்று சொன்னான். மந்திரியிடம் மருத்துவர்களுக்குப் பொன்னும் பொருளும் கொடுத்து சிறப்பாக மரியாதை செய்து அனுப்பி வைக்கச் சொல்லிவிட்டு அந்தப்புரத்திற்கு வேகமாகச் சென்று விட்டான். மருத்துவர்களும் தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஊரை விட்டே ஓடி விட்டார்கள்.

அந்தப்புரத்திற்குச் சென்ற அரசன், அங்கு குடுவையைக் கையில் எடுத்து அதிலிருந்த மருந்தைத் தலையில் தேய்க்கப் போனான். அப்போது அவனுக்கு மருத்துவன் சொல்லிய பக்குவம் கவனத்திற்கு வந்தது. 'குரங்கை நினைக்கக் கூடாது' என்று நினைத்தவுடன் குரங்கைப் பற்றி நினைக்க ஆரம்பித்து விட்டான். என்ன முயற்சித்தும் அவன் நினைவிலிருந்து குரங்கை அகற்ற இயலவில்லை.

மன்னனுக்கு மருத்துவனின் தந்திரம் புரியவில்லை. சற்று நேரம் கழித்து முயற்சிப்போம் என்று வேறு வேலையில் ஈடுபட்டான். ஆனால் ஒவ்வொரு முறை அவன் மருந்தைக் கையில் எடுத்த போதும் மருத்துவனின் அறிவுரை மனதில் தோன்றி அவனுக்குக் குரங்கு பற்றிய யோசனை வந்து கொண்டே இருந்தது. பல நாள் திரும்பத் திரும்ப முயற்சித்து விட்டு, இந்தச் சிரமத்திற்குப் பேசாமல் வழுக்கையாகவே இருந்து விடலாம் என்று தீர்மானித்து விட்டான்.

முற்றும். . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

1. 15வீதம் வழங்கும் கம்பனியின் ரூ 10 பங்குகளை ரூ 8 படியும் இ 18வீதம் வழங்கும் கம்பனியின் ரூ 10 பங்குகளை ரூ 12 படியும் வாங்குவத்ற்கு ரூ 28000 ஐ ஒருவர் முதலீடு செய்கிறார்.

1. இரு கம்பனிகளிலிருந்தும் அவருக்குக் கிடைக்கும் மொத்த வருமானம் ரூ 4800 எனின் ஒவ்வொரு கம்பனியிலும் எவ்வளவு முதலீடு செய்தார்?

2. ஒரு மோட்டார் சைக்கிள் முதல் 30Km ஐ $40Kmh^{-1}$ எனும் கதியிலும் அடுத்த 40Km ஐ 30 $Kmh^{-1}$ எனும் கதியிலும் இறுதி 70Km ஐ $60Kmh^{-1}$ எனும் கதியிலும் பயணம் செய்தால் மோட்டார் சைக்கிளின் சராசரி கதியைக் காண்க.

3. ஒரு மனிதன் நிற்கும் இடத்திலிருந்து 500மீ தூரத்தில் நிறுத்தப்பட்டுள்ள வானூர்தி ஒன்று நிலைக்குத்தாக மேலே எழுகின்றது. 5 செக்கன்களின் பின்னர் அது நிலத்திலிருந்து அம்மனிதனுக்கு 30 பாகை ஏற்றக்கோணத்தில் காணப்படுகின்றது எனின் வானூர்தி மேலெழுகின்ற வேகத்தைக் காண்க.

4. சுட்டி அறிவை பயன்படுத்தி x , y ஐ காண்க.

$$4^{x} = 64^{y+4} \quad , \quad 25^{y} = 5^{x-18}$$

5.தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றின் விற்பனை விலை ரூ 24000 ஆகும். உடன் காசுக்கு வாங்கும் போது 5வீதம் கழிவு கொடுக்கப்படுகின்றது. வாடகை கொள்வனவு முறையில் வாங்கும் போது முதலில் ரூபா 16000 செலுத்தி மீதியை சம மாதாந்தக் கட்டணங்களாக 6 மாதங்களில் செலுத்த வேண்டும். அறவிடப்படும் மா்த வட்டி வீதம் 1.5வீதம் ஆகும்.

1) உடன் காசுக்கு வாங்கும் போது செலுத்த வேண்டிய பணம் எவ்வளவு?

2) வாடகை கொள்வனவு முறையில் செலுத்தப்படுமாயின் ஒரு தவணைக் கட்டணம் எவ்வளவு?

3) வாடகை கொள்வனவு முறையில் வாங்கிய ஒருவர் உடன் காசுக்கு வாங்கி இருந்தால் எவ்வளவு பணத்தைச் சேமித்திருப்பார்?

6. ஒரு போட்டியில் 5 மாணவர்களும் 3 மாணவிகளுமாக மொத்தம் 8 பேர் பங்குபற்றினர். இதில் முதல் இரண்டு இடங்கள் தெரிவு செய்யப்பட்டது.

1) இதற்கான புள்ளி வரைபை வரைக.

2) பின்வருவனவற்றின் நிகழ்தகவுகளைக் காண்க.

அ) இருவரும் மாணவர்களாக இருத்தல்

ஆ) ஒருவர் மாணவனாகவும் மற்றவர் மாணவியாகவும் இருத்தல்

இ) ஒருவரேனும் மாணவியாக இருத்தல்.

7. கூட்டல் விருத்தியொன்றில் முதல் 15 உறுப்புக்களினதும் கூட்டுத்தொகை –255 ஆகும். கடைசி உறுப்பு - 45 ஆகும்.

பின்வருவனவற்றைக் காண்க.

1) முதல் உறுப்பு
2) பொது வித்தியாசம்
3) 10ம் உறுப்பு

8. ஒரு பெருக்கல் விருத்தியின் இரண்டாம் உறுப்பினதும் மூன்றாம் உறுப்பினதும் கூட்டுத்தொகை 3 ஆகும். இப் பெருக்கல் விருத்தியின் நான்காம் உறுப்பின் 8 மடங்கு அதன் எழாம் உறுப்பிற்கு சமனாகும்.

i) முதலாம் உறுப்பு
ii) பொது விகிதம்
iii) இப் பெருக்கல் விருத்தியின் இருபத்தேழாம் உறுப்பை இரண்டின் வலுவில் தருக.
iv) முதல் 10 உறுப்பின் கூட்டுத்தொகையைக் காண்க.

09. வர்த்தகர் ஒருவர் 2000 சிங்கப்பூர் டொலர் பெறுமதியான பூக்களை சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்கின்றார். அவர் அந்நியச்செலாவணியை ஐக்கிய அரசுகள் டொலரில் பெறுவாரெனின், அவருக்குக் கிடைக்கும் தொகை ஐக்கிய அரசுகள் டொலரில் எவ்வளவாகும்?
(ஒரு சிங்கப்பூர் டொலர் = 53.80 இலங்கை ரூபா, ஒரு ஐக்கிய அரசுகள் டொலரில் = 94.80 இலங்கை ரூபா) விடையை கிட்டிய டொலரில் தருக.

10. எனக்கு வயது இப்போது y ஆண்டுகள் எனின், 8 ஆண்டுகளுக்கு முன் எனது வயது யாது?

**கணிதம் வழிகாட்டல் :**
**திருமலையின் பிரபல ஆசிரியர் T.குமணன்**

**MATHS**
Personal Classes Year 06, 07, 08, 09, 10 & G.C.E (O/L)
**T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**
G.C.E (O/L) பிரதி சனி தோறும்
பரீட்சைக்குச் சகல மாணவர்களும் பங்குபெற்றலாம்.

## பாடம் : வரலாறு

01.(அ) இலங்கையில் பின்வரும் குடியேற்றங்கள் நிறுவப்பட்ட ஆற்றுப்பள்ளத்தாக்குகளை A,B,C ஒழுங்கில் தருக?

A - அநுராதகம B - உருவெலகம C - தீகவாபி

(ஆ) பின்வரும் விடயங்களுடன் தொடர்புடைய மன்னர்களை A,B,C,D ஒழுங்கில் தருக

அ மிகப் பெரிய தூபியான ஜேத்தவனராமயவை அமைத்தல்

ஆ வடக்கு கிழக்கு பகுதிகளில் வாழ்ந்தஆரியர் குழுக்களை ஒன்றிணைந்து இராசதானி உருவாக்கல்

இ முதன் முதலில் பௌத்த சமயத்தை பின்பற்றல்

ஈ மகாமேகவன பூங்காவை அமைத்தல்

(இ) இலங்கையில் வலகம்பாவின் காலம் சமயரீதியான முக்கியத்துவம் வாய்ந்த காலமாகும் என்பதை இரண்டு விடயங்கள் ஊடாக விளக்குக.

(ஈ) பௌத்தசமயம் பரவியதால் ஏற்பட்ட மாற்றங்களை பின்வரும் தலைப்பில் விளங்குக. 1. சமூகம் 2. கல்வி

02. (அ) இலங்கையில் நீர்வள நாகரிக காலத்தில் சிறந்த அரசியல், பொருளாதார கட்டமைப்பை காணலாம். பின்வரும் விடயங்களுடன் தொடர்புடைய மன்னர்களைத் தருக.

A – யோத கால்வாயைஅமைத்தல் B - பர்மா மீது படையெடுத்தல்

C - சோழர் ஆட்சியிலிருந்து நாட்டை விடுவித்தல்

(ஆ)பின்வரும் மன்னர் காலத்தில் இடம் பெற்ற அந்நிய ஆக்கிரமிப்புக்களை A,B,C,D ஒழுங்கில் தருக.

A - வலகம்பா B - மித்தசேனன் C - 1 ம் சே ன ன்

D - வங்கநாசிகதிஸ்ஸ

(இ) இலங்கையில் பொலநறுவை ஆட்சியாளர்களுள் நிஸ்ஸங்கமல்ல மன்னன் முக்கியத்துவம் பெறுகிறான் என்பதை இரு விடயங்கள் கொண்டு விபரிக்குக.

(ஈ) நீர்வளநாகரிகம் வீழ்ச்சி அடைவதில் கலிங்கமாகனின் படையெடுப்பு பங்களித்த விதத்தை சுருக்கமாக விவரிக்குக.

03. கலிங்கமாகனின் படையெடுப்பின் பின் இராசதனி தென்மேற்கு நோக்கி இடம் பெயர்ந்ததுடன் மக்களின் பொருளாதார, சமூக நடவடிக்கையும் மாற்றமடைந்தன

(அ)1. இந்தியாவின் அதிவீரராம பட்டினத்தை ஆக்கிரமித்தல்

2. பாண்டிமன்னனுடன் நட்புக் கொண்டு தந்ததாதுவை மீட்டு வந்த மன்னன்

3. குருணாகலில் அந்துக்கல்புரவை தலைநகராக்குதல்

மேற்படி நிகழ்வுகளுடன் தொடர்புடைய ஆட்சியாளர்களைத் தருக.

(ஆ) கம்பளை இராசதானியாக தெரிவு செய்யப்பட்டமையில் பங்களித்த காரணிகள் இரண்டைத் தருக?

(இ) 6ம் பராக்கிரமபாகுவின் முக்கியத்துவத்தை இரண்டு காரணிகள் ஊடாக விளக்குக.

(ஈ) தென்மேற்கு நோக்கி இடம் பெயர்ந்த காலத்தில் இடம் பெற்ற பொருளாதார மாற்றங்களை விவரிக்குக

04. (அ) A. இலங்கையில் சட்டவாக்கக் கழகத்திற்கு தெரிவான முதல் கல்வி கற்ற இலங்கையர்

B. 1818 ஆம் கிளர்ச்சியின் போது பிரித்தானியாருக்கு சார்பாக நடந்து கொண்ட பிரதானி

C. 1948 ஆம் ஆண்டு சுகந்திர இலங்கையின் முதல் பிரதமர்

மேற்படி விடயங்களை தொடர்புடையவர்களை A,B,C ஒழுங்கில் தருக.

(ஆ) இலங்கையின் கோப்பி செய்கை விருத்திக்கு பங்களித்த காரணிகள் இரண்டை தருக?

(இ) 1848 ஆம் ஆண்டு கிளர்ச்சிக்கு கோல்புறூக் கமரன் சீர்திருந்தம் காரணமான விதத்தை இரு காரணிகள் ஊடாக விளக்குக.

(ஈ) பிரித்தானியர் கண்டியை கைப்பற்ற அங்கு காணப்பட்ட அரசியல் குழப்பங்களே காரணமாகும். இக்கூற்றை மூன்று விடயங்கள் கொண்டு விபரிக்குக.

ஆசிரியர் : த.அகிலன், Dip. in. Tech. (Merit)
புனித மரியாள் கல்லூரி, திருகோணமலை - சுடர் ஒளி வெற்றிப்படி ஆசிரியர், ஆறுதல் நிறுவன வரலாற்றுப் பாட ஆசிரியர்



**பிரதி சனிக்கிழமைகளில் காலை 6-7 மணிவரை தரம் 6, 7, 8 மாணவர்களுக்கான வரலாறு புவியியல் பாடங்களுக்கான வெற்றிப்படி பரீட்சை நடைபெறும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநீதிகளுக்கு....

எங்களை தேசத்துரோகிகள், நாட்டைக் காட்டிக் கொடுப்பவர்கள் என்று அரச தரப்பினர் கூறுகின்றார்கள். தமிழினத்தின் தேசியப்பிரச்சினையை அரசு சமஸ்டிமுறையில் தீர்த்து வைத்திருந்தால் நாங்கள் ஏன் ஜெனிவாவுக்குப் போக வேண்டும்? வடக்கு, கிழக்கிலுள்ள இந்துக்கள் மாத்திரமன்றித் தலைநகரிலுள்ள இந்துக்களும் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். 80 வருடங்களுக்கு மேலாக அலரிமாளிகைக்குப் பின்னால் இருந்த இந்துக் கோயில் இன்று அகற்றப்பட்டுள்ளது. 116 சிங்களக் குடும்பங்கள் மட்டக்களப்பு கெவுளியாமடுவிலும், புழுக்குனாவையிலும் அத்துமீறி குடியேறி இருக்கின்றனர். இந்த நாட்டில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்குத் தீர்வு கிட்டவேண்டிய நேரத்தில் இறைவன் திருக்கேதீஸ்வரத்திலும், திருகோணமலை அடிவாரத்திலும், எமது மக்களைக் கொன்றொழித்த எச்சங்களை வெளி உலகுக்குக் காட்ட வேண்டிய நேரத்தில் காட்டியுள்ளார். நாங்கள் வழிபடும் தெய்வங்கள் எவ்வளவு சக்திமிக்கவை என்று இதிலிருந்து நாம் கண்கூடாகக் கண்டுள்ளோம். இன்று ஜெனிவாவுக்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகள் சென்று நியாயம் கேட்கப்போனால் எங்களைத் தேசத்துரோகிகள், நாட்டைக்காட்டிக் கொடுப்பவர்கள் என்று அரசதரப்பினர் கூறுகின்றனர்.

தமிழ் மக்கள் இன்னமும் வடக்கு, கிழக்கில் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆயதப் போராட்டம் முடிவுக்கு வந்து 5 வருடங்கள் கழிந்த பின்னரும் இன்றும் சம்பூரில் அகதி முகாம்கள் இருந்து வருகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பாலமுனை, முறக்கொட்டாஞ்சேனை போன்ற இடங்களில் தமிழ் மக்களின் காணிகள், வீடுகள் அரச படைகளின் முகாம்களுக்குள் இருக்கின்றன. தமிழ் மக்களது காணிகளை இராணுவத்தினர் அவர்களது சொந்தக்காணி போன்று பயன்படுத்தும் அதேவேளை அந்தத் தமிழ் மக்கள் தமது உறவினர்களின் வீடுகளில் வசித்து வருகின்றனர். எமது இனப்பரம்பலைத் திட்டமிட்டு நசுக்க வேண்டும் என்று அரசு நினைக்கின்றது. 100 வீதம் தமிழ் மக்கள் வாழ்ந்த பட்டிருப்புத் தேர்தல் தொகுதி தற்போழுது ஓரிரு சிங்கள கிராமங்கள் கொண்ட தொகுதியாக மாறியுள்ளது. கிழக்கு மாகாணத்தில் இன்று தமிழ் மக்கள் 40 வீதமாகவும், ஏனைய மக்கள் 60 வீதமாகவும் ஆகியுள்ளனர். ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டு 5 வருடங்களாகியும் எந்தவித தீர்வுகளும் இது வரையில் எட்டப்படாத காரணத்தினால்தான் நாங்கள் ஜெனிவா சென்றுள்ளோம். வடக்கு, கிழக்கில் ஆயுதப் போராட்டத்துக்கு முன்பிருந்த இராணுவ ஆட்சி இன்று வரை தொடர்ந்து கொண்டு இருக்கின்றன.இதற்கான பிரதான காரணம் வடக்கில் முன்னாள் இராணுவ அதிகாரி ஆளுநராகவும், கிழக்கில் முன்னாள் கடற்படை அதிகாரி ஆளுநராக செயற்படுவதாகும் என்றார்.

## கங்குவேலி....

பெரும் அச்சமடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாபனத்தைப் புனர்நிர்மாணம் செய்வதற்கு திருமலை மாவட்டச் செயலாளர் தனது பூரண ஒத்துழைப்பை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதனையடுத்து அங்கு கோயிலைக் கட்டுவதற்காக அளவுப்பிரமாணப்படி அடிக்கப்பட்டிருந்து கூனிகளை முச்சக்கரவண்டியொன்றில் வருகை 'தந்த தேரரும் அவரது சகாக்களும் கழற்றியெறிந்துள்ளதுடன் குருக்களுக்கு எச்சரிக்கையையும் விடுத்துச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து மறுநாள் மூதூர் பிரதேசச் செயலாளர் மற்றும் காவல்துறையின் பூரண பாதுகாப்புடன் கட்டுமாணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்துள்ளன.

அதேவேளை கடந்த 18ம் திகதி கூடிய மூதூர் பிரதேச இந்துக் குருமார் சங்கம் இவ்வச்சுறுத்தல் தொடர்பாக கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது. அச்சாங்கம் மேலும் தெரிவிக்கையில் கங்குவேலியில் அமைந்துள்ள அகத்திய ஸ்தாபனம் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்துக்களுக்கான பூமி என அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு கட்டுமாணப் பணிகள் நடந்த வண்ணம் உள்ளது. அரச அதிகாரிகளும் முழு ஒத்துழைப்பை வழங்கிவருகின்றனர். இத்தருவாயில் சேருநுவர பிரதேச தெஹியத்த சேர்ந்த பௌத்த குரு தனது சகாக்களுடன் வந்து தடை ஏற்படுத்தியதுடன், இனங்களிடையே முறுகல் நிலையையும் ஏற்படுத்த முயன்றுவருகின்றார். அதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம். அத்துடன் அனைத்துத் தரப்பினரும் இவ்விடயத்தில் தலையிட்டுச் சுமகமான தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் எனக் கோரிக்கையும் விடுக்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## நூற்றுக்கணக்...

மூலமான சாட்சியங்கள் பெறப்பட உள்ளன.

நாடு முழுவதிலும் இருந்து 16 ஆயிரம் முறைப்பாடுகள் ஆணைக்குழுவிற்கு கிடைத்துள்ளதுடன் அவற்றில் 9 ஆயிரத்து 300 முறைப்பாடுகள் பொதுமக்கள் காணாமல் போனமை தொடர்பானது.

ஏனைய 4 ஆயிரத்து 300 முறைப்பாடுகள் பாதுகாப்புப்படையினர் காணாமல் போனமை சம்பந்தமானதாகும்.

நான்கு பேரைக் கொண்ட இந்த ஆணைக்குழுவின் தலைவராக மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம செயற்பட்டு வருகிறார். பிரியந்தி சுரஞ்சன விஜேரத்ன, திருமதி மனோ ராமநாதன் ஆகியோர் ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாவர்.

முறைப்பாடுகளைப் பெறவும் அது குறித்து விசாரணைகளை நடத்தி அறிக்கையைத் தயாரிக்க இந்த ஆணைக்குழுவிற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

ஆறுமாதப் பதவிக்காலத்தை கொண்ட இந்த ஆணைக்குழுவின் பதவிக்காலத்தை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் வரை மேலும் ஆறு மாத காலத்திற்கு ஜனாதிபதி நீடிப்புச் செய்துள்ளார்.

## அரசியல் சட்டத்தை..

சொல்லை ஐக்கியநாடுகள் சபை ஏற்றுக்கொள்ளாதிருப்பதால் அவர் ஏற்றுக்கொள்ளப்பட்ட வார்த்தைப் பிரயோகங்களை மீறியுள்ளார் என்றும் அரசின் தரப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

எனினும் இக்குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ள அனந்தி "தமிழ்ஈழம்" என்ற வார்த்தையினை தான் பாவிக்கவில்லை என்றும் "ஈழத்தமிழர்" என்னும் வார்த்தையையே தான் பாவித்ததாகவும் தெரிவித்துள்ளார்.

## ஓய்வூதியப் பணிக்....

ஊழியருக்கு அவர் இளைப்பாறியவுடன் 24 மாதச் சம்பளத்தை வழங்கும் முறையாக இவ் ஓய்வூதியப்பணிக்கொடை காணப்படுகின்றது. இவ்வாறு வழங்கப்படும் தொகையினை வழங்கப்படும் ஓய்வூதியத்தில் இருந்து அடுத்து வரும் 10 வருடங்களில் கழித்து மீளப் பெற்றுக்கொள்ளும் நடைமுறையே இல்லாதொழிக்கப்படுகின்றது.

இம்முறையினை இல்லாதொழித்துவிட்டு அரச ஊழியருக்கு வங்கிகள் மூலம் கடன் வழங்கும் நடவடிக்கையை அரசு முன்மொழிந்துள்ளது. இவ்வங்கிக்கடனைப் பெறும்போது சாதாரண வங்கிக்கடனைப் பெறும் நடைமுறைகளின் ஊடாகவே இளைப்பாறும் ஆசிரியர்கள் கடன் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் இச்சங்கம் தெரிவித்துள்ளது.

## கல்லடியில் மகளிர் தினம்

(கல்லடி நிருபர்)

சர்வதேச மகளிர் தினத்தினை முன்னிட்டு கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் கே.லாவணாதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட அம்பாறை மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் கே.விமலநாதன் உட்பட ஏனைய அதிதிகளை வரவேற்பதையும், ஒவ்வொரு துறைகளிலும் சாதனை படைத்த பெண்களை பாராட்டி அதிதிகளால் சான்றிதழ் வழங்குவதையும் படங்களில் காணலாம்.




## இயல்பு வாழ்வைப்....

காவல்துறைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆர்ப்பாட்டப் பேரணியொன்று நடாத்தப்பட்டதுடன் ஐக்கியநாடுகள் ,சபையின் நடவடிக்கைகளுக்கு எதிரான மனுவொன்றையும் மாவட்டச் செயலாளரிடம் குறித்த அமைப்பின் முதல்நிலைச் செயற்பாட்டாளர்களான பிக்குகள் கையளித்தனர்.

அத்துடன் ஐநாவினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உருவ பொம்மையொன்றையும் அவர்கள் எரித்துச் சாம்பலாக்கினர். (படங்கள்- அனுர-உதயா-வர்ணன்-ஆதவன்)





## மாகாண சபையில்....

மாகாண சபை உறுப்பினர்கள் பதவிகள் வறிதாக்கப் பட்டுள்ளதாக கிழக்கு ' மாகாண சபையின் கூட்டம் சென்ற 18 ம் திகதி நடைபெற்ற போது கிழக்கு மாகாண சபையின் தவிசாளர் திருமதி ஆரியவதி கலப்பதி சார்பில் வீதி அபிவிருத்தி அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான எம்.எஸ்.உதுமாலெப்பை சபையில் விசேட அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தார்.

கிழக்கு மாகாண சபையின் உறுப்பினர்களான திரு.தயாகமகே, ஏ.எம்.ஜெமில், ஸ்ரீ.பிரியந்த பிரேமகுமார ஆகியோர் கடைசியாக சபைக் கூட்டத்திற்கு வருகை தந்து தங்களின் வரவைப் பதிவு செய்த தினங்களில் இருந்து 90 நாட்கள் கடந்த நிலையில் அதற்கு இடைப்பட்ட காலத்தில் நடைபெற்ற சபையின் எந்தவொரு கூட்டத்திற்கும் சமூகம் அழிக்காமல். இருப்பதாகவும் அத்துடன் அவர்கள் மூவரும் தங்களது வராமைக்காக சபையின் முன் அனுமதி எதனையும் பெற்றிருக்கவில்லை எனவும் கிழக்கு மாகாண சபை தவிசாளர் அறிவித்துள்ளார். அதன் பிரகாரம் இம் மூன்று உறுப்பினர்களுக்கான ஆசனங்கள் வறிதாக்கப்படுவதான ஒரு பிரகடனத்தை கிழக்கு மாகாண சபையின் தவிசாளரின் பிரதிநிதியாக இச்சபைக்கு சமர்பிக்கின்றேன்.

எனவே கிழக்கு மாகாண சபை இது தொடர்பான ஒரு பிரகடனத்தை குறித்த சட்ட ஏற்பாடுகளின் (29) பிரிவின் பிரகாரம் நிறைவேற்ற இச்சபைக்கு முன் மொழிகின்றேன் என அமைச்சர் அப்பிரேரணையை வாசித்தார். எனினும் அவர்கள் மூவரும் சபைக்கு வராமைக்கான ஏற்றுக் கொள்ளத்தக்க காரணங்களைச் சபைக்குத் தெரியப்படுத்தியிருந்ததை அடுத்து உறுப்புரிமை தொடர்பாக வாக்கெடுப்பு நடாத்தப்பட்டு இம் மூன்று உறுப்பினர்களும் தொடர்ந்து கிழக்கு மாகாண சபையின் உறுப்பினர்களாக செயல்படுவதற்கு ஏகமனதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

**நீங்களும்**
**செய்தியாளர் ஆகுங்கள்...**
**செய்திகளைச் சொல்ல**
**075-4252042 இனை**
**அழையுங்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## குர்ஆன் பற்றி நபி மொழிகள் கூறுவதாவது:

1. நிச்சயமாக இந்தக் குர்ஆன் பரிந்துரை செய்யக்கூடியதாகும். அது ஏற்கப்படக்கூடியதுமாகும். அதனைப் பின்பற்றினால் அவரை அது சுவனத்தில் சேர்க்கும். அதனை பின்பற்றாமல் விட்டு விட்டால் அல்லது நிராகரித்தால் அவன் நரகின் அடித்தளத்தில் தள்ளப்படுவான். (அறிவிப்பாளர்: இப்னு மஸ்வூத்(ரலி) – ஆதாரம் : (முஸ்லிம்)

2. குர்ஆனை ஓதி அதன்படி அமல் செய்தவரையும், குர்ஆனையும் நாளை மறுமையில் கொண்டு வரப்படும், குர்ஆனின் இரண்டு அத்தியாயங்கள் அல்பகரா, ஆலஇம்ரான் முன் வந்து அந்த இரண்டையும் ஓதியவருக்காக அல்லாஹ்விடத்தில் வாதாடும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

3. குர்ஆனின் விஷயத்தில் தர்க்கம் புரிவது இறை மறுப்புச் செயலாகும். அறிவிப்பாளர்: அபூஹுரைரா(ரலி) - ஆதாரம் : அபூதாவூத்

4. குர்ஆனைத் தானும் கற்று பிறருக்கும் கற்றுக் கொடுப்பவரே உங்களில் சிறந்தவர். அறிவிப்பாளர்: உஸ்மான்(ரலி) – ஆதாரம் : புகாரி

5. இக்குர்ஆனின் ஒரு முனை அல்லாஹ்வின் கையிலும் மறுமுனை உங்கள் கைளிலும் உள்ளது. எனவே இதனை உறுதியாகப் பிடித்துக் கொள்ளுங்கள் நீங்கள் இம்மையில் வழிதவறமாட்டீர்கள், மறுமையில் அழிவுறவும் மாட்டீர்கள். (அறிவிப்பாளர்: அபூஹுரைரா(ரலி) - ஆதாரம் : தப்ரானி )

6. பேச்சுக்களில் மிகச் சிறந்தது அல்லாஹ்வின் வேதமாகும். வழிகாட்டுதல்களில் மிகச்சிறந்தது முஹம்மது(ஸல்) அவர்களின் பாதையாகும். தீனில் தீமையானது மார்க்கத்தில் புதிதாகப் புகுத்தப்பட்டதாகும். ஒவ்வொரு பித்அத்தும் வழிகேடாகும். (ஆதாரம் : முஸ்லிம்)

7. இவ்வேதத்தைக் கொண்டே அல்லாஹ் சில கூட்டத்தாரை உயர்த்துகிறான். மற்றோரு கூட்டத்தினரை இதனைக் கொண்டே தாழ்த்துகிறான். சமுதாய உயர்வு, தாழ்வுக்கு காரணம் குர்ஆனே. (அறிவிப்பாளர்: உமர்(ரலி) - ஆதாரம் : முஸ்லிம்)

8. குர்ஆனின் சிறு பகுதியேனும் யார் உள்ளத்தில் மனனம் இல்லையோ அவர் உள்ளம் பாழடைந்த வீட்டைப் போன்றது. அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ்(ரலி) – ஆதாரம் : திர்மிதி

## செஞ்சிலுவை இயக்கம்

உலகிலேயே மிகப்பிரசித்தி பெற்ற முதல்தர மனிதாபிமான இயக்கம் செஞ்சிலுவை இயக்கம் ஆகும்.

செஞ்சிலுவை இயக்கத்தின் தந்தை



சர்வதேச செஞ்சிலுவை இயக்கம் தோன்றிய வரலாற்றிலிருந்து நாம் ஆரம்பிப்போம். ஆதற்கு முன் செஞ்சிலுவை இயக்கத்தினைத் தோற்றுவித்த செஞ்சிலுவைத் தந்தையைப் பற்றி அறிந்திருக்க வேண்டியது முக்கியமானதாகும் இன்றுவரை செஞ்சிலுவை இயக்கத்தினைப் பற்றிப் பேசுகிறோமே ஒழிய அவரைப் பற்றி அறிந்து கொள்வதற்கு யாரும் விழைவதில்லை. செஞ்சிலுவை இயக்கத்தினைத் தோற்றுவிப்பதற்கு அன்னார் பட்ட கஷ்டங்கள், இன்னல்கள் இன்று வரை யாரும் அறிந்திருக்கவில்லை.

ICRC

செஞ்சிலுவை இயக்கத்தினைத் தோற்றுவித்த கனவானின் பெயர் ஹென்றி டுனன்ட் என்பதாகும். ஹேன்றி டுனன்ட் பிறப்பில் ஒரு பணக்காரராவார். அவர் சுவிட்சர்லாந்து நாட்டின் ஜெனீவா நகரில் 1828ம் ஆண்டு மே மாதம் 08ம் திகதி பிறந்தார். அவர் கல்லூரிப் படிப்பினை முடித்த பின் தனது இளம் வயதிலேயே வணிகத் துறையில் மிகப் பிரபல்யம் பெற்று விளங்கினார்.

அவரது 30வது வயதில் வியாபார நிமித்தமாக அக்காலத்தில் இத்தாலி நாட்டின் சக்கரவர்த்தியான நெப்போலியன் போனபாட் மன்னரைச் சந்திப்பதற்காக சென்று கொண்டிருந்த போது பிரெஞ்சு நாட்டிற்கும் ஆஸ்திரிய நாட்டிற்குமிடையில் போர் மூண்டிருந்த காலமாகும். அவர் பயணம் செல்லும் வழியில் சொல்பரினோ என்ற இடத்தில் இரு நாடுகளுக்குமிடையில் போர் நடைபெற்றுக் கொண்டிருந்ததைக் காண நேர்ந்தது.

அவ் யுத்த களத்தில் போரில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போர் வீரர்கள் பலர் காயமுற்றதன் பின் கவனிப்பாரற்று இறந்து கொணடிருப்பதைக் கண்ணுற்ற அவர் அவ் வீரர்களைக் காப்பாற்ற அவ் ஊர் மக்களது உதவியை நாடினார். ஆம் மக்களுடன் இணைந்து போரில் காயமுற்றோரில் பலரை இறந்து விடாமல் காப்பாற்றினார். இச் சம்பவம் அவரது மனதில் மிக ஆழமாகப் பதிந்ததுடன் இதற்குத் தன்னால் ஏதாவது செய்ய வேண்டும் எனத் தன் மனதில் ஏற்பட்ட எண்ணத்தினைச் செயற்படுத்த முயன்றார்.

தொடரும்



டாக்டர். என்.ரவிச்சந்திரன்
கிளை நிறைவேற்று அதிகாரி
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
திருகோணமலைக் கிளை



# தக்காளி அவல்

சிறிது அவலை வெறும் வாயில் மென்றாலே அலாதி சுவை தான். அதையே இந்த மாதிரி வித்தியாசமா செஞ்சு சாப்பிட்டா அவல் பிடிக்காதவர்கள்கூட ஒரு பிடி பிடித்து விடுவார்கள்.

தேவையான பொருட்கள்

அவல் - 1 கப், தக்காளி – 1, பச்சைப் பட்டாணி – 1-2 கப் (வேகவைத்தது), கேரட் - 1 சிறியது, பெரிய வெங்காயம் - 1, கறிவேப்பிலை – சிறிதளவு, கொத்தமல்லி – சிறிதளவு, மிளகாய் வத்தல் - 3, பெருங்காயம் - 1 சிட்டிகை, மஞ்சள் - 1-2 தே. கரண்டி, உப்பு - தேவையான அளவு, எண்ணெய் - 4 கரண்டி, கடலைப்பருப்பு - 1 தே. கரண்டி, உளுத்தப்பருப்பு - 1 தே. கரண்டி, கடுகு - 1 தே. கரண்டி,



### செய்முறை


- அவலுடன் மஞ்சள், எலுமிச்சைச் சாறு, உப்பு, சிறிது நீர் சேர்த்து நன்கு கிளறி 10 நிமிடம் ஊறவைக்கவும்.
- பச்சைப் பட்டாணியை வேக வைத்துக் கொள்ளவும்.
- பெரிய வெங்காயம், தக்காளி, கேரட், கறிவேப்பிலை, கொத்தமல்லி ஆகியவற்றை சிறிதாக நறுக்கி வைத்துக் கொள்ளவும்.
- அடுப்பில் தாச்சியை வைத்து எண்ணெயை ஊற்றவும்.
- எண்ணெய் காய்ந்த பிறகு கடுகு, கடலை, உளுத்தம் பருப்பு, காய்ந்த மிளகாய் சேர்க்கவும்.
- பிறகு பட்டாணி, நறுக்கி வைத்த அனைத்தையும் சேர்த்து பச்சை வாடை போகும்வரை வதக்கவும். அதனுடன் பருப்பு, ஊறவைத்த அவலை சேர்த்து நன்கு கிளறவும். பெருங்காயம் சேர்த்து இறக்கவும்.

## கைப்பையினுள் அலங்காரம்

வீட்டினை சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருப்பதில் பெண்களை யாரும் மிஞ்சமுடியாது. அலங்கரிப்பதற்கு அனேகமானோர் மலர்களைத்தான் பயன்படுத்துவார்கள். சிறியதோ பெரியதோ மலர்கள் இல்லாத வீடுகளை காண்பது அரிது.

மலர்களை பார்க்கும்போது எல்லோர் மனதிற்கும் இதமாகவும் இனிமையாகவும் இருக்கும். மலர் என்றால் கட்டாயமாக அழகான சாடியினுள் அடுக்கி அழகு பார்பார்கள்.

பூச்சாடியினுள் மலர்களை வைக்காமல் மற்றவர்கள் பார்த்து பிரமிப்படையும் வண்ணம் மலர்களை ஒழுங்குபடுத்துவது பிடித்தமானதாக இருக்கும். கைப்பையினுள் மலர்களை காட்சிப்படுத்தி பாருங்கள் எல்லோரும் பிரமித்து போவர்கள்.



## முகப்பரு தொல்லை நீங்க

- உணவில் கீரை மற்றும் காய்கறிகளை அதிகம் சேர்த்துக்கொள்ளுங்கள்.
- முகத்தில் தோன்றும் பருக்களை ஒரு போதும் கிள்ளாதீர்கள். இது முகத்தில் வடுக்களை ஏற்படுத்துவதோடு பருக்களை மேலும் அதிகரிக்க வழி செய்கிறது.



- கொழுப்பு அதிகம் உள்ள பொருள்கள், அசைவம், எண்ணெய் பொருள்கள் போன்றவற்றை முடிந்தவரை குறைத்துக்கொள்ள வேண்டும்.
- சோப்புக்குப் பதிலாகப் பச்சைப் பயிறு மாவைத் தேய்த்துக் குளிக்கலாம்.
- குளிக்கும் நீரில் வேப்பிலைகளைப் போட்டுக் குளித்தாலும் கிருமிகளைத் தவிர்க்கலாம்.
- வீட்டிலேயே பேஷியல் செய்து கொள்வது நல்லது. உங்கள் தோலுக்கு உகந்த பேஷியல் கிரீம் எதுவென்று டாக்டரிடம் விசாரித்து அதைப் பயன்படுத்தலாம்.
- எண்ணெய் வடியும் முகம் உள்ளவர்களுக்கே முகப்பரு வரும். அடிக்கடி குளிர்ந்த நீரால் முகத்தைத் துடைத்துக்கொள்வது நல்லது.



- மலச்சிக்கல் இருந்தாலும் பருக்கள் வரும். அதனால் மலச்சிக்கல் இல்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.
- தூசு நிறைந்த பகுதியில் வாகனத்தில் செல்ல நேர்ந்தால் முகத்தை மெல்லிய பருத்தித் துணியால் மூடிக்கொள்ளுங்கள்.

பொதுவாகவே கஸ்தூரி மஞ்சள், நன்னாரி வேர், எலுமிச்சை தோல், ஆரஞ்சு தோல், பயத்தம் மாவு, கடலை மாவு, சீயக்காய் ஆகிய வற்றைக் கலந்து அரைத்து வைத்துக் கொண்டு சோப்பயன்படுத்துவதற்குப் பதிலாகப் பயன்படுத்துவது நல்ல பலனை அளிக்கும்.

## ஹப்பி குடும்ப வாழ்க்கைக்கு

உங்களுடைய துணைவரிடம் நல்ல குணங்கள் இருக்கும்போது அதை கண்டுகொள்ளாமல், குறைபாடுகளை மட்டும் பெரிதாக்குவதை தவிர்க்க வேண்டும்.

கடந்த வார தொடர்ச்சி

இருவரது குறைபாடுகளையும் பரஸ்பரம் ஏற்றுக் கொண்டு அதற்கு நல்லதோர் தீர்வு காணலாம்.

மது, போதை மருந்து, புகையிலை, பான்பராக் போன்ற லாகிரி வஸ்துக்கள் எல்லாமே குடும்ப வாழ்க்கையை சிதைக்கும் தன்மை கொண்டவை. சுகத்தை விட இதில் சோகமே அதிகம்.

அதேபோல், வரவுக்கேற்றபடி செலவு செய்ய இருவரும் முன்வர வேண்டும். செலவுகளை கட்டுப்படுத்தவும் முயற்சிக்கவும். மாதந்தோறும் பட்ஜெட் தயார் செய்து தேவையற்ற செலவுகளை கட்டுப்படுத்துவது நல்லது.

பெரும்பாலான குடும்பங்களில் பிரச்சினைகள் உருவாக பெரியவர்களும் முக்கிய காரணம்.

சுதந்திரமாக இருக்கும் இன்றைய தலைமுறையை பெரியவர்கள் சிலர் தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் கட்டுப்படுத்த நினைப்பதை தவிர்க்க வேண்டும்.

பெற்றோர் மற்றும் உறவினர்கள் குதர்க்கமான பேச்சு மூலம் தம்பதிகளுக்குள் பிரச்சினைகளை உருவாக்கக் கூடாது.

சந்தேகம், முன் கோபம், மது அருந்துதல் போன்றவை பிரச்சினை என்ற தீயில் மேலும் எண்ணையை ஊற்றுவது போல் ஆகிவிடும். இதற்கு கவுன்சிலிங் சிகிச்சை எடுத்துக் கொள்வது நல்லது.

எந்த செயலாக இருந்தாலும் எல்லோரும் ஒன்றாக அமர்ந்து பேசி, அதை செயல்படுத்தினால் பிரச்சினை ஏற்படாது. அதேமாதிரி, எந்தப் பிரச்சினை ஏற்பட்டாலும் அனைவரும் அமர்ந்து பேசினால் பிரச்சினையை சமாளிக்க முடியும்.

உடல்நிலையில் பாதிப்பு ஏற்படும்போது காட்டும் விசேஷ அக்கறை, தம்பதிகளுக்குள் ஒரு நல்ல இணக்கமான சூழ்நிலையை எற்படுத்தும்.

திருமணம் செய்துவிட்டு வெளிநாட்டுக்கு வேலைக்கு செல்வோர், தங்களுடைய மனநிலையை மேம்படுத்துவது நல்லது. வெளிநாட்டில் இருக்கும் போது தன்னுடைய மனைவியை யாராவது தவறாக சொன்னால் அதை நம்பி, தன்னுடைய வாழ்க்கையை பலி கொடுக்கத் துணிவது நல்லதல்ல.

இப்போது 65 சதவீதம் பேர் செக்ஸ் விஷயத்தில் முழுமையானவர்களாக இல்லை. இதனால் ஏற்படும் தவறான கருத்துகளும் குடும்ப வாழ்க்கைக்கு உலை வைத்துவிடும். எனவே குடும்ப வாழ்க்கையை தொடங்கும்போது, செக்ஸ் குறித்த முழுமையான அறிவு அவசியம்.

முற்றும் .. ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமம்-கிராமமாக வீடு-வீடாக அபிவிருத்தித்திட்டம்



(ஆலையடிவேம்பு நிருபர்)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 'கிராமம் கிராமமாக – வீடு வீடாக' அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஆலையடிவேம்பு கிராமசேவகர் பிரிவுக்கான நடமாடும் சேவையானது, 20-03-2014 வியாழக்கிழமை ஆலையடிவேம்பு திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் நடைபெற்றபோது பிரதேச செயலாளர் வே.ஜெகதீசன் கலந்துகொண்டிருந்தார். மாணவர் ஆக்கத்திறனுக்கு அவர் பரிசில்களையும் வழங்கி வைத்தார்.

# யாருக்கு ?



ஜெனிவாவில் யாருக்கு வேலை செய்கின்றாய்? வெளிநாடுகளில் யாருக்கு செய்திகளை விற்கின்றாய்? என்று "யாருக்கு" என்ற கேள்விகளே காவல்துறைத் தலைமையகத்தில் தன்னிடம் கடுமையாகக் கேட்கப் பட்டதாக கைதுசெய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட மனித உரிமை ஆர்வலரான ருகி பெர்ணாண்டோ சின்னன் என்ற செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

"இலங்கைக்குள் என்ன நடக்கின்றது? என்பதைப்பற்றி வெளிநாடுகளில் உள்ளவர்களுக்குத் தெரியக் கூடாது என்பதில் அரசு தெளிவாக இருப்பது தெரிகின்றது" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## முன்னாள் பி.கா.மா.அ வின் ஆயுதக் கிடங்கு



கொலைக் குற்றச்சாட்டில் கைதாகி கடுமையான விசாரணைகளுக்கு முகம் கொடுத்துள்ள முன்னாள் பிரதிக் காவல் மா அதிபர் வாஸ் குணவர்த்தனவினால் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஆயுதக் கிட்டங்கியொன்றை காவல்துறையினர் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாயுதக் கிடங்கில் இருந்து சிறு ஆயுதங்கள் தொடக்கம் கனரக ஆயுதங்களும் மீட்கப்பட்டுள்ளன. பிஸ்டல் ரக கைத்துப்பாக்கிகள், ரி-56 ரக இலகு எந்திரத் துப்பாக்கிகள், கையெறிகுண்டுகள் உட்பட ஆர்.பி.ஜி ரக உந்துகணைகளும், மேற்சொல்லப்பட்டவற்றிற்கான இரவைகளும் மீட்கப்பட்டுள்ளன.

# சர்வதேசச் செய்திகள்

## கடற்படைத்தளத்தினுள் இரஸ்யர்கள்

க்ரைமியாவை ரஸ்யா தன்னுடன் இணைக்க நடவடிக்கை எடுத்த மறுதினம், செவஸ்டோபோலில் உள்ள க்ரைமிய துறைமுகத்தின் யுக்ரெய்னிய கடற்படைத்தளத்தினுள் பல நூற்றுக்கணக்கான ஆயுதந்தாங்கிய ரஸ்ய ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர்கள் அதிரடியாக நுழைந்துள்ளனர்.

உக்ரெய்னிய கடற்படையினர் அந்தக் கடற்படைத்தளத்தை விட்டு வெளியேற வேண்டும் என்று கேட்பதற்காக அவர்கள் அங்கு சென்றதாக நம்பப்படுகின்றது.

ரஸ்யக் கொடிகள் அங்குள்ள கட்டிடங்களில் பறக்கின்றன. க்ரைமியாவில் ஒரு ஆயுத மோதல் ஏற்படுவதைத் தடுப்பதற்காக அங்கு இரு அரசாங்க அமைச்சர்கள் செல்வதாக உக்ரெய்ன் கூறுகின்றது.

ஆனால், அவர்களை அங்கு அனுமதிக்க மாட்டோம் என்று ரஸ்ய ஆதரவிலான அரசாங்க அதிகாரிகள் கூறியுள்ளனர்.

## முஸ்லிம் இனத்தவரிடையே மோதலை உருவாக்கும் அலைவரிசைகள்

உலகெங்கும் நடத்தப்படுகின்ற சில தீவிரவாத தொலைக்காட்சிகளில் பரப்பப்படும் தகவல்களால் ஈராக்கிலும், எகிப்திலும் முஸ்லிம்கள் இடையே நடக்கும் வகுப்புவாத மோதல்கள் தீவிரமாகத் தூண்டப்படுகின்றன.

சுன்னி மற்றும் ஷியா முஸ்லிம்கள் மத்தியில் காணப்படுகின்ற முரண்பாடுகள் அதிகரித்துவரும் நிலையில், இவர்களுக்கு இடையே இந்தப் பிராந்தியத்தில் நடக்கும் மோதல்களால் லட்சக் கணக்கானோர் உயிரிழந்திருக்கிறார்கள்.

இந்த வகுப்புவாத முரண்பாடுகள் எகிப்து, அமெரிக்கா மற்றும் பிரிட்டனில் இருந்து இயங்கும் தொலைக்காட்சிகளில் தோன்றும் தீவிரவாத மதகுருமாரின் வீராவேசப் பேச்சுக்களால் மேலும் மேலும் தூண்டப்படுகின்றன.

பிரிட்டன், எகிப்து மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் இருந்து ஈராக் மற்றும் சிரியா போன்ற நாடுகளுக்கு இந்த தொலைக்காட்சிகள் செய்மதி மூலம் ஒளிபரப்புகின்றன.

# உடன்படாவிட்டால் வல்லுறவு தமிழ்ப் பெண் சிப்பாய் - அப்படி எதுவும் இல்லை இராணுவம்

தமிழ்ப் பெண் இராணுவத்தினர் பயிற்சிகளின் போது பாலியல் வல்லுறவிற்கு உள்ளாவதாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் உதயன் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த 18ம் திகதி வெளியிடப்பட்ட இந்தச் செய்தியில் இராணுவத்தில் சேர்ந்த பின் பத்திற்கும் மேற்பட்ட சிங்கள இராணுவப் படை அதிகாரிகளாலும், சாதாரண கோப்றல் தர இராணுவத்தாலும் தான் பாலியல் வல்லுறவு செய்யப்பட்டதாகத் தெரிவித்துள்ளார் 23 வயதான இளம் தமிழ் இராணுவப் பெண்.

தான் இராணுவத்தில் சேர்ந்த பின் தன்னையும் தன்னைப் போன்ற மற்றைய தமிழ்ப் பெண்களையும் முறை வைத்து இரவில் உயரதிகாரிகளின் பாலியல் தேவைக்காக அனுப்பப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். தாங்கள் அதற்கு உடன்படாத சந்தர்ப்பங்களில் தாங்கள் தாக்கப்பட்டதாகவும் தங்களில் சிலர் கருத்தரித்து பின்னர் அது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு கலைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். அத்துடன் அங்கு சிங்களப் பெண் இராணுவச் சிப்பாய்களும் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாவதாகவும் அவர் தெரிவித்துள்ளர். அத்துடன் ஒரு தமிழ் பெண் சிப்பாய் இராணுவத்தில் இருந்து விலகி ஓடிய போது அவர் பின்னர் பிடிக்கப்பட்டு கடுமையான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு பின்னர் காணாமல் போயுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் இக்குற்றச்சாட்டுக்களை வன்மையாக மறுத்துள்ள இராணுவம் தமிழ் பெண் சிப்பாய்கள் மீது இராணுவ உயர் அதிகாரிகளால் பாலியல் வன்புணர்வு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக வெளியான செய்திகளை இலங்கை பாதுகாப்பு அமைச்சு முற்றாக மறுத்துள்ளது. தமிழ் பெண் சிப்பாய்கள் பாலியல் ரீதியாக இம்சிக்கப்படுவதாகவும் இதனால் அவர்கள் கருக்கலைப்பு செய்யும் அளவிற்கு சென்றுள்ளதாகவும் பாலியல் இம்சைகள் காரணமாக ஒரு சிப்பாய் காணாமற்போயுள்ளதாகவும் இணையங்களில் தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்த செய்திகளில் எந்த வித அடிப்படை உண்மையும் இல்லை என பாதுகாப்பு அமைச்சு மறுத்துள்ளது. இவை யாவும் திட்டமிட்டு படையினர் மீது அவதூறு பூசும் முயற்சிகளே எனவும், ஒரு போதும் படையினர் பெண் சிப்பாய்கள் மீது பாலியல் சார் இம்சிப்புக்களில் ஈடுபடுவதில்லை என்றும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

# மலேசிய விமானி இலங்கையில் இறங்குவது தொடர்பாகப் பயிற்சி

ஆச்சரியம் அளிக்கும் வகையில் காணாமற் போயுள்ள மலேசிய விமானம் கடத்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தை அடுத்து அவ் விமானத்தில் பணியாற்றியவர்கள் மற்றும் பயணம் செய்தவர்கள் தொடர்பாகத் தனித்தனி விசாரணைகளை மலேசிய மற்றும் சர்வதேசக் காவல்துறை முன்னெடுத்துள்ளது.

இவ்விசாரணையின் போது அவ்விமானத்தை ஓட்டிச் சென்ற பிரதான விமானியின் வீட்டில் பயிற்சி விமான அறையொன்றைக் கண்டு பிடித்த காவல்த்துறை அப் பயிற்சி விமான அறையில் ஐந்து விமானத்தளங்களின் மாதிரிகளில் விமானத்தை இறக்குவது தொடர்பாக அவ்விமானி பயிற்சியெடுத்துள்ளதைக் கண்டுபிடித்துள்ளது.

அவற்றுள் இலங்கையின் விமான ஓடுபாதை மாதிரியும் அடங்கியிருந்தமை வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

# பிக்குவின் பிறந்த தினம் கேக் வெட்டி கொண்டாட்டம்



தான் பூரணத்துவம் அடைந்து விட்ட தாகத் தெரிவித்துச் சர்ச்சையை உண்டாக்கிய பௌத்த பிக்கு பிட்டிதுவே ஸ்ரீ தம்ம தேரர் தனது பிறந்த நாளையொட்டி மிகப் பெரிய கேக்கை வெட்டித் தனது ஆதரவாளர்களுக்கு வழங்கி மீண்டும் சர்ச்சையினை ஏற்படுத்தியுள்ளார்.



அவ்வாறு கேக் வெட்டித் தனது ஆதரவாளர்களுக்குக் கொடுப்பது ஒருவகைத் தானம் எனத் தெரிவித்துள்ள அவர் அந்தப் பெரிய கேக்கை உருவாக்குவதற்குத் தேவையான நிதியினைத் தமது ஆதரவாளர்களே திரட்டியதாகவும் தெரிவித்துள்ளார்.

# ஆலையடிவேம்பில் சிறுபோக நெற்செய்கைக் கூட்டம்

ஆலையடிவேம்பு பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட விவசாய நெற் செய்கையாளர்களின் நீர் மற்றும் ஏனைய தேவைகளை தீர்த்துவைப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஆரம்பக் கூட்டமானது கடந்த (14) வெள்ளிக்கிழமை பிரதேச செயலாளர் வே.ஜெகதீசன் தலைமையில் பிரதேச செயலக கலாச்சார மண்டபத்தில் இடம்பெற்றபோது நீர்பாசன பொறியியலாளர் செ.சுபாஹரன் உட்பட தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், பெரும்போக உத்தியோகத்தர்கள், விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள், கண்டங்களின் பிரதிநிதிகளென அதிகளவிலானோர் கலந்துகொண்டனர். (உதயகாந்)



# இந்தோனேசிய பணிப்பெண்கள் தொடர்பாக ஒப்பந்தம்

மாதவேதனம், விடுமுறை மற்றும் உறவினர்களுடன் தொலைபேசித் தொடர்பு போன்ற வேலையாட்களின் உரிமைகள் தொடர்பான ஒப்பந்தமொன்றில் இந்தோனேசியாவும் சவூதி அரேபியாவும் ஒப்பந்தமொன்றைச் செய்துள்ளன.

இந்தோனியப் பணிப்பெண்கள் சவூதியில் எதிர்நோக்கிவந்த பிரச்சனைகளைத் தீர்க்கும் முகமாகவே இவ்வொப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது.

# நேட்டோ கணனிகளைத் தாக்கிய "ஹக்கர்ஸ்"

கடந்த சனிக்கிழமை நேட்டோவின் கணனி வலைப் பின்னலுக்குள் புகுந்து நேட்டோவின் பல இணையத்தளங்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர கணனி ஊடுருப்பாளர்கள் முயன்றுள்ளனர்.

எனினும் அவர்களது தாக்குதல் வெற்றியளிக்கவில்லை என நேட்டோ தெரிவித்துள்ளது. இத்தாக்குதலை இரஸ்ய கணனி ஊடுருப்பாளர்கள் நடாத்தியதாக தகவல் வெளியாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கங்குவேலி அகத்தியர் ஸ்தாபன கட்டுமாணப்பணிக்கு தேரர் எச்சரிக்கை

வரலாற்றுச் சிறப்புவாய்ந்ததும், போரினால் முற்றாகச் சேதமடைந்ததுமான கங்குவேலி அகத்தியர் ஸ்தாபனத்தைப் புணரமைக்கும் நடவடிக்கைக்கு தெஹிவத்தை தேரரால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அக்கோவிலில் பணியாற்றவென மட்டக்களப்பில் இருந்து வந்து தங்கியிருந்த குருக்கள் 13



## மலைமுரசின் விளம்பரக் கட்டணம்

| அளவு | - முன்புறம் | - பின்புறம் |
|---|---|---|
| A 7 | - 650.00 | 500.00 |
| A 6 | - 1175.00 | 975.00 |
| A 5 | - 2200.00 | 1900.00 |
| A 4 | - 4150.00 | 3800.00 |
| A 3 | - 7950.00 | 6950.00 |
| அளவு | - பக்கம் 02 - | பக்கம் 15 |
| A 7 | - 350.00 | 200.00 |
| A 6 | - 575.00 | 475.00 |
| A 5 | - 1100.00 | 900.00 |
| A 4 | - 1950.00 | 1500.00 |
| A 3 | - 3450.00 | 2950.00 |

ஏனைய பக்கங்கள் - ரூ.18 சதுர அங்குலம்


# ஒய்வூதியப் பணிக்கொடை நிறுத்தம்?

115 வருடங்கள் பழமை வாய்ந்த அரச ஊழியர்களுக்கான ஓய்வூதியப் பணிக் கொடையினை இல்லாதொழிக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தேசிய தொழிற்சங்கச் சம்மேளனம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கம் உடன் அமுலுக்கு வரும் வகையில் இந் நடவடிக்கையை முன்னெடுக்குமாறு அரச வர்த்தமானி இலக்கம் 02-2014 தெரிவிப்பதாக அச்சங்கம் தெரிவித்துள்ளது.

இளைப்பாறும் அரச 13



## கல்லடி கோவிலில் திருட்டு

(மட்டக்களப்பு சுழற்சி நிருபர்)

கடந்த சில நாட்களாக இலங்கையின் பல பாகங்களிலும் ஆலயங்களில் பல கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுவருகின்ற நிலையில் அண்மையில் கல்லடி புனித இஞ்ஞாசியார் ஆலயத்திலும் திருட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இவ்வாலயத்தின் அருட்தந்தை இல்லாத நேரம்பார்த்து கடந்த வியாழக்கிழமை நண்பகல் 1.00 மணியளவிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆலயத்தின் அன்றாட திருப்பலி நிகழ்வுகளிற்காக பயன்படுத்தும் சுமார் ஒரு லட்சம் பெறுமதி வாய்ந்த ஒலிபெருக்கி சாதன தொகுதியே கொள்ளையிடப்பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை காத்தான்குடி காவல்துறை மேற்கொண்டு வருகின்றனர்.



## மாகாணசபையில் மூவரின் உறுப்புரிமை காப்பாற்றப்பட்டது

(பஹ்மி யூஸுப்)

கிழக்கு மாகாணசபை உறுப்பினர் திரு.தயாகமகே (ஐ.தே.கட்சி), ஜெமில் (முஸ்லிம் காங்கிரஸ்), பிரியந்த பத்திரன (சி.சு.கட்சி) ஆகிய மூன்று உறுப்பினர்கள் 90 நாட்கள் தொடர்ச்சியாக கிழக்கு மாகாண சபைக் கூட்டங்களில் கலந்து கொள்ளாமையினால் இம் மூன்று உறுப்பினர்களின்......... 13



## தேடப்படுகின்றனர்



WANTED

தேவைப் படுகின்றனர்

கோபி - கசியன் நவனீதன்-அப்பன்

[illegible]

தொலைபேசி இலக்கம் - 0113135680 0766911617

## மகாதேவா ஆச்சிரமத்தில் விபூஷிகா?

விடுதலைப் புலிச் சந்தேகநபருக்கு அடைக்கலம் கொடுத்தார்கள் என்ற குற்றச்சாட்டில் தாய் கைதாக அனாதரவாக விடப்பட்ட திருகோணமலைக் குழந்தையான விபூஷிகா நீதிமன்ற உத்தரவின் பேரில் வவுனியாவில் வைத்து கன்னியாஸ்திரிகளிடம் கையளிக்கப்பட்டிருந்தார்.

தற்போது அவர் கிளிநொச்சியில் உள்ள மகாதேவா ஆச்சிரமத்தில் இருப்பதாகவும் கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் கல்வி கற்பதற்கான ஏற்பாடுகளுக்கு அமைய கல்வி கற்றுக்கொண்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் அவரை வேற்றாட்கள் சந்திப்பதற்குப் பாதுகாப்புத்தரப்பு தடைவிதித்திருப்பதுடன் பாடசாலையிலும் எவரும் சென்று சந்திக்காத வண்ணம் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.



திருகோணமலை அரசடிச் சந்தியில் மின் ஒழுக்கினால் ஏற்பட்ட தீவிபத்தை அடுத்து 2 கடைகளும் வீடுகளும் முற்றாக அழிவடைந்துள்ளன.

கடந்த 21ம் திகதி இரவு 11.30 மணியளவில் இத் தீவிபத்து ஏற்பட்டது.

(படங்கள்-அருணன்)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org